General 29000 தமிழ் 4187 R65 G5

உ

ஸ்ரீகுருவேநம:

# பஞ்சதசப்பிரகரணம்.

வித்தியாரண்யசுவாமிகள்
சமஸ்கிருதத்திலருளிச்செய்தபடி
தமிழில் மொழிபெயர்த்தது,

இஃது
களத்தூர்-வேதகிரிமுதலியாரால் பதிப்பித்த அச்சுப்பிரதி
யையும் பலவேட்டுப்பிரதிகளையுங்கொண்டு
திருவனந்தபுரம்
விஜயராகவசாஸ்திரியார்
முன்னிலையில் ஆராய்ச்சிசெய்வித்து
கண்டிவாக்கம்
சண்முகமுதலியாரவர்களால்
பார்வையிடப்பட்டு.

புரசபாக்கம்
ஏழுமலைப்பிள்ளையவர்களது
விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

யுவ ௵.

# அட்டவணை.


| | | |
|---|---|---|
| முதல், | சித்திரதீபிகை ... ... ... | க |
| உ | திர்ப்திதீபிகை ... ... ... | உக |
| ங | கூடஸ்ததீபிகை ... ... ... | சக |
| ச | தியானதீபிகை... ... ... | சகூ |
| ரு | நாடகதீபிகை ... ... ... | கூ௰ |
| சா | தத்வாதத்வவிவேகம் ... | கூங |
| எ | பஞ்சபூதவிவேகம் ... ... | கூகூ |
| அ | பஞ்சகோசவிவேகம்... ... | எரு |
| கூ | துவிதவிவேகம் ... ... ... | எஎ |
| ௰ | மகாவாக்கியவிவேகம் ... | அங |
| ௰க | யோகானந்தம் ... ... ... | அச |
| ௰உ | ஆத்மானந்தம் ... ... ... | கூ௰ |
| ௰ங | அத்துவிதானந்தம் ... ... | கூகூ |
| ௰ச | வித்தியானந்தம் ... ... | ௱௰ங |
| ௰ரு | விஷயானந்தம் ... ... ... | ௱௰ச |

உ

கடவுள் துணை.

# பஞ்சதசப்பிரகரணம்.

முதலாவது,

4187.

## சித்திரதீபிகை.

வித்தியாரண்ணிய ஸ்வாமிகள் லோகானுக்கிரக நிமித்தியமாக சகல வேதாந்தத்தினுடைய பொருள்களெல்லாம் மனதிலே சேகரித்துக்கொண்டு சகல வேதாந்தமெல்லாம் அதிகரிக்கமாட்டாதபேருக்கு மெளிதாக வேதாந்தத்தினுடைய உண்மைப்பொருள்களைக்கண்டு அனுபவித்து மோட்சமடையத்தக்கதாக சகல வேதாந்த சம்மதப்படிக்குத் தம்முடைய மனதிலேயிருக்கின்ற பிரமானுபவத்தைப் பஞ்சதசப் பிரகரணத்தினாலே வெளிபண்ணவேண்டுமென்று பதினைந்துபிரகரணத்திற்குள் முந்தின பிரகரணத்தினாலே அத்தியாரோபம் அபவாதமென்கிற இரண்டு நியாயத்தையுங் கழுவிக்கொண்டு பரமாத்தாவின் இடத்திலே ஆரோபிக்கப்பட்டிருக்கின்ற செகத்தினுடைய லட்சணம் சித்திரமேயல்லாமல் உண்மையல்லவென்கிறதைச் சித்திரபட திருஷ்டாந்த முன்னிலையாக வெளிபண்ணினபடி புடவையினிடத்திலே சித்திரம் ஆரோபிக்கப்பட்டாப்போலே பரமாத்மாவாகவிருக்கின்ற தன்னுடைய ஸ்வரூபத்திலே சீவன் செகத்து ஈஸ்வரன் என்னப்பட்ட சித்திரம் ஆரோபிக்கப்பட்டதென்றறிக.

சங்கை. சித்திரப்படந்தானே தானாகவிருந்தால் வெளுத்தபடமென்றும் கஞ்சிபூசினால் பசைப்படமென்றும் கரியால் சித்திரம் அச்சுக்கட்டினால் லாஞ்சனபடமென்றும் வர்ணம் அடைத்துத்தீர்ந்தால் ரஞ்சிதபடமென்றுங் கண்டாப்போலே பரமாத்மாவிற்கு நாலுவித அவஸ்தை ஏது அதற்கு உபாதியேதென்னில்,

உத்தரம். பரமாத்மா ஒருபாதியுமற்றுத்தாமாயிருக்கும்போது சித்தென்றும், மாயையினுடனேகூடினால் அந்தரியாமியென்றும், சமஷ்டி சூட்சுமபூத சூட்சுமசரீரத்துடனேகூடினால் இரணியகெர்ப்பமென்றும், சமஷ்டிஸ்தூல பூதஸ்தூல தேகத்துடனேகூடினால் விராட்புருஷனென்றும் சொல்லப்படும்.

ச-கை. பரமாத்மாவே சித்திரபடம் ஆனாலதைப்பற்றி யிருக்கின்ற சித்திரபேதங்கள் ஏதென்னில்,

உ-ம். பிரமாதிஸ்தம்பபரியந்தம் உத்தமம் மத்திமம் அதர்மமாய்க் காண்பிக்கின்ற பிராணிகளும் மலை ஆறுகோபுரமுதலான சடங்களும் சுபாவ சைதன்னியபத்தினிடத்திலே மாயையாகின்ற வர்னத்தினால் கற்பிக்கப்பட்ட சித்திரமேயாம்.

ச-கை. இதுவே சித்திரமானால் சேதனம் அசேதனமென்று இருவகுப்பாயிருக்க கணக்கில்லையேயென்னில்,

உ-ம். படத்தில் ஆபாசமெழுதியிருக்கின்றாப்போல சைதன்னிய சித்திரத்திலே பிராணிகள் மாத்திரத்திற்குச் சிதாபாசர் கற்பிக்கப்பட்டார்கள் இவர்கள் சாட்சாத்சைதன்னியமுமல்ல.

ச-கை. மலை ஆறு கோபுரமுதலானவைகட்குச் சிதாபாசத்வம் ஏன் இல்லையென்னில்,

உ-ம். சித்திரத்திற்பருவதமுதலானவைகட்கு வஸ்திராபாசந் தேவையற்றதுபோல சிருஷ்டியிலேயகப்பட்ட மண்முதலானவைகட்கு சிதாபாசத்வந்தேவையில்லை.

ச-கை. பிராணிகள் மாத்திரத்திற்குச் சிதாபாசர் கற்பனைக்குப் பிரயோசனமேதென்னில்,

உ-ம். நால்வகை சரீரங்களையடைந்து சனனமரணாதி சம்சாரநிருவகிக்கின்றதே பிரயோசனம்.

ச-கை. இப்படி சிதாபாசனுக்கே சம்சாரமானால் சகலவாதிகளும் லௌகீகரும் ஆத்மாவிற்கே சம்சாரமென்றுசொல்லக் காரியமேதென்னில்,

உ-ம். ஆபாசப்புடவையின் வர்னத்தை அதிஷ்டானப்புடவையின் வர்னமாகச் சொல்லுகின்றாப்போல ஆபாசன் சம்சாரத்தை அதிஷ்டானத்திலே சுமத்துகின்றதற்கு அஞ்ஞானமே காரணம்.

ச-கை. அந்த அஞ்ஞானத்திற்கு லட்சணம் ஏதென்னில்,

உ-ம். தன்னிடத்திற் கற்பிக்கப்பட்ட சிதாபாசனையும் அவன் சம்சாரத்தையும் தன்னுடைய சுபாவமென்கின்ற மயக்கமே அஞ்ஞானம்.

ச-கை. அந்த அஞ்ஞானத்தைப் போக்குதற்குபாயமேதென்னில்.

உ-ம். தனக்கு ஒருக்காலும் சம்சாரமில்லை, சம்சாரமும் சம்சாரியும் கற்பிதமென்கிற விவேகமே அஞ்ஞானத்தைத் தள்ளுதற்கு உபாயம்.

ச-கை. அந்த உபாயம் எதுசெய்தால் வருமென்னில்.

உ-ம். சீவன்செகத்து பரமாத்மாக்களை குருசன்னிதானத்தில் பலப்பட விசாரிக்கவேண்டும் அப்போது விவேகம்வரும்.

ச-கை. மோட்ச அவத்தையில் மலமாக மிஞ்சிப்போகின்ற பரமாத்மாவையே விசாரிக்கவேண்டும் அல்லாமல் வந்தியாபுத்திரனைப்போலிருக்கின்ற சீவனையும் செகத்தையும் விசாரிக்கக் காரியமேதென்னில்,

உ-ம். ஏகீபாவமாயிருக்கின்ற பரமாத்மாவினிடத்திலே ஒருவிசாரமுமில்லை, விசாரமெல்லாம் சீவன்செகத்துக்களிலே தானே நுண்மையாக விசாரிக்கில் இருவகையும் வாதிக்கப்பட்டவுடனே பரமாத்மாவே தானாகமிஞ்சும்.

ச-கை. விசாரித்த ஞானிகட்கு சீவன் செகத்து வாதிக்கப்பட்டால் திரும்பவும் விவகாரந்தோன்றுவானேனென்னில்,

உ-ம். சுழுத்தியில் சீவன் செகத்துத் தோற்றாமலிருக்கையினாலும் இது முத்தியல்லாமலிருக்கையில் தோற்றாமல் போகின்றது வாதையல்ல, இந்த இருவகையும் மித்தையென்கிற நிச்சயமே வாதை.

ச-கை. இந்த இருவகையுந்தோற்றுமானால் பரமாத்மாமாத்திர மிஞ்சப்போகின்றது எப்படியென்னில்,

உ-ம். பரமாத்மாமாத்திரம் அழிவற்ற உண்மைப்பொருளென்கின்ற நிச்சயமே மிஞ்சுகின்றது, செகத்து மறைகின்றதல்ல, செகத்தில்லாதிருந்தால் சீவன் முத்திகூடாது.

ச-கை. இந்த மூவகையும் எத்தனைகாலம் விசாரிக்கவேண்டுமென்னில்,

உ-ம். விசாரத்தினால்வந்தஞானம் பரோட்சஞானமென்றும், அபரோட்ச ஞானமென்றும் இருவகையாகவிருக்கும். இதில் அபரோட்சஞானம்வந்தால் விசாரத்திற்குமுடிவு.

ச-கை. இந்த இருவகைஞானத்திற்கும் லட்சணமேதென்னில்,

உ-ம். பிரமமொன்றுண்டென்கிறது பரோட்சஞானம, நானே அந்தப் பிரமமென்கின்றதுணிவு அபரோட்சஞானம்.

ச-கை. இந்தபரோட்சஞானத்தை வருவிக்கின்றவிசாரமேதெனில்,

உ-ம். கடாகாயம்-மகாகாயம்-சலாகாயம்-மேகாகாயம்போல கூடஸ்தனையும்-பிரமத்தையும்-சீவனையும்-ஈஸ்வரனையும் பகுத்தறிகின்றதே விசாரம்.

ச-கை. கடாகாயமும் மகாகாயமுங்கண்டோம், சலாகாயத்திற்கும், மேகாகாயத்திற்கும் லட்சணமேதென்னில்,

உ-ம். கடசலத்திற் பிரத்தியட்சமாக மேகாட்சத்திரங்களுடனே

காண்பிக்கின்ற ஆகாயம்-சலர்காயம்-மகாகாயத்தின் மேகசுலத்திலே அனுமானத்தினல் கண்ட பிரதிவிம்வமே மேகாகாயம்.

ச-கை. கூடஸ்தர்முதலான நாலு சைதன்னியத்தையும் பகுத்துக்காட்டவேண்டுமென்னில்.

உ-ம். நிருவிகாரமாகவிருக்கின்ற அதிஷ்டான சைதன்னியமே சரீரத்தில் வளைபட்டது கூடஸ்தரொன்றும், மற்றது பிரமமென்றும், கூடஸ்தரிடத்திலே கற்பிதமான அந்தக்கரணப் பிரதிவிம்பன் சீவனென்றும், பிரமத்திற் கற்பிதமான மாயாபிரதிவிம்பன் ஈஸ்வரனென்றும் சொல்லப்படும்.

ச-கை. சரீரத்திலே நானென்று விவகரிக்கிற சீவனைத்தவிர வேறே கூடஸ்தர் எங்கேயென்னில்,

உ-ம். ஜிலாகாசத்தினலே கடாகாச மறைபட்டாற்போலச் சீவனலே கூடஸ்தருமறைபட்டு இரண்டுமொன்ருகத் தோற்றுகின்றது.

ச-கை. இந்தச்சீவன் கூடஸ்தனை யேன் பகுத்தறிய வில்லையென்னில்,

உ-ம். அதுவே மூல அஞ்ஞானம்.

ச-கை, இந்த அவித்தை யெத்தனைவிதமாயிருக்குமென்னில்,

உ-ம். ஆவரணமென்றும் விட்சேபமென்று மிரண்டுவிதமா யிருக்கும்.

ச-கை. அந்த இருவகைக்கும் லட்சணமேதென்னில்,

உ-ம். நான் கூடஸ்தனைக் காணேனென்கிற அறிவாகவிருந்தும் கூடஸ்தர் தோற்றவில்லையென்கிற மயக்கமே யாவரணம்- கிளிஞ்சலை வெள்ளியென்று பார்க்கிறதுப்போல சுபாவ சைதன்னியமாயிருக்கிற தன்னைக் கற்பிதமாயிருக்கிற அகங்காரியாய்க் காண்கிறதே விட்சேபம்.

ச-கை. ஆதித்தனிடத்திலே யிருளிராததுபோல சுயம்பிரகாசமாயிருக்கிற ஆத்மாவிலே அப்பிரகாசமாயிருக்கிற அஞ்ஞானம் வரக்கணக்கில்லையே இது நமக்குச்சம்மதமென்ருலும் அஞ்ஞானகாரியமான ஆவரணம் எப்படிவந்தது இதுவுமில்லையென்ருல் ஆவரணத்தைப்போக்கிற வேதாந்தத்தைப் படிக்கக் கணக்கில்லையேயென்னில்,

உ-ம். நான் அஞ்ஞானியென்கிற அனுபவஞ் செடத்தினிடத்திலே காண்பியாமல் சித்தினிடத்திலே காண்பிக்கிற திருஷ்டமேயாம்.

ச-கை. அனுபோகங்கண்டாலும் யுக்திகூடாதேயென்னில்,

உ-ம். திருஷ்டமாய்க் கண்டகாரியத்திற்கு யுக்திதேவையில்லை காணாதகாரியத்திற்கே யுக்திவேண்டும்.

ச-கை. இப்படிசங்கித்தாலல்லவோ புத்தியிலே தூணாகனந்யாயம் போல திடப்படுமென்னில்,

உ-ம். சுவானுபவத்தைக் கடந்து சங்கிக்கலாகாது ஆகையினாலே கூடஸ்தருக்கும் அஞ்ஞானத்திற்கும் விரோதமில்லைக் கூடியேயிருக்கலாம்.

ச-கை. ஆனாலிந்த அஞ்ஞானத்தைத் தள்ளுகிறவிரோதியெது அது எங்ஙனே காணலாமென்னில்,

உ-ம். சாஸ்திர விசாரஞானமே யஞ்ஞானத்திற்கு விரோதி அது ஞானிகளிடத்திலே காணலாம்.

ச-கை. விட்சேபமென்னப்பட்ட அகங்காரியாவதார் அவனெதினாலே கற்பிக்கப்பட்டான் அவனுக் கதிட்டானமேதென்னில்,

உ-ம். காரியகாரண சரீரத்தையுடைத்தான சைதன்னியமே அகங்காரி அஞ்ஞானகாரியமான விட்சேபத்தினாலே கற்பிக்கப்பட்டான் அவனுக்கு அதிட்டானங்கூடஸ்தசைதன்னியம்.

ச-கை. இந்த கற்பிதமாயிருக்கிற அகங்காரிக்குஞ் சுபாவமாயிருக்கிறதனக்குஞ் சுபாவசித்தமாயிருக்கிறபேதமெப்படி? பிராந்திசித்தமாயிருக்கிற அபேதமெப்படியென்னில்,

உ-ம். ஈதென்னப்பட்ட அதிட்டானக் கிளிஞ்சிலுண்மை வெள்ளியென்கிற ஆரோபமித்தையென்கிறதுபோல சுபாவசித்தபேதமென்றறிக இதுவெள்ளியென்கிற வொருமைமயக்கம்போல நான்தானென்கிற வொருமையேபிராந்தி.

ச-கை. ஈதென்கிற சாமான்னியம்போலவும் வெள்ளியென்கிற விசேடம்போலவும் ஆத்மாவும் அகங்காரியும் எங்குங் காண்பிக்கவில்லையேயென்னில்,

உ-ம். தேவதத்தன்றான் போனவன் எக்கியதத்தன்றான் கண்டவன் நீதான்சொன்னவன் நான்தான் கேட்டவனென்கிறவிவகாரத்திலே இது வெள்ளி இது புடவை இது கடமென்கிறாப்போலச் சாமான்னியம் விசேடம் இரண்டுங் காண்பிக்கின்றது.

ச-கை. இந்தப் பேதஞானத்திலே யுமக்குப் பிரயோசன மேதென்னில்,

உ-ம். தானென்கிற சொல்லுக்கு அர்த்தம் நானென்கிற அகங்காரிக்கு அன்னியமான கூடஸ்தனென்றே சித்தாந்தம்.

ச-கை. கடந்தான் படந்தான் கோபுரந்தான் என்னுமிடத்தில்அசேதனத்திலே தானென்கிறசொல் வரலாமோவென்னில்,

உ-ம். சிதாபாசனில்லாததுபற்றிச் சடமென்று சொல்லப்பட்ட கடபடாதிகளுஞ் சிதாபாசனைப்பற்றிச் சேதனமென்று கா ண்பித்த பிரமாதி ஸ்தம்பபரியந்தமான பிராணிகளும் ஆத்மா வொருவிடத்திலே யிருவகைக் கற்பிதங்களானபடியினாலே யெல்லாவற்றையும் பற்றித் தானென்று வழங்குகிற சொல் எங்கும் ஆத்மாவுண்டென்கிறதைக் காட்டுகின்றது ஆகையினால் தானென்கிறசொல் எங்கும்வரலாம்.

ச-கை. தானென்கிற சொல்போல அது இதுவென்கிற சொல்லும் எல்லாவற்றிலும் சாமானியமாகவிருக்கையினால் இதுகளும் ஆத்மாவாகட்டுமேயென்னில்,

உ-ம். இது அதுவென்கிறசொல் நல்லதுபொல்லாதென்கிறசொல் போலப் படுபாதியிலே சாமானியங்கண்டதேயல்லாமல் முற்றுங்காணவில்லை ஆகையினாலே இதுதான் அதுதான் நல்லதுதான் பொல்லாதுதானென்று சர்வத்திரசாமானியமாய்த்தோற்றுகிறதுதானே ஆத்மாவென்றும் விசேடமெல்லாம் மாயாகற்பிதமென்னுஞ் சித்தாந்தம்.

ச-கை. இது எல்லாருக்கும் ஏன்தெரியவில்லையென்னில்,

உ-ம். முன்சொன்ன அஞ்ஞானத்தினாலே தாதான்மிய அத்தியாசத்தையடைந்த அஞ்ஞானிகள் சாமானியவிசேடம் வெட்டவெளியாய் வேறுபட்டிருக்கினும் ஒன்றாய்க்கண்டார்கள்.

ச-கை. இந்த அத்தியாசமெப்படிபோமென்னில்.

உ-ம். விசாரஞானத்தினாலே அஞ்ஞானமும் ஆவரணமும்போமென்று முன்சொன்னதேயாம்.

ச-கை. இந்த ஞானிக்குக் காரணமான வஞ்ஞானம்போயுங் காரியமான விட்சேபமிருப்பானேனென்னில்,

உ-ம். விட்சேபத்திற்குக் காரணம் அஞ்ஞானமென்றுங் கர்மமென்றும் இருவகை அவற்றில் அஞ்ஞானநசித்துங் கர்மநசியாதபடியால் பிராரத்தந் தொலையுமட்டுமிருக்கும்.

ச-கை. காரணம் நட்டமாயுங் காரியமிருக்குமென்கிறது நியாயமல்லவேயென்னில்,

உ-ம். உங்கள் தர்க்கமதத்திலே காரணநட்டமாயுங் காரியஞ்சற்றுப்போதிருக்குமென்பது நமக்குஞ்சரியல்லவோ,

ச-கை. இப்படியானாலுங் காரணத்திற்குப் பின்காரியஞ் சற்றுநேரமல்லோ இருக்கவேண்டும் ஒரு புருஷாயசுள்ளமட்டு மிருக்குமென்கிறது கூடாதேயென்னில்,

உ-ம். இரண்டொரு நாளிலுண்டான காரணத்திரவிய மென்னப்பட்ட நூல்வெந்தும் ஒருசாமங் காரியதாமசமுண்டென்றால் அனந்தகற்பத்திலேயிருக்கிற அஞ்ஞானப்பிராந்தி நட்டமானாலும் அதின்காரியமான விட்சேபம் பிராரத்தத்தோடே போமென்றது சொற்பமல்லாமல் விஸ்தாரமல்ல.

ச-கை. இப்படி தர்க்கிக்கின்றதே யல்லாமல் பிரமாண மில்லையோ வென்னில்,

உ-ம். இப்படி வாயடி கையடி அடிக்கிறது உங்கள் தர்க்கமதத்திலேயல்லாமல் நமக்கு சுருதியுத்தி யனுபவமூன்றுமுண்டு.

ச-கை. இனி தர்க்கம்போதும் உமது சித்தாந்தமேதென்னில்,

உ-ம். அஞ்ஞானிகள் நான்தானென்கிற இருவகையு மொருவனுகக்கண்டு கலங்கிச் சங்சாரத்திலேயடிபடுவார்களென்றும் அந்த இருவகையும் வேதாந்தஞானிகள் பகுத்தறிந்து முத்தராவார்களென்று மறிகிறதே சித்தாந்தம்.

ச-கை. வேதாந்தமல்லாத சாத்திரத்தினாலே முத்தியில்லையோ வென்னில்,

உ-ம். மற்றைச்சாத்திரமெல்லாம் பிராந்தாளாலே கற்பிக்கப்பட்ட சாத்திரமானபடியினாலே கலக்கத்தின்மேற் கலக்கமாய் குழம்புமல்லாமற் பிராந்தியைத்தெளிவிக்கமாட்டாது.

ச-கை. இன்ன வின்ன சாஸ்திர கர்த்தாக்கள் இன்ன வின்னதைப் பொருளென்று கலங்கினார்களென்கிறதையும் இவர்களுக்குப் பரம்பரையாய்த் தெளிவுவரும்வழியு மின்னபடியென்று சொல்லவேண்டுமென்னில்,

உ-ம். பாமரரும் லோகாயுதர்களும் விரோசனன்சொன்ன சித்தாந்தயுத்தியினாலே தூலசரீரமே ஆத்மாவென்பார்கள் சாருவாகன் சீவன் போனமட்டிலே சரீரமரிச்சுப்போகிறபடியால் நான்கண்டேன் கேட்டேனென்கிற யுத்தியினாலுந்தேகமாத்மாவல்ல இந்திரியமே ஆத்மாவென்று சொல்லுவான் பின்னைச் சிலசாருவாகர் பிராணன்போனால் இந்திரியங்களிராதபடியினால் பிராணனே ஆத்மாவென்பார்கள் உபாசகர் மனது இல்லாதபோது பிராணன் தெரியாதபடியினாலே மனதே ஆத்மாவென்பார்கள் க்ஷணிகவாதிகள் புத்தியில்லாவிட்டால் மனது ஆர்விக்கிறபடியினாலே புத்தியே ஆத்மாவென்பார்கள் பவுத்தன் சுழுத்தியிலே புத்திமுதலாக வொன்றுங் காணுதபடியினாலே சூனிய மாத்மாவென்பான் பட்டாசாரியர் சுழுத்தியிலே சூனியமா யிருந்ததென்று கண்டுசொல்லுகிறபடியினால் ஆத்மாசத்தென்பார்கள் அந்தராளரும் ஆசமக்காரருஞ் சுழிமுனை நாடிவழியிலே சஞ்சரிக்கிறபடியினாலே ஆத்

மாவனுவென்பார்கள் திகம்பரர்கள் பாதாதிமஸ்தகபரியந்த மறிவுகல
ந்திருக்கிறபடியினாலே ஆத்மா புருஷப்பிரமாணமென்று சொல்லுவார்
கள் பிரபாகரரும் தார்க்கிகரும் ஆத்மாபரிச்சின்ன மாயிருந்தா லழிந்து
போமென்று பரிபூரணமாய் செடமாயிருக்குமென்பார்கள் பாட்டமத
த்திலே சுழுத்தியிலே செடமாயுஞ் சாக்கிரத்திலே அறிவாயுங் காண்
பிக்கிறபடியினாலே ஆத்மா செடசித்தா யிருவகையுமாயிருக்குமென்று
சொல்லும்சாங்கியமதத்தில் பரிபூரணத்திற்கு இரண்டிலக்கணங்கூடா
து ஆத்மா சித்தாய் பரிபூரணமாயிருப்பர் அவர்களிடத்திற் சுழுத்தியிற்
காண்பிக்குஞ்செடம் அந்த ஆத்மாக்களுக்குச் சுகதுக்கங்கொடுக்கவந்த
பிரகிருதியென்றுசொல்லும் யோகமதம் பிரகிருதிதானு மொருவரில்
லாவிட்டாற் சேஷ்டிக்கமாட்டாதென்றும் அடக்கியாளுவா ரில்லாவி
ட்டால் ஆத்மாக்களுக்குப் பந்தமோட்ச மில்லையென்கிறபடியினாலே
இந்த ஆத்மாக்களைத்தவிர ஈஸ்வரனொருவனுண்டென்றுசொல்லும் ப
தஞ்சலிமதம் அசங்கனைதன்னியமே ஈஸ்வரனானால் எல்லாரையுமடக்
கியாளமாட்டாது ஆகையினாலே அந்தரியாமியே ஈஸ்வரனென்றுசொ
ல்லும் தார்க்கிகமதம் அந்தக்கரண மில்லாவிட்டால் சங்கற்பங்கூடா
து ஆகையினாலே இரணியகெர்ப்பமேஈஸ்வரன் அந்தரியாமியல்லவெ
ன்றுசொல்லும் விஸ்வரூபமதந் தூலசரீரத்தைவிட்டுச் சூட்சுமசரீரந்
தனியேயில்லை கிருஷ்ணன் விஸ்வரூபங் காட்டுகிறபோது எங்குங்கால்
எங்குங்கையாகக் காட்டினபடியினாலே விராட்புருடனே ஈஸ்வரன் இ
ரணியகெர்ப்பனல்லவென்றுசொல்லும் பிரசாபத்தியமதம் எங்குங்கா
லாயிருக்கிறதே ஈசுவரனானால் மரவட்டையும் ஈசுவரனாகவேணும் ஆ
கையினாலே பிரமாவே ஈசுவரனல்லாமல் மற்றது ஈசுவரனல்லவென்
றுசொல்லும் வயிஷ்ணவமதம் இந்தப்பிரமாவும் விஷ்ணுவுடைய திரு
நாபியிலே பிறந்தபடியினாலே விஷ்ணுவே ஈஸ்வரனென்று சொல்லும்
சைவாகமஞ் சிவனுடையபாதம் விஷ்ணுவினாலே காணப்படாதபடியி
னாலே சிவனே ஈஸ்வரனாகவேணுமென்றுசொல்லும் காணபத்தியமத
ம் திரிபுரசங்காரத்திலே சிவனுங் கணபதியைப் பூசைபண்ணினபடியி
னாலே விக்கினேஸ்வரனே ஈசுவரனென்றுசொல்லும் புராணிகமதம்
இப்போது சொல்லப்பட்ட தேவதைகளெல்லாம் புண்ணியஸ்தலங்க
ளிலே விளங்குகையினாலே தலங்களே ஈசுவரனென்றுசொல்லும் வி
ருக்ஷார்ச்சனை மதம் தலங்களுமரங்களாலே விளங்குகையினாலும் மூ
ங்கில் அரசு எருக்குமுதலானதுகளை அவாளவாள் குலதேவதைகளா
கப்பூசைபண்ணுகையினாலும் மரங்களேயே ஈசுவரனென்றுசொல்லும்
இப்படியின்னம் அனேகவாதிகள் தங்கள்தங்கள் மதாபிமானத்தினா
லே மந்திரசாத்திரகற்பம் ரசவாதகற்பமுதலானதுகளைத் தொடுத்துக்
கொண்டு அலைந்தார்கள் இப்படி யஞ்ஞான சாஸ்திரக்கர்த்தாக்கள் அ
லைந்தவழிசொன்னோம்.

ச-கை. இப்படி யெல்லாச்சாஸ்திரகர்த்தாக்களும் வஸ்துநிர்ணயம் பண்ணமாட்டாமல் அலைந்தால தத்துவநிர்ணயம் பண்ணுவதெப்படியென்னில்,

உ-ம். பிரமமொன்றே பொருள் மற்றுள்ளதெல்லா மாயாமயமெமென்கிற வேதாந்தத்தைவிசாரித்து வஸ்துநிர்ணயம் பண்ணவேண்டும்.

ச-கை. அப்படியாறு விந்தவாதிகளுக்கெல்லாம் விரோதமல்லவோ வென்னில்,

உ-ம். ஒன்றேபொருளென்கிற வேதாந்திக்கும் அதைத்தானே குருடர் யானைகண்டாற்போலக் கண்டிருக்கிற இந்த வாதிகளுக்குஞ் சற்றும் விரோதமில்லை.

ச-கை. பிரமமொன்றே உண்மைப்பொருளென்கிற வேதாந்தத்துக்கு மற்றுள்ளவெல்லா மாயாமயமென்கிறதற்கும் பிரமாணமேதென்னில்,

உ-ம். இப்படி சொல்லுகிற மூப்பத்திரண் டுபநிஷத்துமே பிரமாணம்.

ச-கை. இவ்வளவுஞ் சித்துலட்சணம் வேதாந்தத்திலே மாயைக்கு லட்சண மெப்படியென்னில்,

உ-ம். மோகலட்சணமும் ஜடலட்சணமுமாயிருக்கும்,

ச-கை. இந்தப் பிரபஞ்சத்திலே மாயாலட்சண மிருவகையையும் பகுத்துக்காட்டவேண்டுமென்னில்,

உ-ம். கடமுதலான பூதபௌதிகமெல்லாஞ் செடமாயிருக்கக்கண்டோம் சத்தென்றும் அசத்தென்றும் தனக்கு அகப்படாதபடியினாலே மோகமாயிருக்கக்கண்டோம்.

ச-கை. சீவன் ஈஸ்வரன் செகத்தெல்லா மெல்லாரும் உண்மையாய்க்கண்டு வருகிறதை மாயையென்கிற தெப்படியென்னில்,

உ-ம். இந்த மாயாகற்பிதமெல்லாம் லௌகிக திருஷ்டியினாலே யுண்மையாகவும் யுத்தியினாலே யனிர்வசனமாகவும் வேதாந்தஞான திருஷ்டியினாலே காலத்திரயத்து மில்லாததாகவும் இப்படி மூன்றுவிதமாயிருக்கும்.

ச-கை. இந்த மாயாகற்பித பிரபஞ்சமெல்லாம் எந்தக்காலத்திலே யுண்டு எந்தக்காலத்திலே யில்லையென்னில்,

உ-ம். சாக்கிரத்திலுஞ் சொற்பனத்திலும் விரித்த சித்திரப்படம் போலே யுண்டாயிருக்கிற காலமென்றுஞ் சுழுத்தி மூர்ச்சை சமாதிகளிலே சுருட்டின சித்திரப்படம்போல இல்லாதகாலமென்றுமாம்.

ச-கை. இந்தமாயை சுதந்தரமோ பராதீனமோவென்னில்,

உ-ம். சைதன்னியத்தையன்றியிலே விளங்கமாட்டாதபடியினாலே பராதீனரூமாம் அசங்கராயிருக்கிற கூடஸ்த சைதன்னியத்தை செடமாயிருக்கிற செகத்தாகவுஞ் சிதாபாசாளாயிருக்கிற சீவேஸ்வராளாகவும் பண்ணுகையினாலே சுதந்தரையுமாம்.

ச-கை. இப்படியானால் மாயையினாலே பிரமத்திற்குச்சொரூப லட்சணங்கெட்டதேயென்னில்.

உ-ம். மாயைகூடஸ்தரைத் தொடாமற்றானே சீவன் செகத்தையுண்டாக்குகையினாலே சொரூபலட்சணங்கெடவில்லை.

ச-கை. முந்தி பிரமத்தைத்தானே சீவன்செகத்தாய்ப் பண்ணிற்றென்றீர் பிறகு பிரமத்தைத்தொடாமற் பண்ணிற்றென்கறீர் இந்த இருவகையுங் கூடாதேயென்னில்.

உ-ம். கூடாததைக்கூட்டிவைக்கிறதே மாயைக்குச்சுபாவமென்று வேதஞ் சொன்னபடியினாலே விரோதமில்லை நீ மயங்கவேண்டாம்.

ச-கை. இப்படி மாயைகற்பித்ததெல்லாங் கூடாததைக்கூட்டிவித்ததாக விருக்குமோ இப்படிக்கொத்த சத்தி அந்த மாயைக்கு எங்கேயிருந்து வந்ததென்னில்.

உ-ம். ஒருமாயைக்குப்பிறந்த ஐந்துபூதங்களிலே ஒன்றிலே கடினமும் ஒன்றிலே குளிர்மையும் ஒன்றிலேசூடும் ஒன்றிலேசலனமும் ஒன்றிலேவெளியுங் கண்டபடியினாலே இந்த மாயைக்குக் கூடாததைக் கூட்டிவைக்கிறதென்றே சுபாவம் இந்தச்சத்தி மாயைக்குச் சுபாவமேயல்லாமல் ஒன்றினால் வந்ததல்ல.

ச-கை. எல்லாரும் இந்தச்செகத்துமாமாயமென்கிறதை யேன் அறியவில்லையென்னில்.

உ-ம். இந்திரஜாலக்காரனைக் காணுமளவும் இந்திரஜால மூண்மையாய்த்தோற்றுகின்றாப்போல மாயைக்கு அதிட்டானத்தையறியுமளவும் மாயை யுண்மையாய்த்தோன்றும் அதிட்டானத்தையறிந்தால் பொய்யாய்ப்போம்.

ச-கை. சகலவாதிகளும் மாயைக்குள்ளேதானே இதுபொருள் அதுபொருளென்று சங்கிக்கக்காரியமேதென்னில்.

உ-ம். சந்தேகசொரூபமாயிருக்கின்ற மாயைக்குப் பரிகாரந்தேடாமல் சங்கைக்குள்ளே சங்கைபண்ணுகிறது அவர்களைப்பிடித்தவஞ்ஞானம்.

ச-கை. ஆனாலிதற்குப் பரிகாரமேதென்னில்.

உ-ம். இதுபொருளல்ல மாயையென்றறிகிறதே பரிகாரம்.

ச-ஙக. கண்ணூரக்கண்டு நிர்ணயமாகாத இந்திரஜாலம்போலே இந்தச் செகத்து மாயாமயமா யிருக்கவில்லையேஉண்மையாகவல்லலோ விருக்கின்றதென்னில்.

உ-ம். சத்து அசத்தென்று இருவகைநிர்ணயத்து மகப்படாத செகத்து உண்மையென்கிறது வுன்னுடைய பட்சவாதமே யல்லாமல் செகத்துமாயைதானே.

ச-கை. நீர்சொன்னதே யல்லாமல் கெதஞ் செகத்து மாயையென்று சொன்னபேருண்டோவென்னில.

உ-ம். செடமாய்க் கெர்ப்பவாசம்பண்ணின சுக்கிலஞ் சேதனம்போலப்புறப்பட்டுப் பெரியவன் சிறியவனென் றுண்டுடுத்துக்கண்டுகேட்டுத் திரிகிறதைப்பார்க்க வேறே யிந்திரஜாலமேதென்று வசிட்டரும் இந்தத்தேகம்போலே ஆலமர முதலானதுகளும் விதையெங்கேவந்தது மரமெங்கேவந்ததென்று மயங்காது சகலமு மாயையென்றே காணவேண்டுமென்று வியாசரும் மனதினாலேசிந்திக்கில் நிண்ணயமாகாதபொருளைத் தர்க்கிக்கவொண்ணாதென்றும் நிண்ணயிக்கப்படாதசெகத்திலே இதுபொருள் அது பொருளென்று சங்கிக்கத்தேவையில்லை சகலமுமாயையென்றே காணவேண்டுமென்று யாஞவர்க்கரும் திருவுளம்பற்றியிருக்கிறார்கள் பின்னும் இன்னபடியென்று சிந்திக்கப்படாததை யுண்டாக்குகிறசத்தி மாயையென்று எல்லாருஞ் சொல்லியிருக்கிறார்கள்.

ச-கை இந்தமாயைக்கெல்லாம் பீசமெங்கேகாணலாமென்னில்.

உ-ம். மரத்தையடக்கி யிருக்கிறவிதைபோலே சாக்கிர சொப்பனபிரபஞ்சத்தை யடக்கியிருக்கிற மாயாபீசம் சுழுத்தியிலே எல்லாருங்காணவில்லையோ.

ச-கை. சகலபுத்திவாசனையு மாயையிலே யடங்குமென்கிறதற் கடையாளமேதென்னில்.

உ-ம். மாயாப்பிரதிவிம்பர் மாயையிலே சகலவாசனையுங்கண்டு சர்வக்கியராயிருக்கின்றதே யடையாளம்.

ச-கை. ஆனலீஸ்வரவுபாதி யெப்படியிருக்குஞ் சீவவுபாதியெப்படியிருக்குஞ் சீவேசுவரா ளெப்படியிருப்பார்கள் ஈஸ்வரனை யறிகிறதெப்படியென்னில்.

உ-ம். மேகம்போலேயிருக்கும் மாயைமேகத்தின்றிவலைபோலேயிருக்கும் புத்திவாசனைகள் திவலையிற் பிரதிவிம்பித்த வாகாசம்போலேயிருப்பான் சிதாபாசன் மேகாகாசம்போல் ஈஸ்வரனை யனுமானத்தினாலே யறியவேண்டும்.

ச-கை. இக்கப்புத்திவாசனைகளிலே பிரதிவிம்பித்த சிதாபாசனையும்மாயாப்பிரதி விம்பாயிருக்கின்ற ஈஸ்வரனையும்எந்தவடைவிலே பகுத்துக்காண்கிறதென்னில்.

உ-ம். வாசனையானது சிதாபாசனுடனேகூடப் புத்திரூபமாய் முளைக்கிறபோது சிதாபாசனை வெட்டவெளியாய்க்காணலாம் ஈஸ்வரனை சர்வக்கியன் சர்வேஸ்வரன் அந்தரியாமியென்று வேதஞ்சொல்லக்கேட்டறியலாம்.

ச-கை. இரண்டுபேருஞ் சிதாபாசளானால் இவர்களுக்குத் தாரதன்மியமேதென்னில.

உ-ம். ஜீவர்கள் மாயையின்வசமா யிருக்கிறபேர்களென்றும் மாயையைத் தன்வசம்பண்ணிக்கொண்டவர் ஈஸ்வரனென்றுந்தாரதன்மியங்காணலாம்.

ச-கை. ஈஸ்வரனை சர்வக்கியனென்பதும் அந்தரியாமியென்பதும் சர்வேஸ்வரனென்பதும் எதினாலென்னில்.

உ-ம். இவருக்கு உபாதியானமாயையிலே சகலமு மிருக்கிறபடியினாலே சர்வக்கியனென்பதும் சகலருக்கும் புத்திகளுக்குள்ளிருந்து ஆட்டுகிறபடியினாலே அந்தரியாமியென்பதும் இவருண்டாக்குகிற பிரபஞ்சத்தை யொருத்தராலுந் திருப்பப்படாதது கொண்டு சர்வேஸ்வரனென்பதுமாம்.

ச-கை. இந்த ஈஸ்வரனுக்குச் சர்வக்கியத்துவமுண்டானால் எல்லாராலுமேன் அனுபவிக்கப்படவில்லையென்னில்.

உ-ம். வாசனைகளெல்லாம் பரோட்சமானபடியினாலே யனுபவிக்கப்படவில்லை.

ச-கை. அந்தரியாமிக்கு இத்தனைகுணமுண்டென்கிறதற்குப் பிரமாணமேது இவருக்குச் சரீரமேது இவர் கம்பித்ததே பிரபஞ்சத்திற்கு வழியென்கிறதற்குப் பிரமாணமேதென்னில்.

உ-ம். அந்தரியாமிக்கித்தனைகுணமுண்டென்கிறதற்கு வேதம்பிரமாணம் புடவையிலே நூலுபாதானமாயிருக்கிறாப்போலச் சகலத்திலு மிவருபாதானமா யிருக்கிறபடியினாலே சகலமு மிவருக்குச்சரீரம் ஈஸ்வரன் சகலபூதங்களிலுமிருந்து தேகாதிபாவைகளை யபிமானக்கயிற்றைப்பூட்டி விதிநிஷேதவழியிலே யாட்டுவிக்கிறானென்கிற கீதாவசனமும் இது தர்மமென்றறிவேன் இதிலே மூளவுமில்லை இது அதர்மமென்றறிவேன் இதில்திரும்பவுமில்லை ஆரோவொருவ னிப்படியாட்டுகிறானென்கிற பாண்டவகீதையும் பிரமாணம்.

ச-கை. சகலமுமிப்படி யீஸ்வரனே யாட்டுகிறதானால் புருடனுடைய வுச்சாகந்தேவையில்லையோவென்னில்.

உ-ம். உச்சாகமும் அவரவர்கன்மத்திற்கிடாய் ஈஸ்வரசங்கற்பமேயா
ணபடியினாலே உச்சாகமும் பண்ணவேண்டும்.

ச-கை. அப்படியானால் ஈஸ்வரசங்கற்பக் தேவையில்லையே யென்னில்

உ-ம். ஈஸ்வரவரப்பிரசாதங்கொண்டுதான் அசங்கனென்கிறஞானம்
வரவேண்டியபடியினாலே யீஸ்வர அனுக்கிரகமும் வேண்டும்

ச-கை. ஈஸ்வர அனுக்கிரகங்கொண்டு தான் அசங்கனென்கிறஞானம்
வந்ததனாற் பிரயோசனமேதென்னில்.

உ-ம். அதனால் முத்தியென்று வேதஞ்சொல்லுகிறது.

ச-கை. அந்த அந்தரியாமி சிருஷ்டிக்கிற அடைவேது அழிக்கிற அடை
வேது என்னில்.

உ-ம். சித்திரப்படத்தைவிரித்தாப்போலத் தம்மிடத்திற் பிரபஞ்சத்
தை யவரவர் கர்மவசத்தினாலே தோற்றுவிக்கிறதே சிருஷ்டி
யும் சுருட்டின படம்போல அவ்வவர் கர்மத்தின்வழியே பிரப
ஞ்சத்தைத் தம்மிடத்திலே யடக்குகிறதே பிரளயமுமாம்.

ச-கை. ஒரு ஈஸ்வரனே சித்துக்குஞ் செகத்துக்கும் காரண மெப்படி
யாவனென்னில்.

உ-ம். சைதன்னியமானபடியினாலே சித்துக்கும்மாயையினுபாதியை
ப்பற்றிச் செடத்துக்குங் காரணமாவார்.

ச-கை. இப்படியானாற் பிரமந்தானே செகத்காரணமென்று சுரேஸ்வ
ராசாரியர் சொல்லுவானேனென்னில்.

உ-ம். சிவனையுங் கூடஸ்தனையும் அன்னியோன்னிய அத்தியாசத்தி
னாலே யொருமைப்பாடாய்க் கண்டாப்போல ஈஸ்வரனையும்
பிரமத்தையு மொன்றாகக்கண்டுசொன்னார்.

ச-கை. அன்னியோன்னிய அத்தியாசமெப்படி கூடுமென்னில்.

உ-ம். ஈஸ்வரனுடைய செகத்காரணத்துவம் பிரமத்தினிடத்திலும்
பிரமத்தினுடைய சச்சிதானந்த லட்சணம் மாயாப்பிரதிவிம்ப
னிடத்திலும் அத்தியாசம் பண்ணப்பட்டுக் கஞ்சிபூசினபடம்
போலொன்றாச்சுது.

ச-கை. இந்தவுளவு நீரறிந்தவகை யெப்படியென்னில்.

உ-ம். ஆறுலிங்கத்தாலும் வேதாந்தவிசாரம்பண்ணிப் பிரமமேய சங்
கமென்றும் மாயாப்பிரதிவிம்பரே சிருஷ்டிக்கிறவரென்று மறி
ந்தோம்.

ச-கை. சிருஷ்டிபண்ணின அடைவெப்படியென்னில்.

உ-ம். ஆனந்தமயராயிருந்த ஈஸ்வரன் சுழுத்திசொப்பன மாகிறாப்
போல மாயையைவிரியப்பார்த்து இரணியகெர்ப்பரானார்.

ச-கை. ஒருவேதத்திலே யொன்றிலேயொன் றுண்டாச்சுதென்று இரமசிருஷ்டிசொல்லுகிறது ஒருவேதத்திலேயொருமித்த சிருஷ்டிசொல்லுகிறது எதுபிரமாணமென்னில்.

உ-ம். இரண்டுவகை சொப்பனமுமுண்மையானபடியினாலே யிம்பிரமாணம்.

ச-கை. இரணியகெர்ப்பசொரூப மெப்படியிருக்குமென்னில்.

உ-ம். சூட்சுமசரீரசமட்டியாய்ப் படத்திலேசூத்திர மிருக்கிறப்போலெங்குமிருப்பதால் இச்சாசத்தி கிரியாசத்தி ஞானசத்தியுடையவ ரிரணியகெர்ப்பர்.

ச-கை. இந்த இரணியகெர்ப்ப மெப்படிகாண்பிக்குமென்னில்.

உ-ம். சந்தியிருட்டிலே காண்பிக்கிறவுலகம்போலவும் கரியாலே பச்சுக்கட்டின சித்திரப்படம்போலவும் எங்குமொக்கக்குறுமுளையாயிருக்கிறபயிர் வகைபோலவும் ஈஸ்வரசூட்சுமசரீரம் அழகாக வெங்குமொக்கலாஞ்சனை பண்ணப்பட்டுத்தோற்றும்.

ச-கை. இந்த ஈஸ்வரனுடைய சூட்சுமசரீரந் தூலஅவத்தையை யடைந்து தோற்றுகிறதெப்படி! யிதற்குப்பிரமாணமெப்படி? இவரவையவங்களெது அந்த அவையவங்களைப்பூசித்தால் பலமேதென்னில்.

உ-ம். பஞ்சீகரணம்பண்ணப்பட்டு வெய்யிலிலே விளங்குகிற லோகம்போலவும் தீர்ந்த சித்திரப்படம்போலவும் பழுத்திருக்கிறபயிர்வகைபோலவும் வெட்டவெளியாய்த்தோற்றின ஈஸ்வரசரீரமும் விராட்டென்பது விஸ்வரூபஅத்தியாயமும் புருடசூக்தவேதமும் பிரமாணம் பஞ்சமூர்த்திகள் வர்ணாசிரமுடையபேர்கள் தேவாசுராதிகள் சராயுசாதிகள் பயிலாமாரிமுதலானது வாச்சியுளிமுதலானதெல்லாம் ஈஸ்வரனுடைய அவயவம் உபாசித்தமூர்த்தி யதிகாரிக்குத் தக்கதாய்ப்பலம்வரும்.

ச-கை. எல்லாரும்பூசிக்கிறது ஈஸ்வர ரவயவமானால்மோட்சமெல்லாருக்கும் ஏன்வரஇல்லை யென்னில்.

உ-ம். மாயிகத்தையுபாசித்தால் மாயிகபலமேயல்லாமல் மோட்சம் வராது.

ச-கை. பின்னர் எதினாலே மோட்சம்வரவேண்டுமென்னில்.

உ-ம். பிரமதத்துவ விசாரத்தினாலே மோட்சம்வருகிறதேயல்லாமல் மற்றொன்றினாலே வாராது.

ச-கை. பிரமஞானமன்றியிலே பின்னையொன்றினாலேயுஞ் சம்சாரம் போகாதோவென்னில்.

உ-ம். தான்விழித்தாலொழியத் தன்னுடைய சொப்பனம்போகாதது போல அத்துவிதபிரமஞானத்தினுலே யஞ்ஞானகற்பிதமான சீவேசுரசெகத்தென்கிற சொப்பனமும்போகவேண்டும்.

ச-கை. பிரமத்திற்கு அபின்னமாயிருக்கிற சீவேஸ்வராளையுங் கற்பித செகத்தோடே கூட்டலாமோவென்னில்.

உ-ம். அவர்களும் மாயாகற்பிதமானபடியினுலே செகத்தோடேகூட்டலாம்.

ச-கை. இனி யிவர்களாலே கற்பிதமேதென்னில்.

உ-ம். வீட்சணமுதற் பிரவேசாந்த சிருஷ்டியெல்லாம் ஈஸ்வரன் கற்பிதத்தும் சாக்கிரமுதல் மோட்சபரியந்தஞ் சீவன் கற்பித்தது மாம்.

ச-கை. இப்படி பிரமமாத்திரமே யுண்மைப்பொருளானுல் வாதிகளெல்லாருஞ் சீவேசுரவிடயத்திலே வாதம்பண்ணி மாயக்காரணமேதென்னில்.

உ-ம். அவர்களைப்பிடித்த அஞ்ஞானமே காரணமாக வீணிலே மாய்கிறுர்கள்.

ச-கை. நீரொருத்தரிருக்க இந்தவாதிகளிப்படி கெட்டுப்போகலாமா இந்தத்தத்துவத்தை அவர்களுக்குப் போதித்தருளுமே யென்னில்.

உ-ம், பிராந்தாளுக்குப் பக்குவம்வராமுன்னமே போதித்தால் இளைப்புமாத்திர மிச்சமல்லாமல் அவாள்புத்தியிலே யேறுது.

ச-கை, எந்தவாதிகள் எதிலேபிராந்தாளாயிருக்கிறுர்களென்னில்,

உ-ம், லோகாயுதன்முதல் சாங்கியமதபரியந்தஞ் சீவப்பிராந்தியிலேயலைந்தபேர்கள் யோகமதமுதல் விருக்ஷார்ச்சனைபரியந்தம்ஈஸ்வரப்பிராந்தியிலே யலைந்தபேர்கள்.

ச-கை, பெரியோர்களாயிருக்கிற சாஸ்திரக் கர்த்தாக்களைப் பிராந்தாளென்று சொல்லலாமோவென்னில்,

உ-ம். அத்வைதபிரமத்தை யறியாதபடியினுலே இவர்கள் பிராந்தாளென்பது தப்பாது இவர்களுக்கு இகபரமிரண்டுமில்லை,

ச-கை, சீவவாதிகளோடே யீஸ்வர வாதிகளையும் பிராந்தாளென்று சொல்லலாமோவென்னில்,

உ-ம், சொற்பனத்திலே பிட்சையெடுக்கிறவனிலும் இராஜாவாயிருக்கிறவன் அதிகமானுலும் விழித்தபின்பு இரண்டுஞ்சரியாய்ப் போமென்கிறுப்போல இருவகைவாதிகளுங் கற்பிதத்திலேதாரதன்மியமானுலும் ஞானம்வந்தவனைக்குறித்து இரண்டுபேருந்பிராந்தாளேயாம்,

ச-ஙை, மோட்சம் வேண்டுமென்கிறவனுக்கு இந்த வாதங்களைவிசாரிக்கத்தேவையில்லையோவென்னில்,

உ-ம், பூர்வபட்சமாய் விசாரித்துத் தள்ளிவிடுகிறதேயல்லாமல் சித்தாந்தமாய் விசாரிக்கவேண்டியது வேதாந்தமேயாம்,

ச-ஙை, சாங்கியம் யோகம் இந்தவிருவகையிலேயுஞ்சொன்னசீவனும் ஈஸ்வரனுஞ் சுத்தசைதன்னிய மானபடியினாலே இந்த இருவகையும் வேதாந்தத்திலேகூட்டலாமே இந்த இரண்டையுந் தள்ளப்படாதேயென்னில்,

உ-ம், அதிலே சீவஈஸ்வரர்களுக்கு பேதஞ்சித்தமானபடியினாலே நமதுசித்தாந்தத்திற்குக்கூடாது,

ச-ஙை, உம்முடையமதத்திலே தற்பதத்திற்குந் தொம்பதத்திற்கும் அர்த்தபேதமில்லையோவென்னில்,

உ-ம், அத்துவிதத்தைப் போதிக்கவேண்டுமென்கிறதற்காக ஒருவனுக்குப் பகுத்துக்காட்டினதேயன்றி அர்த்தபேதமில்லை,

ச-ஙை, இப்படியானால் லட்சணையினாலே பதார்த்தங்களைச்சோதிப்பானேனென்னில்,

உ-ம், அஞ்ஞானத்தினாலே சீவேஸ்வரரை வேறாகக்கண்டுவந்த பிராந்தனுக்கு அந்தபிராந்தி போகவேண்டுமென்று பதார்த்தசோதனைபண்ணிக்காட்டினதாம்,

ச-ஙை, பதார்த்தசோதனையிலே யிருவரையுமொருவராய்க் காண்கிறதெப்படியென்னில்,

உ-ம், உபாதிகற்பிதமாயிருக்கிற ஜலாகாசத்தையும் மேகாகாசத்தையும்விட்டு இதுகளுக்கதிட்டானமாயிருக்கிற கடாகாசத்தையும் மகாகாசத்தையு மொன்றென்று காண்கிறதுபோலத் தற்பதொம்பதங்களுக்கு உபாதிகற்பிதமான சீவேஸ்வரரைத்தள்ளியிவர்களுக்கதிட்டானமான கூடஸ்தரும் பிரமமு மொன்றாகக் காண்கிறதே பதார்த்தசோதனையாம்,

ச-ஙை, இந்தப்படிக்குச் சாங்கியமதத்திற்குச்சீவனும்யோகமதத்திற்கு ஈஸ்வரனும் இரண்டுபதங்களுக்கும் அர்த்தமாக்கலாமே யென்னில்,

உ-ம், அப்படியானால் வேதவிரோதிகளாயிருக்கிற லோகாயுதன் பரியந்தங்கூட்டலாம்,

ச-ஙை, இந்தப்படிக்குச் சாங்கியயோகங்களிலே வேதாந்தவிரோதமேதென்னில்,

உ-ம், ஆத்மா அநேகமென்பதுஞ் செகத்துமெய்யென்பதும் ஈஸ்வரரொருவருண்டென்பது மத்துவிதத்திற்குவிரோதம்,

ச-கை. அத்துவிதத்திற் கொத்துவராவிட்டாலென்ன சீவன் அசங்கசைதன்னியமென் றறிந்ததுகொண்டு முத்தியில்லையோவென்னில்.

உ-ம். செகத்தும் ஈஸ்வரனும் நித்தியமென் றிருக்கையினாலே மோட்சம்வாராது,

ச-கை. தான் அசங்கசைதன்னியமென்றறிந்தாலும் ஈஸ்வரனும் பிரகிருதியு நித்தியமென்றதுகொண்டு எப்படி மோட்சம்வராதென்னில்,

உ-ம், முன்போலே பிரகிருதியுந் திரும்பவுங்கூடும் பின்பு இருக்கின்ற ஈஸ்வரனுஞ் சிருஷ்டிபண்ணுவர் ஆகையால் மோட்சமெப்படிவரும்,

ச-கை. அசங்கனாயிருக்கின்ற ஆத்மாவுக்கு அவிவேகத்தினாலே பிரகிருதியோடே சங்கம்வந்தது விவேகம்வந்தபிற்பாடு இவனெப்படி கூடுவானென்னில்,

உ-ம், இப்படியானால் உன்னுடைய சித்தாந்தங்கெட்டு மாயாவாதத்திலே வேதாந்தத்திலே விழுந்தது,

ச-கை, உம்முடைய அத்துவிகமதத்திற்கு ஆத்மாக்கள் நாநாவிதமாகாதபோது இவன்முத்தன் இவன்பெத்தனென்கிற நிர்ணயமெப்படியென்னில்,

உ-ம், இந்த நிர்ணயமெல்லாம் மாயைதானே நிருவகிக்கும்,

ச-கை, ஆத்மாவொன்றொழிய இரண்டில்லாவிடத்திலே மாயைதான் விகற்பத்தை எப்படி ஸ்தாபிக்குமென்னில்,

உ-ம், கூடாததைக் கூட்டிவைக்கிறது மாயைக்குச் சுபாவமாகையினாலே எல்லாவற்றையுந் தாபிக்கும் சுபாவத்திலே பெந்தமுமில்லைமுத்தியுமில்லை பெத்தனுமில்லை முத்தனுமில்லையென்றுவேதஞ்சொல்லுகின்றது,

ச-கை, ஈதெல்லாஞ் சுபாவத்திலேயில்லாவிட்டால் பின்னையெதிலே கூடுமென்னில்,

உ-ம், மாயையாகிற காமதேனுவுக்கு சீவேஸ்வரரென்று இரண்டு கன்றுண்டு அதுகள் வேணபடி தொய்தப்பால்கறக்குந் தத்துவமொன்றொழிய விரண்டில்லை,

ச-கை, இப்படிபேதமெல்லா மித்தையென்றறிந்து திரிகாலத்திலும் ஆத்மாவொருவரே யுள்ளபொருளென் றறிந்திருக்கிற ஞானிகளும் விவகாரம்பண்ணுக்கண்டோமே அதுகூடுமோவென்னில்

உ-ம், முன்போலே பரமார்த்தமாக விவகாரம்பண்ணுூர்கள் மித்தை யென்றே கண்டுவருவார்கள்,

ச-கை, அஞ்ஞானிகள் எப்படிவிவகரிப்பார்கள் ஞானிகள் எப்படிவிவ கரிப்பார்களென்னில்,

உ-ம், அஞ்ஞானிகள் இகலோக பரலோக வியாபாரமெல்லாம் உண் மையென்றும் அத்துவித மில்லையென்றும் விவகரிப்பார்கள் ஞானிகள் அத்துவிதமாத்திர முண்மையென்று மற்றுள்ளதெ ல்லா மில்லையென்றும் விவகரிப்பார்கள் இதில் அவரவர்நிர்ண யப்படிக்குப் பலமும்வரும்,

ச-கை, அத்துவிதம் பிரத்தியட்சமாமோவென்னில்,

உ-ம், நீ ஞானவடிவாயிருக்கிறுயோ வில்லையோவென்றறி,

ச-கை, உளளபடி தோற்றவில்லையேயென்னில்,

உ-ம், ஏகதேசங்காண்கிறது துவிதத்திலுஞ் சரியல்லவோ துவிதஞ் சித்திக்கிறபடிக்கு அத்துவிதமுஞ் சித்தியாதோ,

ச-கை, துவித மழிந்தல்லவோ அத்துவிதஞ் சித்திக்கவேண்டுமென் னில்,

உ-ம், துவிதமிருக்கையிலே துவிதத்தைக்காண்கிற வறிவாகத்தானே அத்துவிதஞ் சித்திக்கவேண்டும்,

ச-கை, ஞானம்வந்து மிரண்டு நிற்கின்றதுதானேவென்னில்,

உ-ம், அவத்தையழிந்து சாட்சிமாத்திரமாய் மிஞ்சுகிறபடியினுலேது விதமாயாமயம் அத்துவிதமேநித்தியம்,

ச-கை, திரும்பவு மொருவேளையிலே துவிதஞ் சத்தியமாய்த் தோன் றிஞலோவென்னில்,

உ-ம், திரும்பவும் அத்துவிதத்தைப் பரிசீலனம்பண்ணு,

ச-கை, எத்தனைகாலம் பரிசீலனம் பண்ணவேண்டுமென்னில்,

உ-ம், இந்தத்துக்கத்தைத் துவிதத்திலேபண்ணும் அத்துவிதத்திலே பண்ணவேண்டாம்,

ச-கை, பசிதாகமுதலானது மெனக்குமுன்போலவே காண்பிக்கின்ற தேயென்னில்,

உ-ம், எனக்கென்கிற வகங்காரிக்கேயல்லாமல் சாட்சியாகிற நமக் கில்லை,

ச-கை, அத்தியாசத்தினுலே சித்துருபத்திலேயுங் காண்பிக்கிறதேயெ ன்னில்,

உ-ம், இன்றுமுதல் அத்தியாசத்தைவிட்டு ஆத்மா வகங்காரங்களை வேறுகண்டிரு,

ச-கை, அத்தியாசஞ் சடுதியில்வருகிறது விவேகம் வரவில்லையே யெ ன்னில்,

உ-ம், அத்தியாசம்போலே விவேகத்தையுந்திடப்படுத்தினால் அத்தி யாசம்வாராது,

ச-கை, துவிதமித்தையாய்ப்போகிறாப்போலே அத்துவிதமு மித்தை யாய்ப்போகாதோவென்னில்,

உ-ம், இன்னபடிவரும் இன்னபடிபோமென்று நிர்ணயப்படாமல்மா யாமயமாயிருக்கிறது துவிதமோசைதன்னியமோவென்றுஉன் அநுயோகத்தைப்பார்த்துக்கொள்,

ச-கை, துவிதம்போ லத்துவிதமும் அனித்தியமோவென்னில்,

உ-ம், துவித முன்னில்லையென்கிறதை அத்துவிதத்திலே கண்டாப் போலே அத்துவிதம்பிருக் இல்லையெனகிறதை ஒன்றினாலேயு ங்காணப்படாதபடியினாலே அத்துவிதமே நித்தியம் அஃதே அபரோட்சம்,

ச-கை, இப்படியறிந்தும் சிலபேர்கள் திருப்தியடைந்து கவலைகெட் டுச் சந்தோஷியாததேனோவென்னில்,

உ-ம், சாத்திரதைத் தனக்காக்கிக்கொண்டு விசேஷிக்குதம்பாமல்மே லெழுந்தவாரியாய்ப் பார்த்துக்கொண்டபடியினால்,

ச-கை, யாதொருக்கால் இருதயத்திலேயிருக்கிற ஆசையெல்லாம் பற் றறவிட்டுப்போச்சுது அன்றல்லவோ இவன் முத்தனென்கிற வேதார்த்தம் அது ஞானியிடத்திற் காணேமேயெனில்,

உ-ம், அகங்காரத்தையும் ஆத்மாவையு மொன்றாகக் கண்டுகொண்டு வருகிற ஆசையாகாதென்பதே அந்தவேதார்த்தம் அகங்கார க்கிரந்திவிட்டபின்பு ஆத்மாவை வேறுகண்டிருக்கிறவனுக்கு அகங்காரத்தினிடமாய்க் கோடியாசைவந்தாலும்ஆனியில்லை.

ச-கை, அகங்காரக்கிரந்திவிட்டுப்போனபின்பு அகங்காரத்தினிடமாய் ஆசைவரலாமோவென்னில்.

உ-ம். பிராரத்தபலத்தினால்வரும்.

ச-கை. ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் பிராரத்தபலம்சரியானால்இரண் டுபேருக்கும் பேதமேதென்னில்,

உ-ம். இவன் வித்துவான் இவன் மூடனென்கிறதை வேதபரிட்சையி னாலேகண்டுபோகிறதேயல்லாமல் மற்றநடையினாலே காணாத துபோலே அகங்காரக்கிரந்திவிட்டுப்போனதுகொண்டு ஞானி யென்றறிகிறதேயல்லாமல் பிராரத்தசேஷ்டையினாலே பேதந் தெரியாது,

ச-கை. அகங்காரக்கிரந்தி போகாவிட்டாலும் ஆத்மாவுக்குச் சம்சார மில்லையேயென்னில்,

உ-ம். அப்படியறிந்தால் நீயேகிருதார்த்தன்,

ச-கை. அகங்காரக்கிரந்திவிட்டுப்போனவனுக்கு அடையாளமெப்படி யென்னில்.

உ-ம். பிரவிர்த்திநிவிர்த்திகளிலே யொன்றைத்துவேஷிக்கிறதுமில்லை யொன்றை வாஞ்சிக்கிறதுமில்லையென்கிற கீதாவசனப்படியே யிருப்பன்,

ச-கை. ஆனாலுபேட்சைபண்ணுகிறதே ஞானமோவென்னில்.

உ-ம். கைகால்செத்துப்போனால் கருமத்திலு முபேட்சைவரும் இப் படி வியாதியே தத்துவஞானமென்றால் உன்புத்தியல்லவோ தெளிவு.

ச-கை. இப்படி சங்கிக்கத்தேவையில்லையோ சடபரதர் முதலானவரு முபேக்ஷித்திருந்தது புராணத்திற்கேட்டோமேயெனில்,

உ-ம். ஸ்திரீகள் வாகனங்களோடே கூடிவிளையாடினாலும் ஞானியா னவன் சரீரத்தைத் தானென்றெண்ணானென்று சாமவேதம் சொல்லும்,

ச-கை. சடபரதர் காட்டிலே போனது ஞானநிமித்த மல்லவோவெ ன்னில,

உ-ம். அஞ்ஞானிகளுடைய சங்கத்தைத்துறந்ததேயல்லாமல் கல்லு கள் மரங்கள்போல பிரவிர்த்தியற்று இருக்கவில்லை,

ச-கை. இப்படி யொவ்வொரு குணங்களைப்பிடித் திதுவே ஞானமென் றுலகத்தார்சொல்லுவானேனென்னில்,

உ-ம். சாத்திரசித்தாந்தமறியாதமூடன் ஒன்றுகிடக்க வொன்றுசொ ல்லுவானன்றி அறிந்தவன்சொல்லான்.

ச-கை. சாத்திரசித்தாந்தந்தானேதென்னில்.

உ-ம். சகலசன்மார்க்கமுங்கூடி வயிராக்கியமென்றும் உபாதியென் றும் ஞானமென்றும் மூன்றுவிதமாயிருக்கும் இந்த மூவகைக் கும் ஏது சொரூபங் காரியம் அவதி பலம்என்கிற ஐந்துவகை வெவ்வேறாயிருக்கும் இதுகளை இன்னது இன்னபடியென்று ப குத்தறியாத அவிவேகி யெல்லாவற்றையும் ஞானமென்றுதடு மாறிச்சொல்லுவன் பகுத்தறிந்தவன் அப்படிசொல்லான்.

ச-கை. வயிராக்கிய முதலான மூவகைக்கு அஞ்சலத்தையு மேதெ ன்னில்.

உ-ம். வைராக்கியத்திற்கேதுவடையத்திலே தோஷதிருஷ்டி சொரூபம் ஒக்காளம் - காரியம் திரும்ப ஆசைவராமலிருக்கிறது-அவதிபிரமலோகபரியந்தந் துரும்பாயெண்ணுதல் பலம்பிரமலோகம் * உபாதிககேது அஷ்டாங்கயோகம் சொரூபம்சித்தநிரோதம் காரியம் விவகாரக்ஷயம்-அவதிசுழுத்திபோலே செகத்தை மறத்தல்பலம் பிர்மசமீபம் * ஞானத்திறகேது ¦சிரவணமனனம் நிருத்தியாசனம் - சொரூபம் விடயத்தில் மித்தியாபாவனை-காரியந்திரும்பி யொருக்காலும் அகங்காக்கிர்ந்திவராமலிருக்கிறது - அவதி மூன்தேகம்நானென்கிற உறைப்புப்போல பிரமநானென்கிற திடம்-பலம் மோட்சம்.

ச-கை. இந்தமூன்றும் ஒருமிக்கவேண்டாமோவென்னில்.

உ-ம். மூன்றுங்கூடினுற் றிடசௌக்கியமுண்டென்கிறதேயல்லாமல் மோட்சத்திற்கு ஞானமாத்திரமே போதுங்கன்மவசத்தினுல் சிலரிடத்திலிருக்கும் சிலரிடத்திலிராது கலங்கத்தேவையில்லை

ச-கை. இப்படிகலங்காம னிலைநின்றவனுக்குச் செய்காரிய மேதென்னில்.

உ-ம். சின்மாத்திரமாயிருக்கிற தன்னிடத்திலே மாயைகற்பித்த செகச்சித்திரத்தை யுபேட்சித்து எங்நோமுஞ் சின்மாத்திரமேதானுகக்காண்பன் உண்மையென்றுமயங்கான்,

இந்தச் சித்திரதீபிகையை அனுசந்தானம் பண்ணிவருகிறவன்செகத்தைச் சித்திரமாகத் தன்னிடத்திற்கண்டு மோட்சத்தையடைவன்.

சித்திரதீபிகை - முற்றும்.

இரண்டாவது

# திர்ப்தி தீபிகை.

சகலலோகங்களுக்கும் சகல வேதார்த்தத்தையும் வெளியண்ணினுலும் யாருக்கும் அறியப்படாத புருஷார்த்தத்தைப் பூரியிட்டவித்தியாரண்ணிய சுவாமிகள் புருடனுனவன் ஆத்மாவை யிவனென்றறிந்தால் பின்னை யாருக்குப் போகநிமித்தியமாய் எந்தப்போகத்தைவேண்டிச் சரீர்தாபப்படுவனென்கிற பிரகதாரண்ணிய உபநிஷதார்த்தத்தை அருளிச்செய்கின்றார்.

ச-கை. இந்த உபநிஷத்தெதைச்சொல்லுகிறதென்னில்.

உ-ம். சித்திரதீபிகையிலே சொன்னபடி செகத்து மித்தையென்றுமுண்மையான சின்மாத்திரமே தானென்றுந் திடப்பட்டசீவன்முத்தனுடைய திர்ப்தியைச்சொல்லுகின்றது.

ச-கை. இந்த வேதத்திலே புருஷனென்கிற சொல்லுக்கர்த்தமே தென்னில்.

உ-ம். சுபாவத்திலே சித்தைத்தவிர வேறுபொருளில்லாவிட்டாலும் விவகாரத்திலே மாயாகற்பிதமாகச் சீவனென்று மீசுரனென்றுமிரண்டுபேருண்டு அதிற்பார்வைமுதற் பிரவேசாந்தமான சிருஷ்டி முதலானதைச் செய்கிறவ னீசுவரன் சாக்கிரமுதல் மோட்சபரியந்தமான சஞ்சாரம் மிருவகிக்கிறவன் சீவன் இதிலதிட்டான சைதன்னியத்தோடேகூட்டிச் சீவனைப்புருஷனென்று சொல்லுகிறது.

ச-கை. அதிகாரியைச் சொல்லுகிற புருஷசத்தத்துக்கு அதிட்டானத்தையுங்கூட்டி யர்த்தமாக்கலாமோவென்னில்.

உ-ம். அதிட்டானத்தைத்தவிர ஆரோபத்திற்கு வேறேசொரூபமில்லாதபடியினாலும் விவகாரத்திலே யிருவருமொருவராகத்தோற்றுகையினாலு முத்தியிலே யாரோபமுமதிட்டானமாத்திரமாய்ப் போகிறபடியினாலும் இரண்டையுங் கூட்டிச்சொன்னோம்.

ச-கை. இந்தப்புருடன் அதிட்டானப் பிரதானமா யெப்படிபேசுவன் ஆரோ பப்பிரதானமா யெப்படிபேசுவனென்னில்.

உ-ம். அதிட்டானமாரோபத்திலே யடங்கியிருக்குங்காலத்திலே ஒருமைப்பாடாய் நான்சஞ்சாரியென்றேபேசுவன் ஆரோபத்தைத் தள்ளி யதிட்டானத்தைத் தானாய்க்காணும்போது நான் அசங்கன் சின்மாத்திரனென்றேபேசுவன்.

ச-கை. நான் அசங்கனென்னும்போது அசங்கனிடத்திலே யகங்காரங்கூடுமோவென்னில்.

உ-ம். முக்கியம் அமுக்கியம் முக்கியாமுக்கியம் என்று மூன்றுண்டு இதில் அதிட்டான வகங்காரங்களைப் பகுத்துக்காணாதமூடன் நான்வந்தேன் போனேனென்று சிதாபாசனாகப்பேசுவன் அதிட்டான வகங்காரங்களைப் பகுத்துக்கண்ட ஞானிமேற்சொன்னவிரண்டையுங்கழித்து முக்கியா முக்கியத்துடனேகூடி நான் அசங்கன் சின்மாத்திரனென்று பேசுவன் அதனால் முத்திக்கு ஹானிவிருத்தியில்லை.

ச-கை. அஞ்ஞானி ஞானியென்னு மிருவர்களுஞ் சிதாபாசரல்லவோ இவர்களில்ஞானி தனக்கு அன்னியராயிருக்கிற சாட்சியை நானென்னக்கூடுமோவென்னில்.

உ-ம். முக ஆபாசத்திற்குக் கண்ணாடியிலேயிருக்கிறமுகஞ் சுபாவமல்ல அதைப்பார்க்கிறமுகமேசுபாவம் இப்படிபோலே சிதாபாசனுக்கு சிதாபாசனாயிருக்கிறது மித்தையானபடியினாலும் சா

ட்சியாக மிஞ்சுகிறதே சுபாவமான படியினாலும் தன்னுடைய
சுபாவசைதன்யத்தை நானென்னக்கூடும்.

ச-கை. இப்படிச்சிதாபாசன் மித்தையானால் அவன் அனுசந்தானம்ப
ண்ணுகிறஞானமு மித்தையாகவேண்டும் அது சம்சாரத்தைப்
போக்கமாட்டாதேயென்னில்.

உ-ம். இந்தஞான மித்தையானாலு மிதுபோல சிதாபாசனுக்கு முன்
னிருந்த சம்சாரமும் பொய்யானபடியினாலே அதைப்போக்க
இந்தஞானமேபோதும்.

ச-கை. புருஷசத்தகத்திம் கர்த்தங்கேட்டோம் இனியாத்மாவை யிவரோ
நானென்றறிகிற தெப்படியென்னில்.

உ-ம். சந்தேகவிபரீதமறத் தேககமே தானென்றிருந்தாப்போல சாட்
சியே தானென்றறிகிறதிடமே இவரோநானென்கிறது.

ச-கை. இவரோ நானென்கிறசொல் பிரத்தியட்சத்தை யல்லவோ சொ
ல்லுகிறது அவர் செகத்திற்குப் பரோட்சமாயிருக்கக்கூடுமோ
வென்னில்.

உ-ம். பத்தாவானுக்குத் தன்னிடத்திலேதானே அஞ்ஞானம் ஆவர
ணம் விட்சேபப் பரோட்சஞானம் அபரோட்சஞானம் துக்க
நிவிர்த்தி தடையற்றவானந்தமென்கிற ஏழவத்தையுங்கண்டா
ப்போல ஆத்துமாவினிடத்திலும் இந்த ஏழவத்தையுங்கூடும்.

ச-கை. தசமனிடத்திலும் ஆத்மாவினிடத்திலும் இந்த ஏழவத்தையும்
அனுபோகமாகக் காட்டவேண்டுமென்னில்.

உ-ம். தசமனென்பதுபேரையும் எண்ணினவுடனே பத்தாவானைக்
காணாமல் திடுக்கிட்டுக்கலங்கினதே அஞ்ஞானம்-பத்தாவானை
க்காணோம் அவனெங்கேயோவென்கிற பராமரிசமேயாவரண
ம்-ஆற்றோடேபோனானென் றழுகிறதேவிட்சேபம்-ஆப்தனுப
தேசத்தினாலே சொற்காதிலோகம்போல பத்தாவானிருக்கிறா
னென்றறிகிறதே பரோட்சஞானம்-நீதானேபத்தாவானென் று
ஆப்தனெண்ணிக்காட்டவறிந்ததே அபரோட்சஞானம்- முன்
செத்தானென்றழுதவழுகைபோனதே துக்கநிவிர்த்தி- பத்தா
வானைச் சாகாமற்கண்ட சந்தோஷமே தடையற்றவானந்தம்-
இதுபோல தாஷ்டாந்தத்திற் சிதாபாசன் அனாதிசம்சாரத்தி
லேயழுந்தித் தன்னுடையசுபாவத்தை விசாரியாம லுபேட்சி
த்திருக்கிறதே வஞ்ஞானம்-அம்மார்க்கத்திலேவிசாரித்து ஆத்
மாவுண்டானாற் றோற்றாதோ ஆகையினால்| இல்லையென்கிறதே
யாவரணம் - சரீரத்திரயத்தையுஞ் சிதாபாசனையுந் தானாகக்கா
ண்கிறதேவிட்சேபம்-ஆப்தனுபதேசத்தினால் பிரமமுண்டென்

றறிகிறதே பரோட்சஞானம்- வேதாந்தவிசாரத்தினாலே பிரமம் நானென்றறிகிறதே யபரோட்சஞானம் நான் கர்த்தா போக்தாவல்லவென்று போனதே துக்கநிவிர்த்தி செய்யவேண்டினதெல்லாஞ் செய்துமுடிந்தது- அடையவேண்டினது மடைந்துமுடிந்ததென்கிற சந்தோஷமே தடையற்ற வானந்த மிப்படிச் சிதாபாசனுக்கு ஏழவத்தையுமுண்டு.

ச-கை. இதிலே பந்தப்படுத்துகிறவவத்தையேது மோட்சத்தைக்கொடுக்கிறவவத்தையேதெனனில்.

உ-ம். முந்தினமூன்றும் பந்தத்தைக்கொடுக்கும் பிந்தின நான்கும் மோட்சத்தைக்கொடுக்கும்.

ச-கை முந்தினமூன்றுக்குள்ளே யெந்தெந்த வவத்தை யெந்தெந்தவனர்த்தத்தைப்பண்ணுமென்னில்.

உ-ம். ஆத்மாவை நானறியேனென்கிற யுதாசினமே யஞ்ஞானத்தில் வந்தவனர்த்தம் கூடஸ்தரிருந்தாற் றோற்றாரோ வில்லையென்கிறவிபரீதமே ஆவரணத்தில வந்தவனர்த்தம் இகலோகபரலோகத்தைக்குறித்துச் செயகாரியமெல்லாநமமுடைய தொழில்தானே புண்ணியபாவபலமும் நம்மை விடாதென்கிறநிக்கமே விட்சேபத்தில் வந்தவனர்த்தம் இப்படி யிந்தமூன்றுமனர்த்தந்தரும்.

ச-கை. அஞ்ஞானமு மாவரணமும் விட்சேபத்திற்கு முந்தினதானபடியால ஏழவத்தையுஞ் சிதாபாசனுக்கென்று சொல்லக்கூடாதேயென்னில்.

உ-ம். விட்சேபங்காரியமாகிறதற்குமுன்னுங் காரணரூபமாய் பிரமத்தினிடத்திலேயிருந்தது அந்தச்சிதாபாசனிடமாய் முந்தினஇரண்டவத்தையும் வாசனரூபமாயிருந்ததாகையினால் ஏழவத்தையுஞ் சிதாபாசனுக்கல்லாமல் ஆத்மாவுக்கில்லை.

ச-கை. பூர்வாசாரிகளெல்லாரும் அஞ்ஞானத்திற்காதாரஞ் சிதாபாசனென்றுசொல்லாமல் பிரமமென்றுசொல்லுவானேனெனனில்.

உ-ம். ஆரோபத்திற்கதிட்டானம் பிரமமானபடியினாலே எல்லாம்பிரமத்திலாரோபமென்று சொன்னார்கள் நாமனுபவத்தினாலேயவத்தையெல்லாஞ் சிதாபாசனுக்கென்றுசொன்னோம்.

ச-கை. இந்த ஏழவத்தையுஞ் சிதாபாசனிடத்திலே யனுபவமெப்படியென்னில்.

உ-ம். நான்சஞ்சாரி-நான்பரோட்சஞானி-நான் அபரோட்சஞானி-நான்துக்கமற்றவன்-நான் கிருதகிர்த்தியனென்கிற விட்சேபமுத

லான அஞ்சவத்தையுஞ் சிதாபாசனபிமானிக்கக்கண்டதுபோல நான் அஞ்ஞானியென்றிருஷ்டியிலே பிரமமில்லையென்கிற முந்தின இரண்டவத்தையுஞ் சிதாபாசனே யனுபவிக்க அநுபோகங்கண்டோம்.

ச-கை. இனி நாலவத்தையு முத்திதருமென்கிற தெப்படியென்னில்.

உ-ம். பரோட்சஞானத்தினால் அசத்தாவரணமும் அபரோட்சஞானத்தினால் அசித்தாவரணமும் மூலாஞ்ஞானத்துடனே நட்டமாய்ப்போனபின்பு பிரமமேநானென்று வெட்டவெளியாய்த்தோற்றுகையினாலே ஆரோபிக்கப்பட்ட சீவத்துவம் நட்டமாய்ப்போனவுடனே கர்த்தத்துவமுதலான சகலதுக்கமும் விட்டுப்போம் சகலசங்சாரமும் நிவிர்த்தியானபடியினால் நாம் நித்தியமுத்தனெனகிற கெம்பீரங்கொண்டு தடையற்றவானந்தம்வரும் இப்படி நாலவத்தையு மோட்சங்கொடுக்கின்றவடைவு.

ச-கை. பிரமம் சுயம்பிரகாசமானால் பரோட்சஞானவிடயமாயெப்படியிருந்ததென்னில்.

உ-ம். பிரமமுண்டென்று பிரகாசிக்கையால் குற்றமில்லை.

ச-கை. சுயம்பிரகாசமானால் தானாய் விளங்கவேண்டுமல்லாமல் பிரமமுண்டென்று விளங்கவாவதேது ஆகையினால் இந்தப்பரோட்சஞானம் பிரமாணமல்லவேயென்னில்.

உ-ம். முந்தினநிர்ணயத்திற்கு அழிவுவந்ததுகொண்டும் கண்ணாக் காணாததுகொண்டும் தாறுமாறாய்க் கேட்டதுகொண்டும ஏகதேசங்கண்டதுகொண்டும் இந்நாலுவகைகொண்டு பரோட்சஞானம் அப்பிரமாணமாகவேண்டும் அந்தப்பரோட்சஞானத்திற்கிந்நாலுவகையுமில்லை.

ச-கை. இந்தப்பரோட்சஞானத்திற்கு நாலுதூஷணமுமில்லையென்கிறதெப்படியென்னில்.

உ-ம். பிரமமில்லையென்றொரு பிரமாணமுங்காணாதபடியினாலே முந்தினநிர்ணயத்திற்கழிவில்லையென்பதுகண்ணாரக்காணாததுகொண்டு பரோட்சஞானம் அப்பிரமாணமென்றால் சொற்காதிஞானமும் அப்பிரமாணமாகவேணும் பிரத்தியட்சமாகப் போகிறதை பரோட்சமென்றதுகொண்டு பிராந்தியென்னக்கூடாது ஏகதேசங்கண்டதுகொண்டு அப்பிரமாணமென்றால் கடஞானமுதலாகப் பிராந்தியாகவேணும் இப்படி யபரோட்சஞானத்திற்கொருதூஷணமுமில்லை.

ச-கை. நிரங்கிசவஸ்துவிலே அங்கிசகற்பனையெப்படியென்னில்.

உ-ம். தன்னைப்பற்றியில்லாவிட்டாலுந் தள்ளப்படுகிறஉபாதியைப்பற்றி அங்கிசகற்பனைவுண்டு.

ச-கை. உபாதியைப்பற்றி யெப்படியுண்டென்னில்.

உ-ம். பரோட்சஞானத்தினாலே யசத்தென்கிற அங்கிசந்தள்ளப்பட்டது பிரத்தியட்சஞானத்தினால் அசித்தென்கிற அங்கிசந்தள்ளப்பட்டது.

ச-கை. பிரத்தியட்சஞானத்திற்கானியில்லையோவென்னில்.

உ-ம். பத்தாவான் தானென்றுகண்டபிற்பாடு முன்கண்டவொன்பது பேருக்குள்ளே யில்லையென்று கண்டாப்போல ஆத்மாவேபிரமமென்றுகண்ட பின்பு முன்றாய்வழங்கின அகங்காரத்தைத் தானல்லவென்று தள்ளுமேயல்லாமல் நான்பிரமமென்கிறபிரத்தியட்சஞானத்தைக் கெடுக்கமாட்டாது,

ச-கை. இப்படிமுந்திப் பரோட்சஞானம் அவாந்திரவாக்கியத்தினாலே வருமென்றும் பின்பு மகாவாக்கிய விசாரத்தினாலே பிரத்தியட்சஞானம்வருமென்றும் எங்கேசொல்லியிருக்கிறதென்னில்

உ-ம். உத்தாலகர் சுவேதகேதுவுக்குமுந்திப் பரோட்சஞானஞ்சொல்லிப் பிறகு ஒன்பதாந்தரம் பிரத்தியட்சஞானஞ்சொன்னாரென்று சாமவேதத்திலும் வருணன் பிருகுவுக்குமுந்திப் பரோட்சஞானஞ்சொல்லிப் பின்பு அஞ்சாந்தரத்திலே பிரத்தியட்சஞானஞ்சொன்னாரென்று எசுர்வேதத்திலும தேவேந்திரன்முந்தி அவாந்திரவாக்கியத்தினாலே பிரமத்தைப் பரோட்சமாயறிந்து அபரோட்சமாகக்கண்டானென்று இருக்குவேதத்திலுஞ் சொல்லியிருக்கிறது இந்தப்படி யாசாரியசுவாமிகளும் வாக்கியவிருத்தியிலேவெளியண்ணியிருக்கின்றது.

ச-கை. மகாவாக்கியவிசாரத்தினால் அபரோட்சஞானம் வருமென்கிறது வாக்கியவிருத்தியில் எப்படி வெளிபண்ணி யிருக்கின்றதென்னில்.

உ-ம். அகங்காரமும் கூடஸ்தரும் தொம்பதத்திற்கர்த்தமென்றும் பரோட்சமாய் மாயாவுபாதியாயிருக்கிற செகத்காரண ஈஸ்வரனும் பிரமமுந் தற்பதத்திற்கர்த்தமென்றும் இரண்டுக்கும் விருத்தவந்தவிடத்திலே அவனேயிவன் இவனேயவனென்கிறலட்சணையினாலே கூடஸ்தரேபிரமம் பிரமமே கூடஸ்தரென்றறிந்தவுடனே இதுவரைக்கும் நாம்பிரமமல்லவென்கிறபுத்தியும் ஈசுவரசைதன்னியம பரோட்சமென்கிறபுத்தியும் இன்னவிடமென்று காணாமலோடிப்போம் ஆகையால் அபரோட்சஞானத்திற்கு மகாவாக்யமேகாரணம்.

ச-கை. வாக்கியத்தினாலே பிறந்தவறிவெல்லாம் பரோட்சமேயொழிய பிரத்தியட்சமல்லவேயென்னில்.

உ-ம். வட்டிக்காசைப்பட்டு முதலிழந்தானென்கிற சொற்போலப்பிரமமாகவேண்டுமென்றெண்ணின சீவனுக்குச் சுதசித்தமாயிருந்த பிரத்தியட்சமும் போமென்கிறது பரியாசமாய்க்காணும் நீயே தசமனென்கிறசொல் அவனைப்பிரத்தியட்சமாய்க்காட்டவில்லையோ.

ச-கை. அந்தக்கரணவுபாதியிருக்கையினாலே சீவன் பிரத்தியட்சமாகலாம் நிருபாதியாயிருக்கிறபிரமம் பிரத்தியட்ச மாகாதேயென்னில்.

உ-ம். இரும்பு பொன்னென்கிறதுகொண்டு விலங்கென்கிறது போகாததுபோல அந்தக்கரண கூட்டரவுசீவவுபாதியானாப்போல அதைத்தவிர்கிறதே பிரமவுபாதியாம்.

ச-கை. நானென்கிறது தள்ளப்பட்டபின்பு நான் பிரமமென்கிறஞானம்வரக் கணக்கில்லையேயென்னில்.

உ-ம். நானென்கிறது முற்றுந்தள்ளப்படாமல் உபாதிமாத்திரந் தள்ளப்பட்டு சைதன்னியந் தள்ளப்படாதபடியினாலே நான் பிரமமென்கிற அறிவுவரலாம்.

ச-கை, சாட்சிசுயம்பிரகாசமானால் விருத்திக்கு விடையமாகக்கூடாது கூடுமென்றாலும் பிரமம் விருத்தியில் சிதாபாசனாலு மறியப்பட்டுச் சட்மென்று வகுப்பறுமேயென்னில.

உ-ம். கடத்தைப்பார்க்க விளக்குங்கண்ணும்வேணும் விளக்கைப்பார்க்கக் கண்மாத்திரம்போதும் அதுபோல அப்பிரகாச மான்விடயத்தை யறியுமிடத்தில்விட யாஞ்ஞானத்தைப் போக்கவிருத்தியும் அதையறியச் சிதாபாசனும்வேணும் பிரகாசமான பிரமத்தை யறியுமிடத்தில் அஞ்ஞானத்தைப்போக்கவிருத்திபோதும் சிதாபாசன் தேவையில்லை-இருந்தாலும் வெய்யிலிலே விளக்குபோற்குன்றிப் பிரமத்திலே லயமாய்ப்போவன் விருத்தி வியாப்தியுண்டு சிதாபாசனுக்கு பலவியாப்தி யில்லையென்று வேதமுஞ்சொல்லுகின்றது இந்த அபரோட்சஞானமேயிவரே நானென்கிற வேதத்திற்கர்த்தம்.

ச-கை. ஆசாரியசுவாமிகள் மறுபடியும் பலகாலஞ்சிரவணம் பண்ணச்சொல்லி விதித்தபடியினால் இந்தப்பிரத்தியட்ச ஞானந்தானுந் திட்டமல்லவோவென்னில்.

உ-ம். வேதபேதங் காமியபேதங்கொண்டு கர்மபேதங்கண்டாப்போல ஞானபேதம்வராதென்கிறதை ஆறுலிங்கத்தினால் சகலவே

தத்திற்கும் அர்த்தவிசாரம்பண்ணவும் எல்லாவேதத்திலுமொருபடித்தாய்க்கண்ட இந்தஞானத்திற்கு விபரீதபாவனைபோகத்தக்கதாக மனனம்பண்ணவுமருளியது.

ச-௯க. விபரீத பாவனையேது அதற்குக் காரணமேது அதெதினாலே போம் அது பண்ணுகிறவடைவேதென்னில்.

உ-ம். தகப்பனிடத்தில் புத்திரன் சத்துருபுத்திபண்ணுகிறாப்போலத் தேகம் நான் பிரபஞ்சமெய்யென்கிற விபரீதபாவனை வெகுசென்மத்திலே பிடித்துச்செய்த சென்மாந்தர வாசனையே யிதற்குக்காரணம் நான்பிரமம் தேகாதிப் பிரபஞ்சமித்தையென்கிற தத்துவபாவனையினாலிதுபோம் பிரமத்தைப் பலகாலுஞ் சிந்திக்கக் கேட்கப்போதிக்கவென்கிற பிரமாப்பியாசமே பண்ணுகிற அடைவு.

ச-௯௨. எந்நேரமும் இது வேலையாயிருந்தால் நிர்வாகமெப்படி நடக்கும் தத்துவபாவனைக்குக்காரணமேது அந்தக்காரண மெதினாலேவருமென்னில்.

உ-ம். தத்துவவிசாரம்பண்ணுகிறவன் கருமமெல்லா மீஸ்வரனேநிருவகித்துக்கொள்ளுவன ஏகாக்கிரசித்தமேகாரணம் இதுவுபாசனையினாலே வரவேண்டும்.

ச-௯௩. மந்திரசெபம்போலவு மூர்த்தித்தியானம்போலவும்தத்துவபாவனை பண்ணுகிறதற்கு நியமமுண்டோவென்னில.

உ-ம். மந்திரபல மில்லாததற்குத் திருஷ்டபல மில்லாதபடியினாலே நியமமும் நியமந்தப்பினால் தோஷமுமுண்டு அசனம் பண்ணுகிறது பசியைப்போக்கிறாப்போலத் தத்துவபாவனை விபரீதபாவனையைப்போக்கிறது திருஷ்டபலமானபடியினால் நியமந்தேவையில்லை,

ச-௯௪. பிரமாப்பியாசம்பலப்படப் பண்ணச்சொன்னபடியினால் நிர்ப்பந்தமல்லவோ வென்னில்.

உ-ம். சஞ்சலமாயிருக்கிறமனதிற்கு நியமம்பூண்ட செபமும் வேறேயொன்றைச் சற்றேநினைத்தாலுங் கெட்டுப்போகிற மூர்த்தித்தியானமு நிர்ப்பந்தமன்றி கூத்துப்பார்க்கிறதுபோல வெகுவாயெடுத்துக்காட்டும் உச்சாகசத்தைகளோடே கூடியிருக்கிறபிரமாப்பியாச நிர்ப்பந்தமல்ல விநோதமாம்.

ச-௯௫. மனதுசஞ்சலமென்கிறதிலே பிரமாணமேதென்னில்.

உ-ம். தான்போனதேவழியாய்ச் சஞ்சலமே சுபாவமாயிருக்கிற மனதை நிறுத்துகிறது வாயுவை நிறுத்துகிறதற்குச் சரியென்கிற

திதையுஞ் சமுத்திரத்தைக்குடித்தாலு நெருப்பை விழுங்கினு லும்மேருவைப்பிடுங்கினலும் மனதை நிறுத்தக் கூடாதென கிற வாசிட்டமும்பிரமாணம்.

ச-கை. இப்படி விட்சேபமாயிருக்கிறமனதிற்குச் சின்மாத்திரமேஆத்மா மற்றுள்ளதெல்லா மித்தையென்கிற நிருத்தியாசனமுங் கூடாதேயென்னில்.

உ-ம். காவியம் தர்க்கம் செட்டு வேளாண்மைகளிலே விழுந்தமனதிற்கு நிருத்தியாசனங்கூடாது மற்றை மனதிற்குக்கூடும்.

ச-கை. இப்படியானற்போகனதிகளும்விட்சேபமல்லவோவென்னில்

உ-ம். சொற்ப விட்சேபமான போகனதிகளும் அநுசந்தானத்தைக் கெடாதபடியினல் இது விட்சேபமல்ல தானே பிரதானமாயிழுத்துக்கொண்டுபோகிற தர்க்கமுதலானது தத்துவத்தைக்கெடுக்கையினல் இதுவே கனவிட்சேபமாகையினல்இதாவித்தைக்கு மிடங்கொடுக்கவொண்ணது.

ச-கை. இப்படி யெல்லாவற்றையும்விட்டால் சீவிக்கப்போகிற தெப்படியென்னில்,

உ-ம். அசனத்தைவிடச்சொன்னற் சீவிக்கப்படாதேயல்லாமல் இதரசாத்திரத்தை விடச்சொன்ன லெப்படி சீவிக்கிற தென்கிற துராங்காரத்தை விட்டுவிடு,

ச-கை. ஞானியாயிருக்கிற ஜனகராஜா ராச்சியபரிபாலனம் பண்ணவில்லையோவென்னில்,

உ-ம். ஜனகராஜா திடஞானத்தாலேபண்ணினர் உனக்குந்திடஞானமுண்டானல் பிராரத்தவசத்தினலே தர்க்கபாடமுதலானதுகளைச் செய்தாலுமுத்தமம்,

ச-கை. இப்படி பிராரத்த வசமென்றுதானே அநாசாரத்தைப்பண்ணலாமோவென்னில்,

உ-ம். கர்மத்தை யொருவராலு மறிக்கப்படாது.

ச-கை. ஆனலறிந்தஞானிக்கு மூட்னுக்கும் பேதமேதென்னில்,

உ-ம். வழிப்போக்க ரிருவருக்குந் தங்குமூர்சரியானலும் அறிந்தவன் திடமாய்ப்போக அறியாதவனேங்கி யிருக்கிறதுபோல, ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் பிராரத்துவஞ்சரியானலும் ஞானியகர்த்தாவென்று திடமாயிருப்பன் அஞ்ஞானி யேங்கிச்சாவன் இதுவேபேதம்,

ச-கை. இவரே நானென்கிற அபரோட்சஞானமறியப்பட்டது ஆருக்குப்போக நிமித்தம் எந்தப்போகத்தைக் குறித்தென்கிற வாக்கியத்திற் கர்த்தமேதென்னில்,

உ-ம். இப்படிச் சாட்சாத்காரம் வந்தவனுக்கு விடயமும் பொசிப்பானுமில்லை,

ச-கை. பிராரத்தபோகம் பொசிக்கையில் இந்த இருவகையு மில்லை யென்கிற தெப்படியென்னில்,

உ-ம். இந்திரஜாலத்திற் கெந்தர்வநகரத்தைப் பார்க்கிறவ னொருபோகத்தையு மிச்சியாமல் சிரித்துப்போட்டுப் போகிறதுபோலச் சாட்சாத்காரம் வந்தவனுக்குச் செகத்து பொய்யாகப்போனபடியினால் விடயமும் பொசிக்கிறவனு மில்லாமல் எண்ணெயற்றவிளக்குப்போலாசை சங்கற்பமெல்லாமணைந்துபோம்,

ச-கை, பிராரத்தபோகத்தைப் பொசித்தாற்றான் ஆனியேதெனில்.

உ-ம். ஆனியொன்றுமில்லை தோஷதிருஷ்டியினாலே யிஷ்டப்பட்டுப்பொசிக்கவுமாட்டான்.

ச-கை, விடையத்திலே யென்னதோஷமிருக்கின்றதென்னில்.

உ-ம், அர்த்தத்தைத்தேடுகையிலு மிரட்சிக்கையிலு மழிக்கையிலுந் துக்கமேயல்லாமல் சுகமில்லை மலமூத்திரம் நரம்பெலும்புசதையாலே நிருமித்த ஸ்திரீபிண்டத்திலே யெதுநல்லது பசித்தாலும் விஷத்தைத்தின்னுகதுபோல ஞானியு மித்தைவேண்டான் இத்தனை தோஷவிஷயம் பிராரத்தத்தினாலே பொசிக்கமூண்டாலுங் கிலேசத்துடன் பொசிப்பானேயொழியச் சந்தோஷமாய்ப்பொசியான்.

ச-கை, பொசிக்கையில் கிலேசமேதென்னில்.

உ-ம், இன்னம் இந்தக்கன்மந் தொலையவில்லையோ வென்கிறதேகிலேசம்.

ச-கை, உம்முடைய பிரமஞானமு மிப்படிக்கிலேசமாச்சுதோ வென்னில்.

உ-ம், இந்தச்சங்சாரதாமவிரத்தியேயல்லாமற்கிலேசமல்ல.

ச-கை. இந்தவிரத்தி யெதினாலே வந்ததென்னில்.

உ-ம். செகத்துப் பிராந்தியென்கிற திடத்தினால் வந்ததாகையினால் ஞானிகிடைத்ததுகொண்டு திருப்தியடைந்திருப்பன் அஞ்ஞானியெத்தனைபோகங்கிடைத்தாலுந் திருப்தியடையான்.

ச-கை. அஞ்ஞானிக்குப் போகமெல்லாம் பொசித்தபிற்பாடாகிலுந்திருப்திவாராதோவென்னில்.

உ-ம், மேன்மேலு நெய்விட்டதினா லக்கினியணையுமாகில் அஞ்ஞானிக்கும் போகத்திலாசையடங்கும் மற்றப்படி வயிராக்கியத்தினாலாசையடங்காது.

ச-ங்கை, ஞானியுங் கர்மவசத்தினாலே கிடைக்கிற போகம்பொசிக்கிறவ ழியே யழுந்திப்போகானோவென்னில்.

உ-ம், பிடித்துவிட்டராசா வொருகிராமங்கொண்டு சந்தோஷிக்கிறு ப்போல ஞானியுங்கிடைத்ததுகொண்டு சந்தோஷிப்பன் அறி ந்து திருடுகிறதிருட்டு விநோதமாகிறுப்போல அந்தப்போகமு மெனமேலுங் கர்மசங்கற்பத்தை யுண்டாக்காது.

ச-ங்கை, இப்படிக்கொத்த விவேகமே மனதிலுறைத்திருந்தாற் பிராரத் தகன்மம் மேலெழுந்தவாசையை யெப்படி யுண்டாக்குமென னில்.

உ-ம், இச்சை யனிச்சை பரவிச்சையென்று பிராரத்த மூனறுவித மானபடியினால் இச்சையும்வரலாம்.

ச-ங்கை, இது ஆகாதது வென்கிறத்திலே யாருக்கானாலு மாசைவரு மோவென்னில்.

உ-ம், அபத்தியம் பண்ணுகிறவனுக்குந் திருடுகிறவனுக்கு மிராஜஸ் திரீயை யிஷ்டம்பண்ணுகிறவனுக்குந் தனக்காகாதென்றறிந்தி ருந்து மாசையேன்வந்தது ஆகையினால் இத்தை யீஸ்வரனாலு மறிக்கப்படாது இதற்கு ஞானம்வந்தாலு மவனவன் பிரகிரு திபோகாதென்கிற கீதாவசனமே பிரமாணம்.

ச-ங்கை. நீர் ஏழைகளுக்காகப் பரிகரித்துச்சொல்லுகிறீர் சாமர்த்தியமு ண்டானால் அந்தக்கன்மத்தை மறிக்கலாமேயென்னில்.

உ-ம், அப்படியாமானால் நளன் ரகுநாதன் தன்மபுத்திரரிவர்கள் துக் கப்பட்டக் கணக்கில்லை ஈஸ்வரனும் பஞ்கிருத்தியத்திலே யுழ லக்கணக்கில்லை யாகையால் ஈஸ்வரகற்பனை யொருவராலுந்த ள்ளப்படாது.

ச-ங்கை. இச்சா பிராரத்தத்தினுடைய பலமறியப்பட்டது இனி யனிச் சாப்பிராரத்தமாவதேது அதற்குப் பிரமாணமேதெனில.

உ-ம், நாம் மனதிலே பண்ணவேண்டாமென்றிருக்கிற காரியத்தைப் பெலவந்தத்தினாலே நம்மைக்கொண்டு பண்ணிவிக்கிறவனார் நாம் வேண்டுமென்றிருக்கிறதை விலக்கிவைக்கிறவனாரென்று கேட்ட அர்ச்சுனனுக்கு அவனவன் கர்மந்தானே செய்விக்கி ன்றதென்ற கிருஷ்ணவாக்கியமேயுத்தரம் அதுவேபிரமாணம்.

ச-ங்கை, இனிப்பர இச்சாப்பிராரத்துவ மாவதேதென்னில்.

உ-ம். தனக்கிச்சையுண்டாயிருந்தாலும் இல்லாதிருந்தாலும் சேர்ந்த பேரைப் பற்றிவருகிற சுகதுக்கம்.

ச-ங்கை. இப்படியானால் எத்தை யிச்சிக்கப்போகிறுனென்கிற வேதவா க்கியம் ஆசையை மறுக்கச்சொல்லுவானேனென்னில்.

உ-ம். இந்தவேதம் இச்சையை விலக்கவில்லை வறுத்தவிதைபோலே மூளையற்று வாதிக்கின்றது.

ச-கை. வாதிக்கிறதாவ தெப்படியென்னில்.

உ-ம். வறுத்தவிதை முளையாவிட்டாலுந் தீனிக் குதவுகிறாப்போல ஞானியாசையு மகப்பட்ட போகத்தோடே திரும்புமல்லாமல் மேன்மேல்வினைகொண்டு கர்மசங்கற்பங்களைப்பண்ணாது அது வேவாதை.

ச-கை. இவனுக்கிப்படி விடையத்திலே கரிசனமெதினாலே வரவில்லை யென்னில்.

உ-ம். விடையஞ் சத்தியமென்கிற பிராந்தியில்லாதபடியினால் அதிற் கரிசனமவரவில்லை.

ச-கை. விடையப்பிராந்திக்கு லட்சணமேதென்னில்.

உ-ம். நமக்கிருக்கிற யோகமெல்லாம் நாளுக்குநா ளுத்தரோத்தரமா கவேண்டுமென்றும் ஒருக்காலு மாறுப்படிஷாயிருக்கவேண்டு மென்றும் இடை இடையே விக்கினங்கள் வராதிருக்கவேண்டு மென்றும் வருகிற வாஞ்சையேபிராந்தி.

ச-கை. இதெதினாலேபோமென்னில்.

உ-ம். வருந்தியழைத்தாலும் வாராதவாரா பொருந்துவனபோவென் முற் போகாவென்கிறபோதமே யந்தப்பிராந்தியைத்தள்ளும்.

ச-கை. ஞானிக்கு மஞ்ஞானிக்கும் பொதுவாயிருக்கிற விடயம் ஒருத் தருக்குப் பிராந்தியைக்கொடுப்பானேன் ஒருத்தருககுப் போ தத்தைக்கொடுப்பானேனென்னில்.

உ-ம். தனக்குப்பிராப்தியில்லாததை யடையவேண்டுமென்று சங்க ற்பித்த பிராந்தனுக்குத் துக்கத்தைக்கொடுக்கும் இது மாயாம யமல்லோ உள்ளபடி முடியுமென்கிற ஞானிக்குச் சங்கற்பத் தையு முண்டாக்கமாட்டாது அது துக்கத்தை யெப்படி கொ டுக்கும்.

ச-கை. இந்தச்செகத்தை மாயாமயமென்று பார்க்கிறதெப்படி இதில் ஆசத்தி யெப்படிபோமென்னில்.

உ-ம். சொற்பன மிந்திரசாலம்போ லின்னபடிவரும் இன்னபடிபோ மென்று நிர்ணயப்படாமற்றோற்றி அழிந்துபோகையினால் மா யாமயமென்றுபார்க்க அப்போது சொற்பனமுஞ்சாக்கிரமுஞ் சமமாம் அந்த நிலைமையுறைத்தால இதில் ஆசத்திபோம்.

ச-கை. இந்தத்தத்துவஞானத்திற்கு ஆக்கிரகமெதினால் பிராரத்தகன் மத்திற்காக்கிரக மெதினாலேயென்னில்,

உ-ம். ஞானத்திற் காக்கிரகஞ் செகத்து மித்தியாவானேயில பிராரத்தத்திற் காககிரகஞ் சீவனுக்கு சுழுத்தியில.

ச-கை. பிராரத்தகன்மம் ஞானத்தைக்கெடாதோவென்னில்.

உ-ம், செகத்துச் சத்தியமாகத் தோற்றினுலொழிய பிராரத்த கன்ம போகங் கூடாதென்றுல் அப்போது ஞானத்திற்கு விரோதி செகத்துமித்தையென்றறிகிற விவேகத்தைக்கெடாமற் சொற்பன மிந்திரசாலம்போலே போகதரிசனங் கொடுக்கிறபடியினுல் பிராரத்தம் ஞானத்தைக்கெடாது.

ச-கை, ஞானந்தான் பிராரத்தத்தைக் கெடாதோவென்னில்.

உ-ம், ஞானம்வந்தவுடனே செகத்துத் துடைபட்டுப்போனுற் பிராரத்தத்தைக்கெடுக்கும் அப்படிக்கெடாமல் மாயாமயமென்று தோற்றுகையினுல் ஞானத்திற்கும் பிராரத்தத்திற்கும விரோதமில்லை.

ச-கை, யாதொரு அவத்தையில் எல்லாம் ஆத்மாவாய்ப்போம் அப்போது எவனெந்த விந்திரியத்தினுல் எந்தவிஷயத்தைப்பொசிக்கப்போகிறுனென்கிறவேதம் ஞானம்வந்தவுடனே சகலமுந் துடைபட்டுப்போமென்றல்லவோசொல்லுகின்றது,

ச-கை ஞானிக்குப் பிராரத்தபோக மெப்படிகூடுமென்னில்.

உ-ம், இந்தவேதஞ் சுழுத்தியையும் விதேககைவல்லியமுத்தியையுஞ் சொல்லுகிறதேயல்லாமல் சீவன் முத்தியைச் சொல்லவில்லையென்று வியாசசூத்திரத்திலேசொல்லும்.

ச-கை. நீர்சொன்னபடியே யர்த்தம் மற்றைப்படி கூடாதென்னில.

உ-ம். யாக்கியவற்கர் முதலான பூர்வாசாரிகளுக்குந் தொய்த திருஷ்டியிருந்தபடியினுலே ஞானமில்லையாகவேணும்.

ச-கை. அவர்களுக்குத்தொய்த திருஷ்டியில்லையேயென்னில.

உ-ம், அப்போது அவர்கள் சீஷாளைக்குறித்து ஞானஞ்சொல்லாமலிருக்கவேணும் அப்படியல்லாமலுபதேசம்பண்ணின கிரந்தங்களுமிருக்கின்றது.

ச-கை. அவர்களுக்குப் பிரபஞ்சந் தோற்றுத நிருவிகற்ப சமாதியில் ஞானமுண்டென்னில்,

உ-ம். அந்தப்பட்சத்துக்குச் சுழுத்தியு ஞானமாகவேணும்.

ச-கை. சுழுத்தியில் நான் பிரமமென்கிற ஞானமில்லையேயெனில்,

உ-ம் ஆகையினுல் நான் பிரமமென்கிறசீயன் முத்தியேஞானம் செகத்தை மறக்கிறதல்ல.

ச-கை. இவ்விரண்டுங்கூடியோ ஞானமென்கின்றதென்னில்,

உ-ம். தொய்தந்தோற்றுதலே ஞானமென்கிற வுன்னுடையபட்சங் கடங்களுக்குமுண்டு கொசுகுகூப்பிடுகிறதுள்ளாயக் கேளாதா கையினாலே நிருவிகற்பசமாதியுங் கடஞானத்துக்கீடல்ல.

ச-கை. ஆகையினாலே ஆத்மவிசாரமே ஞானமல்லாமல் தொய்தமறக் கிறதல்லாதுபோலவே யிருக்கின்றதென்னில,

உ-ம். இந்தச்சித்தாந்தந்தெரிந்தபோதே நீயேகிருதகிருத்தியன்.

ச-கை. பொல்லாதமனதை நிறுத்தவேண்டாமோவென்னில்,

உ-ம். தான் நாட்டமான விடயத்தை மாயாமயமென்றே மறிக்கவேண்டும்.

ச-கை. எந்தப்போகத்தை யிச்சிக்கப்போகிறானென்கிறசொல்லுங் கர்த்தந்தெரிந்தது ஆருக்குப் போகநிமித்தமென்கிறசொல் எதைச்சொல்லுகின்றதென்னில்,

உ-ம். போசிக்கிறவனே யில்லையென்று சொல்லுகின்றது.

ச-கை. போசிக்கிறவனெப்படியில்லையென்னில்,

உ-ம், கூடஸ்தர் நிருவிகாரியானபடியினாலேசுகதுக்கபோகவிவகாரம் நமக்கில்லை சிதாபாச னாரோபமானபடியினால் அவனுஞ் சுகதுக்கம் போசிக்கிறவனல்ல ஆகையினால் அதிட்டானத்தை விட்டு ஆரோபமிராதபடியினால் இருவரையு மொருவராய்க்கண்டு இவரோ போசிக்கிறவரென்று லோகத்தார் சொல்லுகிறதேயல்லாமல் விவேகம்பண்ணினால் போசிக்கிறவனில்லை.

ச-கை. இப்படியானா லாத்மாதான் போசிக்கிறவராச்சுதேயெனில்,

உ-ம். ஆத்மா ஆரென்று விசாரிக்குமிடத்தில் சகலவேதங்களும் இந்தலவுகிக ஆத்மாவைத்தொடங்கி ஆனந்தமயன்மட்டாகக் கழித்துப்போட்டுக் கூடஸ்தனையல்லவோ ஆத்மாவென்று சொல்லுகின்றது.

ச-கை. சிதாபாசனில்லாதவனானால் அஞ்ஞானதிசையிற் றானெப்படி போசிக்கிறவனாவானென்னில்,

உ-ம். கூடஸ்தருடைய சத்தையைத் தன்னிடத்தில் இறக்கிக்கொண்டு நமக்குப்போக முண்மையென்று கலங்கி விஷயங்களைக் காங்கிஷித்தான்.

ச-கை. இப்படியானால் இவிடத்தில பண்ணவேண்டிய அனுசந்தானம் எப்படியென்னில,

உ-ம். லவுகிகத்திலே போசிக்கிறவன் பிரியமாயிருக்கிறவிஷயங்களைப் பார்க்கிலுந் தன்னைப் பிரியமாய்க் காண்கிறாப்போல விவேகியு

ன் கூடஸ்தருக் கன்னியமெல்லாம் அப்பிரியமென்று தள்ளிக் கூடஸ்தனையே பிரியவஸ்துவாய்க் காணவேண்டும்.

ச-கை. பிரியமாகக்காண்கிறதெப்படியென்னில்,

உ-ம். பாமரனாகவிருக்கிறவன் புட்பசந்தன வனிதாதி விஷயத்தில் பண்ணுகிறவிச்சையையும் வாதம்பண்ணவேண்டுமென்கிறவன் காவியநாடகங்களில் பண்ணுகிறவிசாரத்தையும் கன்மவுபாசகர் செபயாகங்களில் பண்ணுகிற விசுவாசத்தையும் யோகியானவன் மனதுநிறுத்தப்படுகிற வருத்தத்தையும் கூடஸ்தரில் பண்ணவேண்டும்.

ச-கை. இப்படிபண்ணினால் வரப்போகிறபலமேதென்னில்,

உ-ம். போகம் வித்தை புண்ணியலோகம் அணிமாதிசித்தி இவைகள் இந்த நாலுபேருக்கும் வருகிறதுபோலக் கூடஸ்தராயிருக்கிற தன்னை மூன்றவஸ்தையுங் கடந்தவரா யேகமாய் சதாசிவமாய்க் கண்டவனுக்குச் சொற்பனம்போலப் புண்ணியபாவகர்மத்துடக்கற்று முத்தனாவான்.

ச-கை. இப்படி கண்டவனுக்குப் போசிக்கிறவனொன்று வருப்பற்றதென்னில்,

உ-ம். அஞ்ஞானியாயிருக்கிற சிதாபாசனுக்கு,

ச-கை. இவன் சாட்சியைவிட்டிராதபடியினாலே இவனைப்பற்றிப் போகங்கள் சாட்சியிடத்திலும் ஆரோபிக்கப்படாதோவென்னில்,

உ-ம். சிதாபாசன் ஓரவஸ்தையிலே கண்டது ஓரவஸ்தையிலேகாணாத மாயாமயத்திற்கு உட்பட்டவனானபடியினாலே தானில்லாமற்போகிறவனாகக்கண்டு ஏங்கிச் சாகக்கிடக்கிறவன் பெண்கொள்ள வாஞ்சியாததுபோலத் தனக்குள்ளாய போகம்வேண்டான் முன்போலத் தானே போசிக்கிறவனென்று சொல்லவேண்டில் மூக்கறையன்போலே குனறிப் பிராரத்துவ போகம் போசிக்கிறதினால் எப்படி சாட்சியினிடத்தில் ஆரோபிக்கப்படும் ஆகையினால் வேதமும் போசிக்கிறவனில்லையென்றே சொல்லுகின்றது,

ச-கை, சரீரானுதாப மில்லையென்கிற வேதத்திற்கு அர்த்தமெப்படியென்னில்.

உ-ம். ஞானிக்கு மூன்றுசரீரத்தி னத்தியாசமும் போனபடியினால் மூன்றுசரீரச்சுரங்களும் இவனைத்தாபப்படுத்தாது.

ச-கை. மூன்றுசரீரமேது அதுகளில் எந்தெந்தச்சுரமிருக்கிறது அது இவனுக்கு எப்படி தாபப்படுத்தாதென்னில்.

உ-ம். தூலசூட்சும காரணமென்று சரீரமூன்றாயிருக்கும் வாதபித்த சிலேத்தும முதலானவாதையும் இடிசூடுமுரித்தல் முதலான பீடையும் தூலசரீரத்தில் சுரம் காமக்குரோத மோகம் இலச்சை பயமுதலானதுஞ் சமதம சிரத்தைமுதலானதுஞ் சூட்சுமசரீரத்தில் சுரம்பலப்படக்காரியதேகாதிகட்கு வித்தாய்வாசனையை யுண்டாக்குகிறதே காரணசரீரத்தில் சுரம்; நூலைவிட்டுப் புடலைவிராததுபோலவும் மயிரைவிட்டுக் கம்பளி யிராததுபோலவும் மண்ணைவிட்டுக் கடமில்லாததுபோலவும் அததுக்குச்சொன்ன சுரங்களைவிட்டுச் சரீரங்களேயில்லை இம்மூன்றுசரீரங்களுக்குஞ்சொன்ன சுரமேசுபாவசித்தம்போலச்சிதாபாசனுக்குப் பிரகாசமே சுபாவமல்லாமல் அவனுக்கொருசுரமுஞ் சுபாவமாயில்லை இப்படிச் சிதாபாசனுக்கு முதலாயில்லாத சுரமசாட்சிக்குவரப்பிரசித்தியேயில்லை ஆகையினால்வேதமும் ஞானிக்குச் சரீராநுதாபமில்லையென்று சொல்லுகின்றது.

ச-கை. இப்படி யில்லாதசுர முன்னுளெப்படித் தபிப்பித்ததெனில்.

உ-ம். அஞ்ஞானத்தினால் புத்திரதாராதிகள் தபிக்கிறதைத்தான்றபிக்கின்றேமென்கிற மூர்க்கன்போலச் சரீரத்திரயத்தையுஞ்சீவனையும் கூடஸ்தருடைய ரூபமாயெண்ணிக்கொண்டுசரீரங்கள் தவிக்கிறதைத் தான் தவிக்கின்றதாகப் பிரமித்தான்.

ச-கை. ஞானம்வந்தபின்பு தவியாமலிருக்கவேணுமேயல்லாமல் திரும்பத் தவிப்பானேனென்னில்.

உ-ம். விவேகத்தினால் பிராந்தியைத்தள்ளித் தன்னைச் சாட்சியாகவறிந்தபின்பு முந்தினதாபம்போய்விட்டது இந்தப்பழுதைக்காகப்பயந்தோடி யிடுப்பொடித்துக்கொண்டோமென்கிறதுபோவில்லாத சங்சாரத்தைமுந்தியென்மேற்போட்டுக்கொண்டோமென்கிற வெறுப்பைத்தாபமென்கிறாய்.

ச-கை. சாட்சி நானென்றறிந்தாற்போதாதோ திரும்பப்பலப்படஅநுசந்தானம்பண்ணுவானேன் தேகநானல்லவென்று பாவிப்பானேனென்னில்,

உ-ம். இல்லாத சங்சாரத்தை யும்முடையபேரில் ஆரோபித்தேன் அதைப் பொறுத்துக்கொள்ளுமென்று சாட்சியைச் சரணமாயடைகிறதாகவும் பண்ணினபாவம்போகப் பிராச்சித்தம்பண்ணிக்கொள்ளுகிறதுபோலச் சஞ்சிதமுதலான கருமம்விட்டுப்போகத்தக்கனையாகவும் அநுசந்தானம்பண்ணுகிறது பரங்கிகையிலே யகப்பட்டவன் வெகுபிராச்சித்தத்தினால் பிராமண

னுடனே கூடினபின்பு திரும்பப்பாங்கிகளைக்கண்டு ஓடுங்கிறு ப்போல தேககானல்லவென்று அனுசந்தானம்பண்ணுகிறது,

ச-கை. ஞானியாயிருக்கிறவன் முன்போல பிரமஞ்சவியாபாரம் பண்ணுமல் நாணுவானேனென்னில்,

உ-ம். குய்யத்திலே குட்டம்பிடித்தவேசி தன்னையறிந்தவர் முன்புநாடகம்பண்ண நாணுவதுபோலச் சிதாபாசனும் தன்னை மாயாமயமென் றறிந்தபின்பு தன்னைக் கர்த்தாவென்னநாணுகிறுன்,

ச-கை. இப்படி ஞானம்வந்தபின்பு நடுக்கங்களும் நாணங்களும் வரலாமோவென்னில்,

உ-ம். இளவரிசையா யிருக்கிறவன் இராச்சியத்திற்கு இராஜாவை அனுசரிக்கிறுப்போலப் பிரமக்கையறிந்தவன் பிரமமாவனென்கிற வேதத்தைக்கேட்டுக் கெம்பீரமாக அனுசந்தானம்பண்ணுகிறதேயல்லாமல் பயமில்லை,

ச-கை. இப்படிப்பட்ட பிரமஞானம் சிதாபாசனைக்கொல்ல வந்தபடியினால் ஒருவன் தான்சாகமருந்துகுடிப்பானேவென்னில்,

உ-ம். தேவனுகலாமென்கிற சந்தோஷத்தினலே கங்காப்பிரவேசம் பண்ணுகிறுப்போலப் பிரமமாகலாமென்கிற சந்தோஷத்தினுல் ஞானம் அப்பியாசிப்பன்,

ச-கை. கங்காப்பிரவேசம் ஆரம்பித்தவுடனே தேவனுகிறுப்போலஞானிகளேன் உடனே பிரமமாகவில்லையென்னில்,

உ-ம். ஆரம்பித்த கருமமுடிந்தும் சரீரசிக்குமட்டும் மனுஷனென்கிறபேர் நிற்கிறுப்போலப் பிராரத்துவதேகம் விழுமளவும் சிதாபாசனென்கிறபேர் போகாது.

ச-கை. பழுதையென்றறிந்தவுடனே பாம்பென்கிறதுபோகவில்லையோ அப்படியே பிராரத்தகன்மமும் போகவேண்டு மல்லவோவென்னில்,

உ-ம். பழுதையென்றறிந்தவுடனே பாம்பென்கிறதுபோனுலும் அதன்காரியமான பயம் மெள்ளமெள்ளத் தணிகிறுப்போலவும் பத்தாவானுக்கு இடித்துக்கொண்டபுண் மெள்ள ஆறுகிறுப்போலவும் பிராரத்த கன்மபோகமும் பொசித்தே தொலையவேண்டும்.

ச-கை. ஞானம்வந்தும் பிராரத்துவதுக்கமிருந்தால் துக்கநிவர்த்தியென்கிற ஆறுமவத்தை யெப்படிகூடுமென்னில்,

உ-ம், பத்தாவானைச் சாகாமற்கண்ட சந்தோஷமானது வேதனையைத்தெரியவொட்டாததுபோலத் தானே பிரமமென்று முத்தனு

னவனுடைய சந்தோஷம் பிராரத்துவ துக்கத்தைத் தெரிய வொட்டாது ஆகையால் ஆருமவத்தைகூடும்.

ச-கை. சிதாபாசனுடைய ஆருமவத்தை யனுபவந்தெரிந்தது இனித் தடையற்ற வானந்தத்தை வகையுடனே சொல்லுமெனில்.

உ-ம். இகலோக பரலோகத்தைக்குறித்துப் பண்ணவேண்டிய கன்ம மெல்லாம் பண்ணிமுடிந்தபடியினால் மோட்சமும் பிரமநாமெ ன்றறியப்பட்டபடியினால் மனதில் ஒரு குறையு மில்லையென்ற துகொண்டு தடையற்ற வானந்தமுண்டு.

ச-கை. காண்டத்திரயத்திற்சொன்ன அனுஷ்டானத்தில் ஒன்றும்ப ண்ணாமல் எல்லாம்பண்ணி முடிந்ததென்கிற தெப்படி யென் னில்.

உ-ம், எல்லாந் தீர்ந்தமுறியாக வகுப்பற்ற தென்கிறதை ஞானியினு டைய அனுசந்தானத்தினா லறியலாம்.

ச-கை. பண்ணவேண்டிய தறியவேண்டிய தெல்லாந் தேவையற்றுப் போன அனுசந்தானத்தை யெனக்குச்சொல்லுமெனில்.

உ-ம். நான் துக்கியென்றிருக்கிற அஞ்ஞானிக்குப் பூமி தனம் புத்தி ரமித்திர களத்திரம் வேண்டுமென்று இகலோக சம்சாரத்தில் அலையவேண்டும் பரமானந்த பூரணமாயிருக்கிற நமக்கு அந்த மாயாமயத்தைக் குறிக்கத்தேவையில்லைபரலோகத்தையடைய வேண்டினவனுக்கு அதற்கேற்றகர்மானுஷ்டானம் பண்ணவே ண்டும் சர்வலோகமும் மாயாமயமாய்த் தோற்றுகிறதாய்க் கா ண்கிற நமக்கொரு கருமமுந்தேவையில்லை பிரமலோகத்தைய டைய வேண்டினவனுக்கு வேத சாஸ்திரங்களைக் கற்கவேண் டும் நிரதிகாரியாயிருக்கிற நமக்கு ஒரு சாத்திரங்களுங் கற்கத் தேவையில்லை தத்துவத்தை யறியவேண்டினவனுக்கு வேதா ந்தசிரவணம் பண்ணவேண்டும் சந்தேகமற்ற பிரமமாயிருக்கிற நமக்கு மனனந்தேவையில்லை விபரீதபாவனை யுள்ளவனுக்கு நிதித்தியாசனம்பண்ணவேண்டும் தேகம்நாமென்றிருக்கா லு மெண்ணேம் விட்சேபமுள்ளவன் சமாதியிருக்கட்டும் சின்மா த்திரமா யிருக்கிறநமக்கு அதுவுந்தேவையில்லை விட்சேபமுஞ் சமாதியும் அந்தக்கரணத்திற் காகையினால்பண்ணவேண்டியது மறியவேண்டியதுந்தீர்ந்தது.

ச-கை, விவகாரமிருக்கிறபோதே உமக்கு விபரீதபாவனை யெப்படியி ல்லை நித்திரை பிக்ஷைமுழுக்கு சவுசம் இந்நான்கும் நீர்பண் ணக்கண்டோம் உமக்குஎப்படி ஒருகருமமுமில்லையென்னில்.

உ-ம். விவகாரம் குலாலசக்கரம்போல வாசனையினால் நடக்கிறதேய ல்லாமல் விபரீதபாவனையில்லை பிறத்தியா னெருப்பென்றது

கொண்டு குன்றுமணிச்செடி வேகாததுபோல நீ நம்மைக்கர்த்தாவென் றெண்ணினதுகொண்டு நாம் நித்திரை முதலானதைப் பண்ணினவனுகோம்,

ச-கை. இப்படி வாசனையினல் வருகிறவியாபாரம் உமக்குப் போகவேண்டாமோவென்னில்.

உ-ம். பிராரத்துவகன்மந் தொலைந்தாலொழிய விவகாரம்போகாது.

ச-கை. ஆனல் உம்முடைய விவகாரத்திற்கு விதியேதென்னில்.

உ-ம். லவுகிகமாகிலும் வைதிகமாகிலும் உத்தண்டமாகிலும் பிராரத்துவமுள்ளபடி நடக்கிறதேவிதி.

ச-கை. இப்படியானல் உம்மிடத்தில் சகலருக்கும் அப்பிரமாணயுக்திவரும் உம்மைப்பெரியவனென்று ஞானங்கேட்பாருமில்லை உம்முடையஞானம் உமக்குமாத்திரம் பிரயோசனம் பிறனையீடேற்றமாட்டாதென்னில்.

உ-ம். ஆனல் நாம் கிருககிருத்தியனனலும் லோகானுக்கிரகார்த்தமாக தேவார்ச்சனை சவுசமுதலானதைச் சரீரம் பண்ணட்டும் பிரணவ செபமுதலான வேதாந்தபாடத்தை வாக்குபண்ணட்டும் மூர்த்தித்தியானம் பிரமத்தியானத்தை மனதுபண்ணட்டும் இதுகளை நாம்பண்ணினவனுமல்ல பண்ணச்சொன்னவனுமல்ல இப்படி நாமிருந்தால் கருமிகளுக்கும் நமக்குஞ் சண்டையற்றுப்போச்சுது நம்முடைய ஞானமும் பலருக்கு முபகாரமாச்சுது.

ச-கை. கருமத்திற்கு நிர்ப்பந்தமெதினல் ஞானத்திற்கு நிர்ப்பந்தமெதினலென்னில்.

உ-ம். ஞானியாற் பொய்யென்று தள்ளப்பட்ட திரிவிதகாரணத்தில்கருமத்திற்கு நிர்ப்பந்தமல்லாமல் சாட்சியினிடத்தில் நிர்ப்பந்தமில்லை அந்தத் திரிவிதகாரணத்தினல் கருமிகர்மத்தை முடிக்கட்டும் நமக்கு ஹானியேது ஞானத்திற்கு நாமசங்கனென்கிறத்தில் நிர்ப்பந்தமல்லாமல் சாட்சியினிடத்தில் நிர்ப்பந்தமில்லை திரிவிதகரணத்திற்கும் கருமத்தைவிலக்கத்தேவையில்லை ஞானிதன்னைப் பிரமமென் றறிந்துகொண்டு கருமிக்கானியேது.

ச-கை. இப்படி யெல்லாருமறியாமல் ஆத்மாவைத் திரிவித காரணத்தோடேகூடக் கர்த்தாவென்கிற கருமிகளும் ஞானம்வந்தவுடனே திரிவிதகாரணத்தி னெருகருமமும் வேண்டாமென்கிறஞானிகளும் ஒருவர்க்கொருவர் சண்டைக்குநிற்பானேனென்னில்

உ-ம். அவர்க ளஞ்ஞானத்தினலே செவிடர்கதைகேட்டாற்போலச் சண்டைக்கு நிற்கின்றார்கள்.

ச-கை, ஞானம்வந்தவனுக்குப் பிறரைக்குறிக்காகிலும் செய்கிறகருமப்பிரவிர்த்தி உசிதமல்லவே நிவிர்த்தியாகச் சன்மார்க்கத்தில் இருக்கவேண்டுமேயென்னில்.

உ-ம், ஞானிக்குப்பிரவிர்த்தியினால் பிரயோசனமில்லாவிட்டால் நிவிர்த்தியினாலும் பிரயோசனமில்லை.

ச-கை, நிவிர்த்திஞானத்திற்குச் சாதனமல்லவோவென்னில்.

உ-ம். அறிந்தபின்பு சாதனமேதுக்கு.

ச-கை. தோற்றுகிறசெகத்தினால் இன்னமஞ்ஞானப் பிராந்திவந்தாலும் சாதனத்தை யனுஷ்டித்தால் தாழ்வில்லையேயென்னில.

உ-ம், உயிரோடிருக்கிறவெலி செற்றுப்போயிருக்கிற பூனையைத்தொடாதென்றால் செற்றுப்போனஎலி யுயிரோடிருக்கிறபூனையைத்தொடருமென்றாற்போலவும் யாசுமதாஸ்திரத்தினால் கொல்லப்படாதவனை நாணற்சழியினாலே கொல்லப்படு மென்கிறாப்போலவும் அறுதியில் அஞ்ஞான தற்காரியங்களெல்லாங்கூடிக்கொல்லப்படாதபோதத்தைத் திடஞானத்தினால் கொல்லப்பட்டிருக்கிற அஞ்ஞான தற்காரியங்கள் திரும்பிப் பந்தப்படுத்துமென்கிறது உன்னுடைய புத்தித்தாழ்வேயொழிய வேறொன்றுமில்லை.

ச-கை. அஞ்ஞானதற்காரியங் துடைபட்டுப்போனாலும் செகந்தோற்றுகிறதைக்கண்டு சொன்னேனென்னில்.

உ-ம், தோற்றினாலென்ன-இத்தனையு நாமல்லவோ கொன்றோமென்று படுகளம்பார்க்கிற ராஜாவுக்கு அதனால்திருப்தியேயொழிய பயமில்லை இப்படிக்கொத்த போதஞானுக்குத் தேகாதிக ளிடமாய்வருகிற பிரவிர்த்தியினாலதான் நிவிர்த்தியினால்தான் பிரயோசனமேது.

ச-கை. பிரவிர்த்தியாகாது நிவிர்த்தி தாழ்வில்லையென்கிறதாருக்குஎன்னில்.

உ-ம், சொர்க்கமோட்சத்தைக்குறித்து எத்தனம்பண்ணுகிற அஞ்ஞானிக்கு.

ச-கை. அப்படிக்கொத்த அஞ்ஞானியோடு கூடியிருக்கிறபோது ஞானிக்குச்செய்காரிய மெப்படியென்னில்.

உ-ம், குழந்தைகளடித்தாலும் வைதாலுந் தகப்பன் மனதில்காணுமல்திரும்பச் சீராட்டுகிறாப்போல அஞ்ஞானிகள் தூஷித்தாலும் பூஷித்தாலுந் திரும்பத்தா னப்படிச்செய்யாமல் அவர்களுக்குச்சம்மதமாகத்தானே திரிவிதகரணத்தினாலுங் கருமத்தைப்ப

ண்ணிக்கொண்டு அவர்களுக்கு ஞானம் ஏற்றிவைக்கிறதே செய்காரியம்.

௩-கை, ஞானிக்கு ஞானாப்பியாசம்பண்ணுகிறபேருடன் கூடியிருக்கிறபோது செய்காரியமேதென்னில.

உ-ம், ஞானங்களைப்போதித்துக் கருமாதிகளைத்தூஷித்துக் கருமாதிகளைத் தானுந்துறந்து காட்டவேண்டும்.

௪-கை, ஞானி தனித்திருக்கிறபோது செய்காரியமேதென்னில்.

உ-ம், தன்னுடைய திருப்தியானந்தத்தைக் கண்டுமகிழ்ந்து பிரமமே நாமென்றறிய என்னபாக்கியம் பண்ணினோமோ நமது அஞ்ஞானம் எந்தவழி போயிற்றோ நாம்பண்ணின அதிஷ்டம் இனென்றோடே நமக்கு ஒரு சஞ்சாரமுமிலலாமற்போச்சுதே நமக்குப்பிரமானந்தம் வெட்டவெளியாகத்தோற்றக்கிடைத்ததே உலகத்தையெல்லாம்பிடித்த கர்த்தவ்வியங்களிலே நமக்கொன்றுந் தேவையற்றுப் போனபாக்கியமேதோ எல்லாருமடையவேண்டுமென்கிற பிரமம்நாமானோமே நமக்கிந்தனபாக்கியத்தையுங் கொண்டுவந்துவிட்ட சாஸ்திரத்தைப் புகழுவோமோ இந்தச்சாஸ்திரத்தை அநுபோகத்திற்குவரப் பயிற்றுவித்த சற்குருவைப் புகழுவோமோ என்னபுண்ணிய மிப்படிப்பலித்ததோ நம்முடைய புண்ணியத்துக்கும் நம்முடைய ஞானத்துக்கும் நம்முடைய வானந்தத்துக்கும் ஒன்று மொப்பாரியாக்க காணோமென்று கண்டுகளித்துசுபாவஞானமேசுகமென்றுகொண்டு ஆனந்த மனுபவிக்கிறதே செய்காரியம்.

இந்தத் திருப்திதீபிகையை, அனுசந்தானம் பண்ணிவருகிறவன் பிரமானந்தத்திலமுழ்ந்தி நித்தியதிருப்தனாயிருப்பன்.

இரண்டாவது-திர்ப்திதீபிகை-முற்றிற்று.

மூன்றாவது

# கூடஸ்த தீபிகை.

வித்தியாரண்ணியசுவாமிகள் வேதாந்த அர்த்தம் விரிவில் விசாரிக்கமாட்டாதபேருக்குக் கூடஸ்ததீபிகையினால் தொம்பதார்த்த விவேகம் அருளிச்செய்கிறார்.

௧-கை, தொம்பதத்திற்கு வாச்சியார்த்தமார், லட்சியார்த்தமார் இவ்விருவகையும் பொருந்துதற்குத் திட்டாந்தமேதென்னில்.

உ-ம். தொம்பதத்திற்கு வாச்சியார்த்தஞ் சிதாபாசன்லட்சியார்த்தங் கூடஸ்தர் இதற்குத் திட்டாந்தம் எப்படியென்றால் கண்ணாடி

யிற் பிரதி பிம்பவெய்யிலுஞ் சுபாவவெய்யிலும் ஒருமைப்பா டா யொருசுவரா விளக்கிவைக்கிறுப்போலக் கூடஸ்தருஞ் சிதாபாசனும் ஒருமைப்பாடா யொரு தேகத்தையறிகிறூர்.

ச-கை, இவர்களிருவரும் எதினலே யொருமைப்பாடாய்த் தோற்றுகி றூர்கள் இவர்களைப் பகுத்தறியும்வழி யெப்படியென்னில்.

உ-ம், அவிவேகத்தினல் ஒருவராய்த்தோற்றுகிறது ஒவ்வொரு அவ ஸ்தையில் ஏகதேசத்தில்தோன்றி மறைகிற சிதாபாசனையுநித் தியப்பிரகாசனுயிருக்கிற கூடஸ்தரையும் ஏகதேசத்தில உபா தியின லலைகிற வெய்யிலையும் அகண்டவெய்யிலையும் போலக் குறிப்பினலறி,

ச-கை, சரீரத்திற்குப்புறம்மே விஷயஞானம்வரும்போது கூடஸ்தரை யும் சிதாபாசனையும் பகுத்தறியும்வழி யெப்படியென்னில்.

உ-ம். கடஞானம்வருகிறது சிதாபாசனுயிருக்கிறதனக்கு கடோவிரு த்தி ஞானம்வருகிறது கூடஸ்தரா யிருக்கிறதனக்கு இது கட மென்றறிந்தவுடனே யணைந்தவன் சிதாபாசன் அதைக்கண்ட வர் கூடஸ்தர்.

ச-கை. கடஞானம் வருகிறதற்கு மூன்னும் பின்னுங் கடத்தில்கூடஸ் தரிருக்கிறதற்கு அடையாளமேதென்னில்.

உ-ம். கடஞானம் வருகிறதற்கு மூன்னறியப்படாததாகவும் பின்பு அறியப்பட்டதாவுங்காண்கிற தன்னுடைய அநுபவமே அடை யாளம்.

ச-கை. கடமொருக்கா லறியப்பட்டதாகவும் ஒருக்கா லறியப்படாத தாகவுஞ் சாட்சியினிடத்தி லிவ்விருவகையுந் தோற்றுவானே னென்னில்.

உ-ம். எக்காலத்திலு மெங்குமிருக்கிற சுபாவ சைதன்னியத்தில் கற் பிக்கப்பட்ட கடம் அஞ்ஞானத்தோடே கூடி யிருந்தபோது அறியப்படாததாகவும் ஞானத்தோடே கூடினபின்பு அறியப் பட்டதாகவுந் தோற்றியது.

ச-கை. ஞானமாவதேது அஞ்ஞானமாவதேதென்னில்.

உ-ம். லோகாந்தருந்தம்போல சிதாபாசாந்தவிருத்தியேஞானம்தோ ற்றரவற்றபொருளே யஞ்ஞானம்.

ச-கை. விருத்திக்குமுன் சிதாபாசனில்லாதபடியினல் அறியப்படாத கடஞ் சாட்சிதானேயறியவேண்டும் விருத்திக்குப்பின் கடமெ ன்றறியப்பட்டது சிதாபாசனலறியலாம் சாட்சியினலென்கிற து வேண்டாமேயென்னில்.

உ-ம், கடமென்றறிந்தவுடனே சிதாபாசன் விருத்தியில் நட்டமாய்ப் போனபடியினால் இப்பாலவிடத்தில் கூடஸ்தனைத்தவிர வேறு சைதன்னியமில்லாதபடியினால் முன்னறியப்படாததை யறிந்திருந்த கூடஸ்தர்தானே இப்பாலறியப்பட்ட தென்கிறதையுந் தோற்றுவிக்கிறதற்குச் சந்தேகந்தேவையில்லை ஆகையாலிரண்டுகாலத்திலுங் கடத்தையறிகிறவர் கூடஸ்தர்தானே.

ச-கை. கடஞானம்வந்தவுடன் சிதாபாசம்நட்டமாய்ப்போனாலும் அவனோடு கூடப்போகாமலிருக்கிற விருத்தியினால் கடமறியப்பட்டதென்கிறது தோற்றலாம் சாட்சியினாலென்கிறது தேவையில்லையேயென்னில்,

உ-ம். சிதாபாசனில்லாதவிருத்தியும் பிரகாசத்திரவியமானாலும் வெள்ளைமண்போலச் சடமானபடியினாலறியப்பட்டதை தோற்றுவிக்கமாட்டாது சாட்சிதானே தோற்றுவிக்கிறார்,

ச-கை. சாட்சியினிடத்தில் கற்பித்தகடம் அஞ்ஞானத்தோடே கூடினாலும் விருத்தியோடு கூடினாலும் அறியப்பட்டதென்னக்கூடாமற்போனால் அறியப்பட்ட தென்கிறபேர் எதினால் வந்ததென்னில்,

உ-ம், சிதாபாசன் பிரதி பலித்ததைப்பற்றியே கடமறியப்பட்டதாயிற்று,

ச-கை, சைதன்னியத்துடக்குத்தானே யறியப்பட்டதற்குமூலமானால் முன்சாட்சி சைதன்னியத்தோடே கூடினதுகொண்டு அறியப்பட்டதாக வொண்ணாதோவென்னில்,

உ-ம். விருத்திக்குப்பின் பிரதிபலித்த சிதாபாச சைதன்னியமே பிரயோசனமாகவேண்டுமல்லாமல் முந்தியிருந்த கூடஸ்தனாப்பலமென்னக்கூடாது,

ச-கை, இப்படியானால் சாட்சிக்குஞ் சிதாபாசனுக்கும் பேதமேதென்னில்,

உ-ம். கடமாத்திரத்தைக் காண்கிறவன் சிதாபாசன் சிதாபாசன் விருத்தி கடம் இம்மூன்றையுங் காண்கிறவர்சாட்சி,

ச-கை, இப்படியானால் எல்லாச்சாஸ்திர கர்த்தாக்களும் விஷயஞானத்தில் இரண்டு சைதன்னியத்தையும் ஏன் பகுத்தறியவில்லையென்னில்,

உ-ம். கூடஸ்தனென்று சொல்லாமல் அனுவியவசாயஞானமென்று பேரிட்டுப்பகுத்தறிவார்கள்,

ச-கை. அனுவியவசாயஞானமென்பதற்கு அர்த்தமேதென்னில்,

உ-ம், முந்தியறிந்த வறிவுதானே பிந்தியறியுமென்கிறது அர்த்தம்,

ச-ங்கை, தேகத்திற்குப்புறம்பே ஆபாசனையும் பிரமத்தையும் பிறித்தறி ந்தாப்போல தேகத்திற்குள்ளாகவும் இவர்களிருவரையும் பகு த்தறிகிற வழியேதென்னில்,

உ-ம், வெளியி லிதென்கிறவிருத்தியையும் கடபடாதிக ளாதற்குவிட யங்களையும் அதுகளுடைய அன்வயவி திரேகத்தையும் அறிகி றவரே சாட்சியென்றறிகிறதுபோலத் தேகத்திற்குள்ளே அக மென்கிற விருத்தியையும் காமக்குரோதாதி விஷயங்களையும் அதுகளுடைய அன்வயவிதிரேகத்தையுமறிகிறவர்சாட்சி,

ச-ங்கை. உள்ளே சிதாபாசத்தோற்ற வெப்படி சாட்சித்தோற்ற வெ ப்படியென்னில்,

உ-ம். காய்ச்சினவிரும்பிலேயிருக்கிற அக்கினி அந்த இரும்பை மாத் திரந் தோற்றுவிக்கிறதேயல்லாமல் வேறொன்றையுந் தோற்றி வையாததுபோல் காமக்குரோதாதியாகிய அகம் விருத்தியில் கலந்திருக்கிற சிதாபாசனுந் தான்மாத்திரந்தோற்றுகிறதேயல் லாமல் அன்னியமாயிருக்கிறதைத் தோற்றுவிக்கமாட்டான்சா க்கிரசொற்பனத்தில் விருத்திகளையும் விருத்திகளுடைய இடை நடுவிலுஞ் சுழுத்தி மூர்ச்சை சமாதிகளிலும் இதுக ளெல்லா வற்றிலுந் தோற்றுவிக்கிற நிருவிகாரசைதன்னியமேகூடஸ்தர்,

ச-ங்கை. வெளியில் விருத்தியிலறியப்பட்டதையும் அறியப்படாததை யுங் காண்கிறவழியாகக் கூடஸ்தரைக்காண்பித்தால் உள்ளில் விருத்திகளிலும் அந்தவழியாகத்தானே காண்பியாமல் வே றொருவழியாகக் காண்பித்ததேதென்னில்,

உ-ம், உள்விஷயமான விருத்தியானது கடம்போல் ஞான மஞ்ஞான மிரண்டோடுங் கூடாததுகொண் டந்தவழிதேவையில்லை,

ச-ங்கை, விருத்தியில் அஞ்ஞானவிருத்தி ஞானவிருத்தி யிரண்டுமேனி ல்லையென்னில்,

உ-ம். உள்விஷயமான விருத்தியானது கடம்போல் தனக்கன்னியமா காதபடியினால் ஒருக்காலஞ் ஞானவியாப்தி வந்ததென்னக்கூ டாது அன்னியபதார்த்தத்தில அஞ்ஞானத்தைப் போக்குகிற படியினால் இந்தவிருத்தியில் அஞ்ஞான வியாப்திவரக் கணக் கில்லை.

ச-ங்கை. இப்படி யுள்ளிலும் புறம்பிலும் நானென்றுதோற்றுகிற சைத ன்னியம் இருவகையென்று சாதித்ததற்குப் பிரயோசனமே தென்னில்,

உ-ம். சைதன்னிய மிரண்டிற்குள்ளே கற்பிதமாக விருக்கிறவன் ஜெ னனமரண சஞ்சாரியென்றுங் கூடஸ்தராய்ச் சுபாவமாயிருக்கி றதனக்கு ஒருக்காலுஞ் சஞ்சாரமில்லையென்றும்பிரயோசனம்.

ச-கை. புத்தியில்வளேயிட்ட கூடஸ்தர் சஞ்சாரியாகட்டுஞ் சிதாபாசன் வேண்டாமேயென்னில்,

உ-ம். அசங்கசைதன்னியத்திற்கு ஒரு வுபாதியில் வளேயிட்டதுகொண்டு சஞ்சாரம்வருமேயானல் குடங்கள் குதிர்களால் வளேபட்டதற்குச் சஞ்சாரம் வரக்காணேமே,

ச-கை. கடம்போல அந்தக்கரண மலினமல்லவே சொச்சத்திரவியத்தில் வளேபட்டாற் சஞ்சாரம்வருமேயென்னில்,

உ-ம். வெண்கலமரக்காலா லளந்ததுகொண்டு ஒட்டி ரட்டி ஒன்று மூன்ருய்க் காணுகதுபோலச் சொச்சத்திரவியத்தினல் அதிசயமில்லே.

ச-கை. பிறமரக்காலும் வெண்கலமரக்காலும் அளவுசரியானலும்வெண்கலத்தில் பிரதி விம்பங்கண்டதுபோலக் கடத்தைக் காட்டிலும் புத்தியில் பிரதிவிம்ப மதிசயமல்லவோவெனில்.

உ-ம். இப்படியானல் அந்தப்பிரதிவிம்பந் தானே சிதாபாசன் அவனுக்கே சஞ்சாரம் ஆத்மாவுக்குச் சஞ்சாரமேயில்லே,

ச-கை. உபாதியைத்தவிர ஆபாசனுக்குச் சொரூபமில்லாதபடியினல் அந்தக்கரணத்துக்குச் சஞ்சாரமாகட்டும் ஆபாசனுக்குச் சஞ்சாரம் வேண்டாமேயென்னில்,

உ-ம். இப்படியானல் சரீரத்தைத்தவிர அந்தக்கரணம் புறம்பாக காணுதபடியினல் சரீரத்துக்கே சஞ்சாரமாகவேண்டும்,

ச-கை. சரீரமிருந்தாலும் புத்தியிருக்குமென்கிற சாஸ்திரத்தினல் சரீரத்தைத்தவிர அந்தக்கரணம் வேருகவேண்டுமேயென்னில்,

உ-ம். இப்படியானல் புத்தியைவிடச் சிதாபாசன் வேறேயுண்டென்று பிரவேச உபநிஷத்தில் சொன்னபடியினல் சிதாபாசனுக்கெ சஞ்சாரம் அந்தக்கரணத்திற்குத் தேவையில்லே,

ச-கை. பிரவேச உபநிஷத்தில் புத்தியோடே கூடினவனுக்கே சரீரப்பிரவேசஞ் சொல்லுகிறது புத்திக்கப்பாற்பட்டவனுக்குச்சொல்லவில்லேயேயென்னில்,

உ-ம். சடந்தேகமென்கிறவாக்கியம் நாமில்லாவிட்டால் சரீரங்களும் இந்திரியங்களும் சீவிக்கமாட்டாதென்றும் ஆத்மா பிரவேசித்தானென்கிறபடியினல் அந்தக்கரணத்திற்கு அன்னியனுயிருக்கிறவனுக்கே பிரவேசஞ்சொல்லுகின்றது,

ச-கை. அந்தக் கரணத்திற்கு அப்பாற்பட்டவன் அசங்கனல்லவோ அவனுக்கெப்படி பிரவேசங்கூடுமென்னில்,

உ-ம், இவருக்குப் பிரபஞ்சசிருஷ்டி யெப்படிகூடுமோ அப்படியே கூடும்,

ச-கை. அசங்கனுக்கு சிருஷ்டியில்லையே மாயாகற்பிதனுக் கல்லவோ சிருஷ்டியுள்ளதென்னில்,

உ-ம், பிரவேசங்கானு மவித்தையாகற்பிதனுக்கேயல்லாமல் அசங்க னுக்கில்லை,

ச-கை. சிருஷ்டித்தவனும் பிரவேசித்தவனும் கற்பிதமென்கிறத்திலபி ரமாணமேதென்னில்,

உ-ம். மாயை யவித்தை யிரண்டும் சீவேஸ்வரனென்கிற ஆபாசத் தைக் கற்பித்ததென்கிறவேதமு மிவர்களையுற்று விசாரித்தால் இல்லாதே நஷ்டமாய்ப்போகிற அனுபவமுமே பிரமாணம்,

ச-கை. இப்படி சீவேஸ்வர சைதன்னியங் கற்பிதமென்றும் இதற்கப பாற்பட்ட வராத்மாவென்றும் வேதததில் பகுத்துச்சொல்லு கிறதோவென்னில,

உ-ம், சீவேஸ்வராள் பூகபௌதிகப் பிரகிருதியோடே கூடத்தோற் றிக் கூடவே அழிவார்களென்றும் அப்பாற்பட்டிருக்கிற கூட ஸ்தர் அவினாசியென்று மயித்திரிக்கு யாஞவர்க்கர் சொன்ன தொன்று வேதஞ்சொல்லுகின்றது,

ச-கை. இப்படியானால் சரீரமரிக்கும் சீவன் மரியானென்கிற வேதத்தி ற்கு விரோதமல்லவோவென்னில்,

உ-ம். இந்தவேதம் பூகபௌதிக மோட்சத்தைச்சொல்லுகின்றதல்ல அஞ்ஞான அவஸ்தையிலே லோகாந்தர மனதைச்சொல்லுகி றது ஆகையால்ஆத்மாவுக்கு அன்னியமெல்லாம்அனித்தியம்

ச-கை, இப்படி சீவனே அனித்தியனானால் நித்தியமாயிருக்கிற பிரமத் தோடே அகம்பிரமமென்கிற சாமானாதிகரண மெப்படி கூடு மென்னில்,

உ-ம், முக்கியசாமானாதி கரணங்கூடாவிட்டாலும் ஸ்தாணுபுருஷஞா னம்போல வாதசாமானாதிகரணங்கூடும்,

ச-கை, இப்படியானால் விவர்ணாசாரியர் வாதசாமானாதி கரணத்தைக்க ண்டிப்பானேனென்னில்,

உ-ம். ந னென்கிற சத்தத்திற்கு கூடஸ்தனை அர்த்தமாக்கிக்கொண் டுகண்டித்தார்,

ச-கை. இப்படி கூடஸ்தரே தானாகக்கண்டால் தற்பதந் தொம்பதத்தி ற்கு அர்த்தமேதென்னில.

உ-ம். தேகேந்திரியாதிகளுடைய சீவப்பிராந்திக்கு அதிட்டானப்பிர தேசமுஞ் சகசரீரம்படைத்த ஈஸ்வரப்பிராந்திக்கு அதிட்டா னப்பிரதேசமும் அர்த்தம்.

ச-கை. தற்பதமுந் தொம்பதமும் ஒருபிரமத்தைத் தானே ஏகதேசங்க ளிற்சொன்ன விரண்டுபதங்களுக்கும் அர்த்தபேதமுண்டோ வென்னில்.

உ-ம். ஆரோபிதமான சரீரத்தையும் செகத்தையும்பற்றிப் பேதமே யல்லாமல் அதிட்டான சைதன்னிய மொன்றேயொழிய விர ண்டில்லை.

ச-கை. பிரத்தியட்சமாய் நிண்ணயப்பட்டிருக்கிற சீவேசுவரரைப் பி ராந்தியென்பது கூடாதென்னில்.

உ-ம். சைதன்னியம்போல் ஏகலட்சணமாய் நிண்ணய மாகாதபடியி னாலும் சித்தாகவுஞ் செடமாகவும் நித்தியமாகவும் அனித்திய மாகவுங் குழம்பிக்கிடக்கின்றபடியினாலும் பிராந்தியென்கிறத ற்குத் தப்பில்லை.

ச-கை. பிரபஞ்சத்தில் ஏகரீதியாய்த்தோற்றுகிற பிராந்தனுக்கும் வி வேகிக்குந் தாரதன்மியமேதென்னில்.

உ-ம். புத்தியாவதெது சிதாபாசனென்கிறவனார் ஆத்மாவாவதார் செ கத்தாவதெப்படி யிருக்குமென்கிற கலக்கமுடையவனே பிரா ந்தன் இவனுக்கே சஞ்சாரம் இதுகளை அதனதன்சுபாவத்துட ன் பகுத்தறிந்து தானே சச்சிதானந்தமென்று நிச்சயித்திருக் கிறவனே முத்தனென்றுவேதஞ்சொல்லுகின்றது.

ச-கை. தானெப்போதுஞ் சச்சிதானந்தமா யிருக்கிறதற்குப் பிரமா ணமேதென்னில்.

உ-ம். மாயாவிருத்தி மனோவிருத்திகளுண்டாகிறதற்கும் இருக்கிறத ற்கும் அழிகிறதற்குஞ் சாட்சியாயிருக்கிற ஆத்மா சத்தென்ப து கூடும் எல்லாவற்றையும் அறிகையினால் சித்தென்பதுகூடு ம் பஞ்சகோசங்களைக் கைவிட்டாலுந் தான் கைவிடப்படாத வஸ்துவானபடியினால் ஆனந்தமென்பது கூடும் ஆகையினால் இவரே பரமசிவமென்கிற புராணவசனமே பிரமாணம்.

ச-கை. இந்தக்கூடஸ்தருக்கு அன்னியமாகவிருக்கின்ற சீவேஸ்வரரள் மாயாகற்பிதமான பூதங்களோடே சடமாகக்காணும் சைத ன்னியமாக விருக்கிற இவர்களை மாயாகற்பிதமென்னக் கூடா தென்னில்.

உ-ம். சகலமான பாண்டங்களும் மண்ணிற்பிறந்தாலுங் காசிக்கும்ப ங்கள் நிருமலமா யிருக்கிறப்போல் மாயாகற்பிதங்களுக்குள் ளே சீவேஸ்வரரும் சொச்சத்திரவியமென்றறி.

ச-கை. காசிக்கும்பங்கள் நிர்மலமாயிருந்தாலும் சடமாயிருக்கிறுப்போலச் சீவேஸ்வராளுஞ் சடமாயிருக்கக்காணும் ஆகையினுல் இவர்களை மாயாகற்பிதமென்னக் கூடாதேயென்னில்.

உ-ம். அன்னத்திற்பிறந்த சரீரேந்தியாதிகளுக்குள் மனது போதரூபமாயிருக்கிறுப்போல மாயாகற்பிதங்களுக்குள் சீவேசுராளுமபோதரூபமாயிருக்கலாம்.

ச-கை, மாயைசடத்தைக் கற்பிக்குமேயல்லாமல் சைதன்னியத்தையுங் கற்பிக்கமாட்டுமோ வென்னில்.

உ-ம், ஒருசீவனிடத்திலிருக்கிற நித்திராமோகந்தானே அனேகசேதனசேதனங்களையுங் கற்பிக்கக்கண்டால் சீவேஸ்வரரளை மகாமாயை கற்பிக்குமென்கிறதற்கு ஆச்சரியமேது.

ச-கை. கிஞ்சிஞத்துவம் அனீசுரத்துவமுதலான சீவகுணங்களை மாயை கற்பிக்குமல்லாமல் சாவஞந்துவம் சர்வேஸ்வரத்துவம் பஞ்சகிருத்தியத்வமுதலான கலியாணகுணங்களை மாயை கற்பிக்க மாட்டுமோ வென்னில்.

உ-ம். பிள்ளையைப்பெற்றவன் பேரிடுகிறுப்போல் சீவேஸ்வரராளைக் கற்பித்தமாயைக்கு அவரவருக்கேற்றத் தொழில்களையுங் கற்பிக்கிறதில் எதுபாரம்.

ச-கை, இத்தனை வல்லமையிருக்கிற மாயைக்கு ஒருகூடஸ்தரைக் கற்பிக்கச் சக்தியில்லையோவென்னில்.

உ-ம். சீவேஸ்வரராள் கற்பிதமென்று வேதப்பிரமாணங் கண்டாப்போலக் கூடஸ்தரும் மாயாகற்பிதமென்று ஒரு வேதப்பிரமாணமுமில்லை இவரே யுண்மைப்பொருள் ஆதிவஸ்துவென்று சகலவேதங்களுங் கொண்டாடும் ஆகையால் உன்னுடைய சங்கைக்கு இடமில்லை.

ச-கை, மாயாகற்பிதமான சீவேஸ்வரராளால் என்னகாரிய முடியுமென்னில்.

உ-ம், மாயையை விரியப்பார்க்கிற பார்வைமுதல் பிரவேசபரியந்தம் ஈஸ்வரகிருத்தியம் சாக்கிரசொற்பனசுழுத்தி முத்திபரியந்தமுள்ள சங்சாரமெல்லாஞ் சீவகிருத்தியம்,

ச-கை, கூடஸ்தருக்குக் கிருத்தியமேதென்னில்,

உ-ம். அவர் அசங்கரேயல்லாமல் அவரிடத்தில்ஒருசங்சாரமுமில்லை,

ச-கை, இப்படிப்பகுத்தறிந்தவ னெப்படி யிருப்பானென்னில்,

உ-ம், பெத்தன் முத்தன் பந்தமோட்சமுற்பத்திநாசங்கள் சகலமும் மாயாகற்பிதமேயல்லாமல் தனக்குச்சுபாவமாயொன்றுமில்லையென்று கலக்கமறத்தெளிந்திருப்பன்,

ச-கை, இப்படியொன்றுமில்லாவிட்டால் ஜீவன் ஈஸ்வரன்செகத்தென்னு மரியாதையெல்லாம் வேதத்திற்சொல்லியிருப்பானேனென்னில்,

உ-ம். அதிசூக்ஷ்மமாயிருக்கிற ஆத்மாவைக்காட்டுகிறதற்காகவே ஸ்தூலவருந்ததி நியாயமாய்ச்சொல்லுகின்றது,

ச-கை, இப்படியறிந்தவிவேகி பிராரத்தத்தோற்றரவை யெப்படிகாண்பானென்னில்,

உ-ம். சாஸ்திரமறியாதவன் கலங்குகிறதுபோல் கலங்காமல் மாயையாகிறமேகம் பிரபஞ்சமாகிறமழையை வேணபடி வருஷித்தாலும் சிதாகாசமாயிருக்கிற நமக்கு ஹானியேதுலாபமேதென்று ஜீவன்முத்தன் கவலைகெட்டிருப்பான்,

இந்தக் கூடஸ்த தீபிகையை நித்தியம் அனுசந்தானம் பண்ணினவன் தானே பிரமமாகவிளங்குவன,

மூன்றாவது-கூடஸ்ததீபிகை-முற்றிற்று.

நான்காவது

# தியானதீபிகை,

வித்தியாரண்ணியசுவாமிகள் சாதனசதுஷ்டயமுள்ள அதிகாரிக்குச் சிரவணமுதலான அதிஷ்டான ஞானத்தினல்வருகிற வாக்கியார்த்த ஞானத்தையுஞ்சீவன்முத்தி நிலையையுஞ் சித்தாந்தத்திற்சொல்லி பிரக்கியா மாந்திரியமுதலான பிரதிபந்தங்களால கேதஞ்சொன்னநிலை திடப்படாதபேருக்கு தியானதீபிகை யருளிச்செய்கிறார்,

ச-கை. மோட்சார்த்தமாய்ச் செய்யவேண்டிய அனுஷ்டானமேதென்னில்,

உ-ம். பிரமவுபாசனையே செய்யவேண்டியது சகுணவுபாசனைபோல் இதற்குக் கிரிகையுண்டோவென்னில் இந்தத்தியான தீபிகையில் சொல்லுகிறபடி பிரமத்தைத் தியானம்பண்ணுகிறதேயல்லாமல் வேறொருகிரியையுமில்லை.

ச-கை. இதற்குப் பிரமாணமுண்டோவென்னில்,

உ-ம். தாபநீயமென்கிற வுபநிஷத்தே பிரமாணம்.

ச-கை. தானாயிருக்கிற வஸ்துவை அன்னியமாயிருக்கிற வஸ்துவைப்போல் உபாசிக்கக்கூடாதேயென்னில்,

உ-ம். சம்வாதிப்பிரமைபோல் கண்டுங்காணுகதா யிருந்தபடியினல் உபாசனைகூடும்,

ச-கை, சம்வாதிப் பிரமையாவதேது விசம்வாதி பிரமையாவதே தென்னில்.

உ-ம். மணிப்பிரபையைக் கண்டு மணியென்று நிச்சயித்தது சம்வாதிப்பிரமை தீபப்பிரபையைக்கண்டு மணியென்றுநாடுவது விசம்வாதிப்பிரமை.

ச-கை. பிராந்தியாய் நாடினவனுக்குப் பலன்கிடையாதோவென்னில்.

உ-ம். விசம்வாதிப்பிரமை பலங்கொடாது சம்வாதிப்பிரமை நாடின பொருளைக் கொடுக்கும் ஆகையினல் பிரமவுபாசனைதான் சம்வாதிப்பிரமை பிராந்தியானலும் மூத்தியாகிறபலனைக் கொடுக்கும்.

ச-கை. இந்தப்பிரமத்துவ வுபாசனைக்கு அதிகாரியார் பண்ணுகிற அடைவெப்படி இதற்குத் திட்டாந்தமேதென்னில.

உ-ம். பரோட்சஞானியே இதற்குஅதிகாரி அகண்டாகாசமேதானென்கிற தியானமே உபாசனைபண்ணுகிறவடைவு கண்ணுக்காணுவிட்டாலும் சாஸ்திரஞ்சொலலுகிறபடி பாவிக்கிற மூர்த்திதியானமே இதற்குத் திடடாந்தம்.

ச-கை, பரோட்சஞானத்திற்கு லட்சணமேது பரோட்சஞானஞ் சந்தேகமானபடியினல் பலமெப்படிகொடுக்கும் எனில.

உ-ம், பிரமந்தானென்றறியாமற் பிரமமொன்றுண்டென்று நிச்சயித்ததே பரோட்சஞானம் மூர்த்தி தியானவுபாசனைப்போல பரோட்சஞானத்தி லொருவருக்குஞ் சந்தேகமிலலை ஆகையால இரத்தினப்பிரபைபோலப் பலங்கொடுக்குமென்றே சித்தாந்தம்.

ச-கை. பிரமத்தைத் தானுகச்சொல்லுகிற வேதாந்தத்தைப் படித்தும் இவனுக்குவந்த ஞானம் பரோட்சமாகக் காரணமேது இப்படி பரோட்சமாயிருக்கிற அத்துவைதபுத்தியைப் பிரத்தியட்சமாயிருக்கிற துவிதபுத்தி கெடாதோவென்னில.

உ-ம். தேகத்தை யானென்கிற விபரீதபாவனை பிரமத்தைத் தானுகத் தோற்றவொட்டாது பிரத்தியட்சமாயிருக்கிற சீவபுத்தி பரோட்சமாயிருக்கிற ஈசுவரபுத்தியைத் தள்ளாததுபோல பிரத்தியட்சமாயிருக்கிற துவிதபுத்தியும் பரோட்சமாயிருக்கிற அத்துவிதபுத்தியைக் கெடுக்கமாட்டாது.

ச-கை. சிரத்தையில்லாதவனுக்குச் சிலையி லீஸ்வரபுத்திவரக் காணுமே வேதாந்தம்படித்தாலொழிய பரோட்சஞானம் வாராதோவென்னில.

உ-ம். சிரத்தையுள்ளவனே யதிகாரியல்லாமற் சிரத்தையில்லாதவ
னைச் சாத்திரத்திலெடுத்துக் காட்டவொண்ணாது மூர்த்தியுப
தேசம்போல் பிரமத்தை யுபதேசமாத்திரத்திற் கேட்டறிய
லாம்.

ச-கை. சாஸ்திர விசாரம்பண்ணாமல் பிரமத்தை யுபதேசமாய்க் கேட்
டறிகிற தெப்படியென்னில்.

உ-ம். கன்மசூத்திரத்தைப் படியாமற் கன்மானுஷ்டானஞ் சித்திக்தா
ப்போலவும் ஆகமபுராணங்களெல்லாம் படியாமல உபாசனை
யனுஷ்டிக்கிறாப்போலவும் சாத்திரவிசாரம்பண்ணச் சக்தியில
லாதவன் மகாத்துமாக்களிடக்கிற் பிரமமின்னபடியிருக்குமெ
ன்கிறதைக் கேட்டுக்கொண்டு பாசிக்கலாம்.

ச-கை. இப்படி சாட்சாத்காரம் உபதேசங்கொண்டு வாராகோ பரோ
ட்சஞானத்திற்குப் பிரதிபந்தமேது அபரோட்சஞானத்திற்கு
ப் பிரதிபந்தமேது சாத்திர விசாரஞ்செய்தாலும் சிலருக்குசா
ட்சாத்காரம் ஏன்வரஇல்லை சாத்திரமெல்லாம்படித்துஞ் சாட்
சாத்காரம் வாராதவனுக்குச் செய்காரிய மேதென்னில்.

உ-ம். சாத்திரயுத்தி வாராதவனுக்கு உபதேசத்தாற் சாட்சாத்காரம்
வாராது சிரத்தையில்லாத தேபரோட்சஞானத்திற்குப் பிரதி
பந்தம்விசாரமில்லாததோஷமே யபரோட்சஞானத்திற்குப்பி
ரதிபந்தம் விபரீதமாவனையால் சாத்திரம்படித்துஞ் சாடசாத்
காரம் வாராமலிருக்கிறது விசாரபலமான சாட்சாத்காரம்வரு
மளவுஞ் சாத்திரத்தைத் திருப்பித்திருப்பி விசாரிக்க பயிர்செ
ய்வகையாற் கர்ப்பம் நாளுக்குநாள் பரிபக்குவ மாகிறாப்போல்
ஞானமுந்தீர்க்கவிசாரத்தாற் பரிபக்குவமாம்.

ச-கை. மரணபரியந்தம் விசாரம்பண்ணின வாமதேவர் சடபரதருக்
குமந்தச்சன்மத்திலேன் ஞானமுதையமாகவில்லையெனில்.

உ-ம். பிரதிபந்தங்களினால்.

ச-கை, பிரதிபந்தமாவதெத்தனை விதமாயிருக்கும்

உ-ம் பூதப்பிரதிபந்தமென்றும் பௌஷிபப்பிரதிபந்தமென்றும் வர்
த்தமானப்பிரதிபந்தமென்றும் மூன்றுவிதமாயிருக்கும் பூதப்
பிரதிபந்தமான விறந்தகாலப் பிரதிபந்தமானது கைவிட்ட எ
ருமையில்பற்று சன்னிபாசிபாரிடத்திற் காணப்பட்டது பௌ
ஷியபிரதிபந்தமான வெதிர்காலப்பிரதிபந்தமானது சங்கற்பத்
துட்னே கூடியிருந்து வேதாந்தவிசாரம்பண்ணின வாமதேவ
ரிடத்தில் ஒரு செனனமாகவுஞ் சடபரதரிடத்தில்மூன்றுசன
னமாகவுங் காணப்பட்டது வர்த்தமானப்பிரதிபந்தமான நிகழ்

காலப்பிரதிபந்தமானது விஷயாசத்தி பிரகஞியாமாந்தியங் குதர்க்கம் விபரீதபாவனை துராக்கிரகவகந்தை

ச-கை, இந்தப்பிரதிபந்தங்களைத் தள்ளுமுபாயமேதென்னில்.

உ-ம், பூதப்பிரதிபந்தத்தில் கவனவன்புத்தியை யனுசரித்துப் போதிக்கத்தீரும் பௌஷ்யப்பிரதிபந்தத்திற்கு சனனமெடுத்து குருமந்திரதேவதைகளை யுபாசிக்கத்தீரும் வர்த்தமானப்பிரதிபந்தத்திற்கு விஷயாசத்தி சாதனசதுஷ்டயத்தாற்றீரும் விரகஞியாமாந்தியம்பலகாலம் சிரவணம் பண்ணத்தீரும குதற்கம்மனனத்தாற்றீரும் விபரீதபாவனை நிருத்தியாசனத்தாற்றீரும் துராக்கிரகவகந்தை சமாதியாற்றீரும்.

ச-கை. வேதாந்த விசாரம்பண்ணியும் பவுஷ்யப் பிரதிபந்தத்தினால் சனனம்வருமென்றால் விசாரஞானமும் வியர்த்தமாமோ பிரதிபந்தத்தாற் சனனம்வருமென்கிறதற்குப் பிரமாண முண்டோவென்னில்.

உ-ம். விசாரத்தாற் பிறந்தஞானம் பிரதிபந்தந்தொலைந்தவுடன் மோட்சத்தைக் கொடுக்கையினால் சாத்திரவிசார மொருக்காலும் பாழாய்ப்போகாது யோகப்பிரஷ்டன் இரண்டொருசனனத்தில் கிருதார்த்தனாவானென்கிற கீதாவசனமே பிரமாணம்,

ச-கை. பிரதிபந்தந் தீரத்தக்கதாக வுபாசிக்கச்சொன்னது சகுணமோ நிற்குணமோ வென்னில்.

உ-ம், நிற்குணம்.

ச-கை. சகுணமானாலுபாசிக்கலாம் நிற்குணத்தை யெப்படி தியானம் பண்ணுகிறதென்னில்,

உ-ம். கேட்டவண்ணந் தியானிக்கிற திருவகைக்குஞ்சரி.

ச-கை, வாக்குக்கு மனதிற்குமெட்டாத நிற்குணத்தை எப்படிதியானம்பண்ணலாமென்னில.

உ-ம், வாக்குக்குமனதிற்கு மெட்டாததை விசாரித்துச் சாட்சாத்காரம் பண்ணுகிறாப்போல் கேட்டுச்சிந்திக்கலாம்.

ச-கை, யாதொன் றன்னியமா யுபாசிக்கப்பட்டதோ அதெல்லாம் பிரமல்ல தானாயறியப்பட்டதே பிரமமென்றொரு வேதஞ்சொன்னபடியாற் பிரமத்திற்குபாசனை நிஷேதம்என்னில்.

உ-ம். அறியப்பட்டதற்கு மறியப்படாததற்கு மன்னியமா யிருக்கிறதே பிரமமென்றொருவேதத்தில் ஞானத்தைநிஷேதிக்கின்றது.

ச-கை. பிரமவுபாசனையில் உமக்கித்தனைபக்தி யேதென்னில்.

உ-ம், உமக்குத்தான் இத்தனை துவேஷமேது

ச-கை, நிற்குணத்தை யுபாசிக்கிறதற்குப் பிரமாணமேது விதிதானே தென்னில்.

உ-ம். தாபநீயம் சயிப்பியம் காடகம் மாண்டூக்கிய மென்கிற நாலுவுப நிஷத்தும் பிரமாணம் பஞ்சீகரண மகாவாக்கியமே யனுஷ்டான விதி.

ச-கை. பஞ்சீகரணம் ஞானசாதனமல்லவோ எல்லாரு மனுஷ்டிக்கவி ல்லையேயென்னில்.

உ-ம். ஞானசாதனமென்கிறது நமக்குஞ்சம்மதம் அனுஷ்டியாதவன் தானேகெட்டான் அதனாற்பிரமவுபாசனைக்குத் தூஷணமில்லை

ச-கை. எல்லாரு மனுஷ்டியாத வுபாசனையை நீரேன்சொல்லவந்தீரெ ன்னில்.

உ-ம். சில மூடர் இதிலு மதிகமென்று வசியமந்திரத்தைச் செபிக்க ட்டும் அதிலும் பரமமூடர் கிரியைபண்ணட்டும் அந்த மூட் ரைக்குறித்துச் சொல்லவில்லை முமூட்சுக்களைக்குறித்தே நிற் குணவுபாசனை சொன்னோம்.

ச-கை. இப்படி யுபாசிக்கப்படுகிறதே நிற்குணமானால் இந்த நிற்குண வஸ்துவிற் கானந்தாதிகுணங்களும் அஸ்தலாதி குணங்களுமு ண்டென்னக் கூடாதேயென்னில்.

உ-ம். சுருதிசம்மதமாக இந்த லட்சண சூத்திரஞ்சொன்ன வியாசு ரைக்கேள்.

ச-கை. சச்சிதானந்தம் நானென்கிறதே வுபாசனையானால் ஞானத்திற் குந் தியானத்திற்கும் பேதமேதென்னில்.

உ-ம். வஸ்து தந்திரம் ஞானமென்றும்கர்த்த தந்திர முபாசனையெ ன்றுஞ் சொல்லுகிறதேபேதம்.

ச-கை. வஸ்து தந்திரமாயிருக்கிற ஞான மெதினால்வரும் வந்தபின் னென்னத்தைச்செய்யும் அதை மறந்தாலானியேது அந்தஞா னமுள்ளவ னெப்படியிருப்பானென்னில்.

உ-ம். அக்கினியை யக்கினியென்கிறாப்போல் சுபாவத்தைச்சொல்லு கிற வஸ்து தந்திரஞானம் விசாரத்தினால்வரும் சகல சம்சார த்தையுஞ்சுடும் மறந்தாலுஞ் சம்சாரத்தைக்கொடாது அந்த ஞானி சீவன்முத்தனும் நித்திய திருப்தியையடைந்து பிராரத் துவ க்ஷயத்தைப்பார்த்திருப்பன்.

ச-கை, கர்த்ததந்திரமாயிருக்கிற வுபாசனை யெதினால்வரும் வந்தபின் னென்னத்தைச்செய்யும் அதைமறந்தா லானியேது அந்த ஞா னமுள்ளவன் எப்படியிருப்பானென்னில்.

உ-ம், உபசாரத்தால் ஸ்திரீயை யக்கினியென்பதுபோல் கர்த்ததந்தி ரமாயிருக்கிற வுபாசனை குருவுபதேசத்தால்வரும் தியானித்த

அ

யோது நாம் பிரமமாவோமென்கிற புத்தியைக்கொடுக்கும்மற ந்தால் விட்சேபத்தின் கையில் காட்டிக்கொடுக்கும் இந்தவுபா சகன் நித்திரையு மரணமும் வருமளவுந் தியானத்தைச் செய் துக்கொண்டிருப்பன்.

ச-கை. இந்த வுபாசனை முதிர்ந்ததற் கடையாளமேதென்னில்.

உ-ம். சொற்பனத்தில் பிச்சையெடுக்கிறவன் பிச்சை யெடுக்கக் கா ண்கிருப்போலவும் வெதமோதுகிறவன் வேதமோதக் காண்கி ருப்போலவும் செபிக்கிறவன் செபிக்கக்காண்கிருப்போலவும் இந்த வுபாச க்ருந்தினந்தோறுந் தியானம்பண்ணக்கண்டால் வுபாசனை முதிர்ந்தது.

ச-கை. ஞானம் வஸ்து தந்திரமென்பதிலுந் தியானங் கர்த்த தந்திர மென்பதிலும் யுக்தியேதென்னில்,

உ-ம். கூடஸ்த சைதன்னியத்தை வேதஞ்சொன்னபடியிருக்கிறதோ வில்லையோவென்று லட்சணுவிருத்தியா லொருபடித் தாய்ச் சோதித்துப் பார்த்துக்கொள்ளுகிறதேயன்றி தான் வேண்டிய படி சிந்திக்கப்படாதபடியால் ஞானம் வஸ்து தந்திரம் உபாச னை தனக்கு வேணபடி செய்துக்கொள்ளவும், செய்யாமலிருக் கவும் மாறுபாடாய்ச் செய்துக்கொள்ளப்பட்டபடியால் கர்த்த தந்திரம் ஆகையால் உபாசனைக்கெந்நேரமுந் தியானஞ்சாவதா னமாய்ப்பண்ணவேண்டும்.

ச-கை, எந்நேரமுந் தியானத்தின் மனதாயிருக்கிறவனுக்குச் செய்கா ரிய மெப்படிநடக்கும் சாட்சாத்கார ஞானிக்குச் செய்காரிய மெப்படி நடக்குமென்னில்.

உ-ம். பரபுருடனை யடைகிறநாரி எந்நேரமு மவனிடத்தி லாஙடம னதாயிருந்தாலு மேலெழுந்தவாரியாய் செய்காரியஞ் செய்து ஒப்பிவிக்கிருப்போல தியானம்பண்ணுகிறவனும் மேலெழுந்த வாரியாய் செய்காரியஞ் செய்வன் கூத்தாடி பாசாங்கடிக்கிரு ப்போல் சீவன்முத்தன் நன்ருகச் செய்காரியமொன்றுந் தப் பாமற்செய்வன்.

ச-கை. லோகவியாபாரத்திற்குவிரோதமேது அவிரோதமேதென்னில்.

உ-ம். மனதாற் றியானமும் மற்றதேக விந்திரியங்களாற் செய்தொ ழிலும் இப்படி யிருவாளிச்சவேலையானபடியால் உபாசனை லோகவியாபாரத்திற்கு விரோதம் ஆன்மா சின்மாத்திரம் மற் றுள்ளதெல்லாம் மாயாமயமென்கிற ஞானத்திற்கு விவகார சாதனமான திரிவிதகாரணத்தி லொன்றும் வேண்டாதபடியால் ஞானம் விவகாரவிரோதமல்ல.

ச-கை சாட்சாத்காரமுள்ளவனுக்கு லட்சணமேது பிரமத்தியானம்பண்ணுகிறவனுக்கு லட்சணமேதென்னில்.

உ-ம். கடத்தைப்பார்க்கிறவன் புத்தியைத் தெண்டியாததுபோலத்தத்துவமுள்ளபடி கண்டுகளித்துகவலைகெட்டிருக்கிறவன்ஞானி பிரபஞ்சத்தைநினைத்தாற் றியானங்கலைந்து கெட்டுப்போமென்கிற ஏக்கத்தோடே புத்தியைமறித்துத் தெண்டித்துக்கொண்டிருக்கிறவன் உபாசகன்.

ச-கை. ஒருக்காலறிந்தகடத்தை மறுபடிவேண்டியபோதறிகிறதற்குஞ் சிந்திக்கிறதற்கும் இப்படி யிருக்குமென்றுசொல்லுகிறதற்கும் எத்தனமில்லையே பிரமஞானிக்கு இப்படிகூடுமோவென்னில்.

உ-ம். அப்பிரகாசமாயிருக்கிறகடமே ஒருக்காற்கண்டத்தோடே இப்படிதெரிந்தாற் சுயம்பிரகாச சைதன்னியத்திற்குக் கேட்கவேண்டுமோ.

ச-கை, நான் பிரமமென்கிற விருத்திஞானங் கணப்போதிலே நஷ்டமாய்ப்போமேயென்னில்.

உ-ம். இதுவுங் கடஞானத்தோடுஞ்சரியல்லவோ.

ச-கை, இப்படி தத்துவஞானிக்கொரு சிந்தனையு மில்லாவிட்டால் எங்கோமு மனது வெளியிலுடுமேயென்னில்.

உ-ம், கற்பிதமா யிருக்கிறவஸ்து பிரவிர்த்திச்சதுகொண்டு தனக்காணியேது.

ச-கை. இப்படியானல் உமது சித்தாந்தமும் அமரியாதையாய் முடியுமேயென்னில்.

உ-ம். விதிநிஷேதசாஸ்திரமரியாதை தத்துவ ஞானியைக்குறித்துச் சொன்னதல்ல.

ச-கை. விதிநிஷேதசாஸ்திரமாரைக்குறித்துப் புறப்பட்டதென்னில்.

உ-ம். வர்ணாச்சிரமம்வயது அவஸ்தையென்கிறஅபிமானியைக்குறித்துப்புறப்பட்டது.

ச-கை, ஞானிக்கு வர்ணாச்சிரமம்வயது அபிமானமில்லையோஎன்னில்

உ-ம். இந்த வர்ணாச்சிரமாதிகள் மாயாகற்பித வுமாதிமாத்திரத்திற்கண்டதல்லாமல் ஆன்மாவிடத்திலில்லை.

ச-கை, முன்பு அஞ்ஞான அவஸ்தையி லனுசரித்தவிதிகள் மற்றோர் அவஸ்தையிற்கைவிட்டாற் றோஷமில்லையோவென்னில்.

உ-ம். கர்மிகளுக்குப் பாலிய அவஸ்தையில் விதிநிஷேதந் தேவையற்றதுபோல் ஞானவவஸ்தைக்குந்தேவையில்லை.

ச-கை. குழந்தையொன்றுமறியாத வஞ்ஞானியல்லவோ ஞானியு மப்படியோவென்னில.

உ-ம். ஒன்றுமறியாத பாலகனுக்கு மெல்லாமறிந்த சர்வேஸ்வரனுயி ருக்கிற ஞானிக்கும் இவ்விருவருக்கும்விதி நிஷேதமேதந் தேவையில்லை.

ச-கை. பின்னையாருக்கு விதிநிஷேதமென்னில்.

உ-ம். சொற்பமறிந்து மறியாமலுமிருக்கிற மூடனைக்குறித்துவிதி நிஷேதமெல்லாம் புறப்பட்டது.

ச-கை, ஞானியாயிருக்கிறநீர் செகதீஸ்வரனுனற் சாபானுக்கிரகம்பண்ணவேண்டுமேயென்னில்.

உ-ம், சாபானுக்கிரக சாமுர்த்தியந் தபோபலமல்லாமல் ஞானபலமல்ல.

ச-கை. தபசாற் பிரமத்தையறியவேண்டுமென்று தயித்திரிய வுபநிஷத்திற்சொல்லுகிறதே ஆகையால்ஞானம் தபோபலமல்லவோவென்னில்.

உ-ம், இந்த ஞானகாரணமான தபசு சாபானுக்கிரகத்திற்குக் காரணமல்ல.

ச-கை. இந்த ஞானத்திற்குப் பூர்வாசாரியர்களாயிருக்கிற வியாசர் யாக்கியவர்க்கர் முதலானபேருக்கு இருவகையுங் காணப்பட்டிருக்கின்றதே இப்படி ஞானமுள்ளபேருக்கெல்லாம் இருக்கவேண்டாமோவென்னில்.

உ-ம். மந்திரவாத சாமர்த்தியமும் ஞானமும் ஒருவனிடத்தி லிருக்கக்கண்டாப்போலவுஞ் சோதிஷமும் ஞானமும் ஒருவனிடத்திலிருக்கக்கண்டாப்போலவும் ரசவாதமும் ஞானமும் ஒருவனிடத்தி லிருக்கக்கண்டாப்போலவுஞ் சாபானுக்கிரகமும் ஞானமும் வியாசாதிகளிடத்திற் காணப்பட்டது இந்தச் சாமர்த்திய விசேஷங்களெல்லாம் ஞானபலமல்ல ஞானமாத்திர மப்பியாசித்தவனிடத்திற் சீவன் முத்திமாத்திரமே யல்லாமல் இந்தச் சாமர்த்தியமெல்லாங்காணுது.

ச-கை. சாபானுக்கிரக சாமர்த்தியமில்லாதிருந்தால் இவனென்ன ஞானியென்று எல்லாராலும் நிந்திக்கப்படுமேயென்னில்.

உ-ம். விதி நிஷேதசாஸ்திரத்தைக்கைவிட்ட சன்னியாசிகளை யெல்லாரும் பூசைபண்ணுகிறதேயல்லாது ஒருவரும் நிந்திக்கக்காணோம்.

ச-கை. மோகலம்படனுய்த் தூர்த்தனுயிருக்கிற பேரெல்லாஞ் சன்னியாசிகளை நிந்திக்கிறார்களேயல்லாமல் பூசிக்கக்காணோமே யென்னில்.

உ-ம். இவ்விதத்திற்கு வர்ணாச்சிரமதேகாபிமானிகள் ஞானியைநிந்திக்கட்டும் மாடுகள் புலிகள் ஞானியைப்பாயவரட்டும் அதனால் ஞானிக்கானியேது.

ச-கை. ஆனகையா லிப்படிவேணவண்ண மிருக்கலாமென்கிறபடியினால் ஞானிக ளரசாளலாமோவென்னில்.

உ-ம். ராச்சியபாரம் பண்ணவேண்டினாலும் பண்ணலாம்.

ச-கை. மாயாகற்பிதமானசகத்தில் மித்தையென்கிற புத்திவந்தபின்பு ராச்சியபாரம்பண்ண விச்சைவந்தால் ஞானமப்பிரயோசனமாமேயென்னில்.

உ-ம். மித்தையாபுத்தியினா லாசையற்றுப்போனால் கர்மந்தான் உபாசனைதான் தியானந்தான் ராச்சியந்தான் பிராரத்துவ முள்ளபடியே ஞானிசெய்துவருவன்.

ச-கை, உபாசகனுக்கும் இப்படி வேண்டியவண்ணம் இருக்கலாகாதோவென்னில்.

உ-ம், மூர்த்தித்தியானம்போலத் தியானத்தால் நாம் பிரமமென்கிற நிலை தியானம்விட்டால் இல்லாமற்போகிறபடியால் நிரந்தரஞ் சாவதானமாய்த் தியானம்பண்ணிக்கொண் டிருக்கவேண்டுமேயல்லாமல் உபாசகனுக்கு வேணபடி ஞானியைப்போ லிருக்கக்கூடாது.

ச-கை, ஞானிக்கும் ஞானமறந்திருக்கிறவேளையில் பிரமத்துவமில்லாமை சரியல்லவோவென்னில.

உ-ம். பிராமணனுக்கு நான் பிராமணனென்கிறது நினையாவிட்டாலும் சுபாவசித்தமா யிருக்கிறாப்போல லட்சணாவிருத்தியால் ஆன்மாவைச் சோதித்தறிந்திருக்கிற ஞானிக்குத் தான் பிரமமென்பது மறந்திருந்தாலுஞ் சுபாவசித்தமாயிருக்குமேயல்லாது தியானம்பண்ணுகிறவனைப்போல் மறந்து கெட்டோமென்கிறது ஒருக்காலும்வாராது.

ச-கை. இவ்விதமா யுபாசகனுக்கு மறந்திருந்தாலும் சுபாவ சித்தமாயிருக்கிற பிரமத்துவமுண்டோ வில்லையோவென்னில்.

உ-ம், இந்த வுபாசகன் மாத்திரமல்ல மற்றப்பாமரர் நாற்காற்சாதிமுதலானதுகட்கும் பிரமத்துவஞ் சுபாவசித்தந்தான்.

ச-கை. பாமரர் விலங்குகண் முதலானவைகட்கும் நான் பிரமமென்கிற வறிவில்லாமையாற் சுபாவசித்தமாயிருக்கின்ற பிரமத்துவத்தினால் பிரயோசனமேதென்னில்.

உ-ம், அப்படி யறிவில்லாமை யிவனுக்குஞ் சரியானபடியாற் சுபாவசித்தம் பிரமத்துவத்தினாற் பிரயோசனமற்றுப்போன துஞ்சரி

ச-சை, ஆனல் பிரமத்தியானமும் இப்படி பிரயோசனமற்றதோ வெ ன்னில்.

உ-ம். பட்டினியிருக்கிறதிலும் பிச்சையெடுத்தாகிலும் பொசிக்கிறது தாவளேயென்பதுபோல் இகரவியாபாரத்திலிருந்து விட்சேப ப்படுகிறத்திலும் பிரமத்தியானமதிகம்.

ச-கை. எந்தெந்தச் சாதனையைப்பார்க்கிலும் பிரமத்தியான மதிகமெ ன்று சொல்லவந்தீரென்னில்.

உ-ம், பாமரவியாபாரத்திலுங் கர்மானுஷ்டான மதிகம் அதனிலுஞ் சகுணவுபாசனையதிகம் அதனிலும் விஸ்வரூபத்தியானமதிகம் அதனிலுஞ் சாதனசதுஷ்டயமதிகம் அதனிலுஞ் சிரவணமதி கம் அதனிலு மனனமதிகம்அதனிலுநிற்குணத்தியானமதிகம்.

ச-கை. ஈதெல்லாம் ஒன்றுக்கொன் றுதாரதன்மியமா யிருப்பானே னென்னில்.

உ-ம். இராஜாவைக்கிட்டக்கிட்ட பௌஷதிகமும் பிரயாசை அற்ப முமாயிருக்கிறுப்போல பிரமஞானத்தைக் கிட்டக்கிட்ட ஆதி க்கமதிகம்.

ச-கை. பிரமத்தியானத்திற்குமேல் ஞானமெத்தனைபடி யொழுங்கிலி ருக்கின்றதென்னில்.

உ-ம், சம்வாதிப்பிராந்தி முடிந்தவிடத்தில் ரத்தினத்தைக் கொடுக்கி றுப்போல் நிற்குணத்தியானந்தான் முடிந்தவிடத்திற்பிரமஞா னஞ் சமாதியாகிறதேயல்லாமல் இடைநடுவே வேறுசாதனமி ல்லை ஆகையால் அறிந்தவ னறியாதவ னெல்லாருக்கு முள்மு டக் குறுக்குவழியே மோட்சத்தைக் கொடுக்கையால் தியான தீபத்தில நிற்குணதியானத்தைச்சொல்லவந்தோம் சித்தநிரோ தமே சமாதியென்றும் இதுவே சத்தியமென்றும் அமிர்தவிந் துபநிஷத்திற்சொல்லுகின்றது.

ச-கை. அதுவொன்றுமறியாதவருக்குத் தியானத்தினு லெப்படிசித்தி க்குமென்னில்.

உ-ம். தியானமாத்திரத்தால் நான் பிரமமென்கிறபுத்தி திடப்பட்டு நிலைநின்றவுடனே நிர்விகாரத்துவ லட்சணமும் புத்தியிலெளி தாயேறும் இதுகாரியத்தால் சமாதியாகவுங்காணப்படும்ஆகை யால் சகலசாதனங்கட்கும் பிரமத்தியானமே யதிகம்.

ச-கை. மூர்த்தித்தியானம் தீர்த்தாடனஞ் செபங்களும் இப்படிமோ ட்சசாதனமாகாதோவென்னில்.

உ-ம், பிரமத்தியானத்தை யுபேட்சித்து தீர்த்தாடனம் செபயோக ங்களைப்பண்ணுகிறது உள்ளங்கையிலிருக்கிற யாத்திரையை

மெறிந்து எட்டப்படாத மூழுங்கையை நக்குகிறதற்குச் சரியா கையாற் பிரமத்தியானத்திற்குச் சரியான சாதனம் ஒன்று மில்லை.

ச-கை, இப்படிக்குச் சாட்சாத்கார விசாரத்தைவிட்டுத் தியானம்பண் ணுகிறவனுக்குஞ் சரியல்லவோவென்னில்.

உ-ம், நீசொன்னது நன்மைதான் இப்படி யோகசமாதி முதலானது கள்சாட்சாத்கார விசாரங் கிடையாதகாலத்திற்குவிதி.

ச-கை. பிரமத்தியானம்போல யோகசமாதியுஞ் சாட்சாத்காரத்திற்கு க்கிட்டின பூமியென்கிற தெதினுலென்னில்.

உ-ம். யோகத்தால் விட்சேபமெல்லாந்துடைப்பட்டு சித்தநிரோதம் வரும் அந்தச்சித்தத்திற் சாட்சாத்கார விசாரமெளிதாயேறும் ஆகையால் யோகமுக்கியமென்மது.

ச-கை, இப்படியானுல் சாங்கியத்திற்கும்யோகத்திற்கும் விரோதமே தென்னில்.

உ-ம். சிதாபாசனையும் ஆன்மாவையும் பகுத்துக்காண்கிறதும் ஒரு மையாய்க் காண்கிறதுமேயல்லாதுவேறொருவிரோதமுமில்லை

ச-கை, பிரமத்தியானத்தினுல் சாட்சாத்கார விசாரத்தை யல்லாமல் மோட்சமுண்டென்கிறதற்குஉத்தியேது பிரமாணமேதெனில்.

உ-ம். குளவியைநினைத்தபுழு குளவியானுப்போ லென்கிறதேயுத்தி இந்தப்படி மாணகாலத்தி லெதைநினைத்தான் அதுவாய்ப்போ வனென்கிற கீதாவசனமே பிரமாணம்.

ச-கை, தியானங் கிடைப்பட்டல்லவோ ஆபத்துவேளையி லுதவவேண் டும் இடைவட்டத்திற் சரீரம்விழுந்தா லெந்தகதியையடைவ னென்னில.

உ-ம். பிரமலோகத்திற்போய் தத்துவஞானத்தையடைந்து மோட்ச மடைவனென்று தாபநீய வுபநிஷத்துசொல்லுகின்றது இதை த்தவிர மோட்சத்திற்கு வேறுவழியில்லையென் றெசுர்வேதத் திலுஞ்சொல்லுகின்றது நாசிகேதுவுக்கு எமனிதேவழியாய்ச் சொன்னுனென்றுஞ் சத்தியகாமனென்கிறரிஷிக்குப் பிரகலா தன் இது வழியாகச்சொன்னுனென்றுங் கிருஷ்ணனும் ஆன்ம கீதையிற் பூமியிலிருக்கிற புதையலை யெடுக்கிறதற்கு வெட்டு கிறதே வழியொழிய வேறுவழி யில்லாததுபோல் பிரமத்தை யடைகிறதற்குத் தியானமேவழியொழிய வேறுவழியில்லையெ ன்றுந் தேகமாகிற கல்லைப்புத்தியாகிற குந்தாலியாற் பொளிந் துதள்ளி நாம் பிரமமென்கிற தியானத்தாற் பிரமமாகிறபுதை

யிலே யடையலாமென்றார் ஆகையால் தியானத்திற்குச் சரியா னமோட்சமார்க்கம் வேறொன்றுமில்லை.

ச-கை. சாட்சாத்கரித்தறியவேண்டினபிரமத்தை அப்படியனுபவியா மற் றியானத்தா லெப்படியடையலாமென்னில்.

உ-ம். அனுபவமில்லாவிட்டாலும் நான் பிரமமென்று சிந்தித்தால் அசத்தாயிருக்கிற வத்துவுந் தியானத்தாலடையலாயிருக்கையி லூற்றுவிசாரிக்கத் தானா யுண்மைப்பொருளாயிருக்கிற பிரமந் தியானத்தாலடையப்படுமோவென்று ஒருவனையுங் கேட்கத் தேவையில்லை ஆகையால் பூதமாயிருக்கிறநாசியை யுபாசிக்கத் தாரகப்பிரமஞ் சித்திக்கிறாப்போலவுஞ் சம்வாதிப்பிராந்தியிற் பிரவிர்த்திக்கரத்தினம் அகப்பட்டாற்போலவும் தேகாபிமான மவிட்டு தியானத்தினால் அத்துவிதமாயிருக்கிற ஆத்மாவே தா னென்று தியானிக்கிறவன் இங்கேதானே மோட்சத்தையடை வனென்று வேதஞ் சொல்லுகின்றது இந்தத் தியானதீபிகை யை யாதொருவ னிரந்தரம் பாராமரிக்கிறானோ அவன் சகலசந் தேகமுமற்றுப் பிரமத்தியானத்தை நிரந்தரஞ்செய்து மோட் சத்தையடைவன்.

தியானதீபிகை- முற்றிற்று.

ஐந்தாவது

# நாடகதீபிகை.

வித்தியாரண்ணியசுவாமிகள் வேதாந்தார்த்தம் விரிவிலறியமாட் டாதவனுக்கு ஆத்மஞானம் வருகிறவழியை நாடகதீபிகையிற்சங்கிரகி த்துச்சொல்லுகின்றார்,

ச-கை. ஆன்மாவாவதார் அவருக்குச் சிருஷ்டி யெதினால்வந்தது சகத் தானவஸ்துவெது சீவனாவதார் சமுசாரபந்தமாவதெது இதை விடுவிக்கிறமுத்தியெது இந்தமுத்திக்குச்சாதனமேதென்னில்.

உ-ம், மாயாசத்திக் காதாரமாயிருக்கிற அத்துவை தானந்தசைதன் னியமேயான்மா நிருவிகார சுபாவமாயிருககிற இவருக்குத்தம் முடைய மாயாவுபாதியாற் சிருஷ்டிவந்தது ரச்சுசற்பம்போல் சகத்தாய்த் தோற்றினவர் ஆன்மா வுபாதிகளிற் பிரதி பிம்பித் துச் சரீரங்களிற்பிரவேசித்து விவகரிக்கிற சிதாபாசன்றான் சீவன் சிதாபாசத்தோற்றரவானது வைதத்தோற்றாவேபந்தம் விசாரத்தான்மாயை நஷ்டமானபின்பு சித்திக்கிற அத்துவைத நிலையே முத்திவேதாந்த விசாரத்தாற் பிறந்தஞானமே முத்தி [illegible]

ச-கை. வேதாந்தவிசாரமெதினால்வருங் குருவை வழிப்பட்டு விசாரம்பண்ணுகிறவனுர் குருமுகமாய் ஞானத்தைக் கொடுக்கிறவுரார் எதுசெய்தால் ஞானங்கொடுப்பாரென்னில்.

உ-ம், அனேகசெனனம் ஈஸ்வரனை யுபாசித்தபேருக்கு வேதாந்தவிசாரம்பண்ணக்கிடைக்கும் நானென்று தேகவபிமானியாயிருக்கிற சைதன்னியமே விசாரிக்கிற கர்த்தன் சகதீஸ்வரனே குருரூபமாய் ஞானங்கொடுக்கிறவர் நிஷ்காம வனுஷ்டானபத்தியால் ஞானங்கொடுப்பார்,

ச-கை, ஈஸ்வரனுவதார் ஒரு சைதன்னியத்திற்குச் சீவன் ஈஸ்வரனென்று இருவகைத் தாரதன்மிய மெதினாலவநதது இவர் மாயையாற் சிருஷ்டிபண்ணுகிற அடைவெப்படி சிருஷ்டிக்குச் சாதனபரம்பரையேது எத்தனை வகுப்பிற் சிருஷ்டியடங்கிற்று இத்தவகுப்பெல்லாந் தோற்றுவிக்கிறவராரென்னில்.

உ-ம், சாத்தீகவுபாதியால் திரிமூர்த்திரூபமாய்த் தோற்றின சைதன்னியம் ஈஸ்வரன்மாயை அவித்தையென்கிற வுபாதியாற் ரூதன்மியம் தந்ததல்லாது சைதன்னியத்தைப்பற்றி வரவில்லை சாத்துவீக வுபாதியால் ஈஸ்வரனையும் ராஜசவுபாதியாற் சீவனையும் தாமதவுபாதியான் மனதுமுதலான பூதபௌதீகப் பிரபஞ்சத்தையுஞ் சிருஷ்டித்தார் பிரகிருதி குணத்திரயம் மனதுநானிதென்கிற விருத்தி இந்நான்குஞ் சிருஷ்டிக்குச் சாதனபரம்பரை நானென்கிற விருத்தியிலும் ஈதென்கிறவிருத்தியிலுங் கர்த்தாவும் விஷயமுமாயிருக்கிற சிருஷ்டியடங்கிற்று இத்தனையுந் தோற்றுவிக்கிறவர் ஆன்மா,

ச-கை. நானென்கிறவிருத்தி கர்த்தாவை பொருவனைக்கற்பிப்பானேன் இதுவென்கிற விருத்திச் சத்தாதிகளைந்தையுங் கற்பிப்பானேனென்னில்.

உ-ம். நானென்கிறவிருத்தி யேகாக்கிரமானபடியால் கர்த்தா ஒருவனையே கற்பித்தது இதுவென்கிறவிருத்தி இந்திரியபேதங்களால்-அனேகாக்கிரகமாய்ப் பிரிந்தபடியால் பஞ்சவிஷயத்தைக் கற்பித்தது.

ச-கை. கர்த்தாவொன்றென்கிறதிலும் விருத்திபிரண்டென்கிறதிலும் விருத்திகற்பிதமென்கிறதிலும் பிரமாணமேதென்னில்.

உ-ம். நாடகசாலை விளக்கு ராஜாவையும் பரிவாரங்களையும் ஆடுகிறவளையுந் தாளமத்தளக்காறரையும் தாரதன்மியமறத்தோற்றுவித்து அவர்க ளில்லாதவேளையிலுந் தான் விளங்குகிறுப்போ

லக் கர்த்தாமுதலானவை யுள்ளவேளையும் இல்லாதவேளையுங் கண்டிருக்கிற சாட்சிதானென்கிற அனுபவமே பிரமாணம்.

ச-கை. நாடகசாலைவிளக்கு ராசாமுதலான திட்டாந்தத்தையும் என் சரீரத்தி லிது இன்னதென்று பகுத்துக்காட்டுமேயென்னில்.

உ-ம். அகங்காரியே பிரபுவிஷயங்களே பரிவாரங்கள் கூத்தாடியே புத்தி இந்திரியங்களே தாளமத்தளக்காரர் இத்தனையுந் தோற்றுவிக்கிறசாட்சியேதீபம்.

ச-கை. அசைவற்ற சாட்சிக்குத் தீவட்டி திட்டாந்தமாகா தென்னில்.

உ-ம், அசையாம னட்டிவைத்த பகல்வத்தி யிருந்தவிருப்பினுலு புறமூந் தோற்றுவிக்கிறாப்போல் அகண்ட பரிபூரணமா யசைவற்றிருக்கிற ஆன்மா உள்ளும் புறம்புந் தோற்றுவிக்கிறார்.

ச-கை, உள்ளாவதெதைக்குறித்து வெளியாவதெதைக்குறித்து உள்ளேயிருக்கிறவரார் வெளியிலிருக்கிறவரார் உள்ளும் புறம்புந் திரிகிறவரார் உள்ளும் புறம்பு மசையாதிருப்பவ ரானென்னில்.

உ-ம். உள்ளும் புறம்மென்கிறது சரீரத்தைக்குறித்தேயொழிய சாட்சியைக்குறித்தல்ல நானென்கிறவகங்காரியுள்ளேயிருக்கிறவன் வெளியிலிருக்கிறது விஷயங்கள் உள்ளும் புறம்புஞ் சஞ்சரித்துக் கூத்தாடுகிறது புத்தி உள்ளும்புறம்பு முள்ளதையெல்லா மசையாமனின்று தோற்றுவிக்கிறவர்சாட்சி.

ச-கை, உள்ளும் புறம்புஞ் சஞ்சரிப்பது புத்தியேயானுல் அப்படிஒருவருஞ் சொல்லக்காணேம் நான்போனேன் நான் வந்தேனென்று சொல்லுகிறார்கள் இதில் காரணமேதென்னில்.

உ-ம். பலகணிவழியா யுள்ளேவிழுந்த வெய்யிலிற் கையசைகிறதை வெய்யிலசைகிற தென்கிறாப்போல உள்ளே யிருக்கிற புத்தியும் இந்திரிய துவாரத்து வெளியி லலைந்துதிரிந்து தன்னுடையவலைச்சலைத் தன்னைத்தோற்றுவித்த சாட்சியின்பேரி லாரோபித்ததாகையால் ஆன்மாவிற்கலைச்சலில்லை.

ச-கை. இப்போது இன்னதத்துவ மின்னவிடத்தி லிருக்கிறதென்று பகுத்துக்காட்டினுப்போலச் சாட்சியிருக்கிறவிடம் இன்னவிடமென்று காட்டவேண்டுமென்னில்.

உ-ம். புத்திமுதலானதெல்லா மொழிந்திருக்கிற அவத்தையிற் சாட்சியிருக்கிற விடத்தைக் கண்டுகொள்.

ச-கை. அப்போது எனக்கொருவிடமுங் காணப்படவில்லை சாட்சியிருக்குமிடம் நீர்தானே சொல்லுமென்னில்.

உ-ம். நிலத்திலிருக்கிறவன் நீரிலிருக்கிறுனென்கிறதுபோல் புத்திமுதலானது ஒழிந்தவேளையிற் காணப்படாததுகொண்டு ஒருவிட

த்தையும் பற்றியிருக்கிறவரல்ல சகத்கற்பனைக்கு மிருப்பிடமா ய்க் காணுகையாற் சர்வத்திரபரிபூரணர்.

ச-கை, சகலசெகங்களையுங் கற்பிக்கிறதேது சகலத்தையுஞ் சாட்சி யெப்படிகாண்கிருர் அவரை நாமெப்படி யறிவதென்னில்.

உ-ம். சொற்பனத்தி லுட்பிரபஞ்சத்தையும் சாக்கிரத்தில் வெளிப் பிரபஞ்சத்தையும் கற்பித்தது புத்தி இத்தனையு மறிவா யிருங் தறிகிறவர்சாட்சி அவ ருன்னாலறியப்படுகிறவரல்ல நீ தானாக வே மிஞ்சுகிறவஸ்து.

ச-கை, இப்படிக்கொத்த அறிவுவருகிறதற்கு உபாயமேது இப்படி தா னாகவிருக்கிற அறிவை யறியவொட்டாத பிரதிபந்தமேது இந் தப் பிரதிபந்தத்தைத்தள்ளி மோட்சத்தை யடைவ தெப்படி யென்னில்.

உ-ம். குருமுகமாய் வேதாந்தத்தைப் படித்தறிவதே யுபாயம் தேகா திகளே நாம்பிரபஞ்சஞ்சத்தியமென்கிற இருவகைப்புத்தியும் பிரதிபந்தம் இந்தப்பிரதிபந்தத்தைக் கொடுக்கிற புத்தியையும் புத்திகற்பிதப் பிரபஞ்சத்தையும் காண்கிற அறிவாகவிருந்து பிரதிபந்தங்களைத்தள்ளி மோட்சத்தையடைகின்றது.

இந்த நாடகதீபிகையைத் தினமனுசந்தானம் பண்ணிவருகிறவன் சாட்சியே தானாகி நித்திய திருப்தியை யடைந்திருப்பன்.

நாடகதீபிகை - முற்றிற்று.

இரண்டாவது

விவேகபஞ்சகத்தில்-முதலாவது

# தத்வாதத்வவிவேகம்.

வித்தியாரண்ணிய சுவாமிகள் லோகானுக்கிரக நிமித்தியமாய்ச் சகலவேதசித்தாந்த ரகசியமான விவேகபஞ்சகத்தை வெளியிடத்துட ங்கி ஆதியிற் சிஷ்டாசாரமாய் குருவுக்கு நமஸ்காரம் பண்ணும்படி அனேகவித லட்சண விஸ்தாரத்தோடு கூடியிருக்கிற மகாமாயா மோ கத்தையெடுத்து விழுங்குகிறதே வேலையாயிருக்கிற ஆசாரியசுவாமிக ளது பாதாரவிந்தங்கட்கு நமஸ்காரமென்று அந்தக் குருமூர்த்தியினு டைய பாதாரவிந்தத் தியானத்தினால் நிர்மல அந்தக்கரணனுக்கு பர மாத்மாவை யெளிதா யறியும்வழிநோக்கி தத்வாதத்துவவிவேகஞ்சொல் லுகின்ருர்.

ச-கை, தத்துவமாவதேது அதத்துவமாவதேது விவேகமாவதேதென்னில்.

உ-ம், தத்துவமாவது பரமாத்மா அதத்துவமாவது மாயையு மதன் காரியமும் அதைப்பகுத்தறிகிறதே தத்துவவிவேகம்.

ச-கை. பகுத்தறிவதெப்படியென்னில்.

உ-ம். அறிவாயிருக்கிற தின்னது அதினாலறியப்படுகிற தின்னதென்று காண்கிறதே பகுத்தறிகிறவழி.

ச-கை. அறிவு எத்தனைவிதமாயிருக்கும் அறியப்படுகிறதெத்தனைவிதமாயிருக்குமென்னில்.

உ-ம், அறிவாயிருக்கிறவான்மா வொருவரேயொழிய விரண்டில்லை அறியப்படுகிறது ஸ்திரமென்றும் அஸ்திரமென்றும் மூலாஞ்ஞான விருளென்றும் மூன்றுவிதமாயிருக்கும்,

ச-கை. அறிவு ஒன்றென்கிறதையும் அறியப்படுவது மூன்றென்கிறதையும் எனக்குத்தெரியச்சொல்லுமென்னில.

உ-ம். சாக்கிரத்தில் விசித்திரமாய் ஸ்திரமாயிருக்கிறவிஷயங்களையும் சொற்பனத்தில் அஸ்திரமாயிருக்கிற விஷயங்களையுஞ் சுழுத்தியிலந்தகாரமாயிருக்கும் விஷயத்தையுந் தினந்தோறும் மாதந்தோறும் வருஷந்தோறும் கற்பந்தோறு மறிந்துகொண்டிருக்கிறவறிவு அந்த விஷயம்போ லொருக்காலு முதித்து மறையாதபடியினால் ஆன்மா வொன்றேயொழிய விரண்டில்லை.

ச-கை. இதி லானந்தமாய் நாடவேண்டிய பொருளேது நாடாமற் றள்ளவேண்டிய பொருளேதென்னில்.

உ-ம். மூன்றவத்தையிலுங் காணப்பட்டபொருளெல்லாந் தனக்கன்னியமானபடியால் தள்ளவேண்டியது அறிவாயிருக்கிற தன்னைக் கைவிடப்படாதபடியால் ஆனந்தமாக நாடவேண்டியது,

ச-கை. இந்த அறிவாயிருக்கிறபொருள் எக்காலத்திலுந் தானாகத்தோற்றினும் அஞ்ஞானகாலத்தில் தானாக வறியப்படாம லிருப்பானேனென்னில.

உ-ம், சகமாடிகளோடோதுகிற தன்பிள்ளைக்குரல் தெரியாததுபோல வனாதிசித்து அஞ்ஞானத்தோடேகூடிக் குழம்பித் தோற்றுகையாற் றோற்றாமலிருந்தது.

ச-கை, அனாதி சித்தவஞ்ஞானமாவதேது அதெதினா லுண்டாச்சுது அதற்கு லட்சணமேது அது என்னத்தைச்செய்யும் அதெதினாற்போமென்னில்.

உ-ம். அக்கினியிலிருக்கிற சூடுபோலவுஞ் சலத்திலிருக்கிற குளிர்ச்சி போலவும் பிரமத்தினிடத்திற் சீவனையும் செகத்தையும் ஈஸ்வரனையும் உண்டாக்குகிற மூலப்பிரகிருதியென்கிற சத்திதானேயனாதி சித்தவஞ்ஞானம் ரச்சுவிற் சற்பந்தோன்றினாப்போல் பிரமத்தினிடத்தி லிந்தப்பிரகிருதி தோற்றிற்று சத்துமல்ல அசத்துமல்ல சத்தசத்துமல்ல ஒன்றுமல்ல பலவுமல்ல சாவயவமுமல்ல நிரவயவமுமல்ல சாவயவ நிரவயவமுமல்ல பிரமாணமும் அப்பிரமாணமுமல்ல நிரூபித்துப்பார்க்கில லட்சணங்கெட்டுப் போமென்று வேதஞ்சொன்னதே லட்சணம இது தன்னுடைய முக்குணத்தாற் சீவனையுஞ் செகத்தையும் ஈஸ்வரனையுமுண்டாக்கும் பிரமம் நாமென்கிற அத்துவைத ஞானத்தாலதுபோம்.

ச-கை. முக்குணத்தாற் சீவனையுஞ் செகத்தையும் ஈஸ்வரனையும் உண்டாக்கின அடைவெப்படி.

உ-ம், மூலப்பிரகிருதியினுடைய சாத்துவீககுணமான சுத்தமாயையிற் பிரதிபலித்தவன் ஈஸ்வரன் பஞ்சகிருத்தியபராயிருக்கிற இந்த அந்தரியாமியை யுண்டாக்கின மாயையே அவருக்குக் காரணசரீரம் அசுத்தமாயையான அவித்தையிற் பிரதிபலித்த சைதன்னியம் சீவன் இந்தப்பிராஞ்ஞனுக்குக் காரணசரீரமான அவித்தை தாரதம்மியமாய் வெகுவிதமானபடியால் சிதாபாசர்களும் அனந்தமாயிருப்பதாமத குணப் பிரகிருதியினின்றும் இந்தச் சீவர்களுக்கு போக போகாதிகளை யுண்டாக்க ஈஸ்வராக்கினையினால் ஆகாசம் வாயுவு அக்கினி யப்பு பிருதிவு என்னப்பட்ட முக்குணமான சூட்சும பூதமைந்து முண்டாயிற்று இந்தப் பூதங்களினுடைய சாத்வீகாம்சத்திலே யொரு மாத்திரையெடுத்து ஒன்றாகக்கூட்டினது அந்தக்கரணம் இது சஞ்சலவியாபாரத்தால் மனமென்றும் நிச்சயவியாபாரத்தால் புத்தியென்றும் இரண்டுவிதமாயிருக்கும் மீளவுஞ் சாத்வீகாம்சத்தில் பூதத்திற் கோரொருமாத்திரை யெடுத்துத் தனித்தனியே வைத்தது சுரோத்திரந் தொக்கு சட்சு சிங்குவை யாக்கிராணமான ஞானேந்திரியமாயிற்று மீளவும் ராசதாம்சத்தில் பூதத்திற்கோரொரு மாத்திரையெடுத்து ஒன்றாகக் கூட்டினது பிராண அபான வியான சமான உதானனென பஞ்ச வாயுக்களாயிற்று மீளவும் ராஜகாம்சத்தில் பூதத்திற் கோரொருமாத்திரை யெடுத்துத் தனித்தனியே வைத்தது வாக்கு பாதம் பாணி பாயு உபஸ்தமான கர்மேந்திரியமாயிற்று-ஆக இந்தப் பதினேழாகத்துவமும் லிங்கசரீரமென்றும் சூட்சுமசரீரமென்றும் போகசா

தனமென்றுஞ் சொல்லப்படும் இந்த சூட்சும சரீரத்துடனே கூடுவதாய் அவித்தையாப் பிரதிபிம்பனுக்குப் பிராஞ்ஞனென்கிறபேர்மாறி தைசதனென்கிறபேர்வந்தது சர்வ சீவர்களுடைய சூட்சுமசரீரமுஞ் சூட்சுமபூதமுங்கூடிச் சமஷ்டிபுத்தியால் இரண்ணிய கெர்ப்பமென்றும் ஈஸ்வரனுக்குச் சூட்சுமசரீரமென்றுஞ் சொல்லப்படும் இந்தச்சூட்சுமசரீரத்துடன்கூடுவதாய்மாயாப்பிரதிபிம்பருக்கு அந்தரியாமியென்கிறபேர்மாறி சூத்திரான்மாவென்கிறபேர்வந்தது எங்குந் தாதான்மியமாயிருந்தபடியினுல் இவனைச் சமஷ்டியென்பது அவனவன் சரீரமாத்திரந் தாதான்மியமா யிருக்கிறபடியினுல் சீவர்களெல்லாரும் வியஷ்டியென்பது சீவர்களுக்குப் யோகமும் போகத்திற்கிடமான தூலசரீரமு முண்டாகக்கடவதாகத் தாமதகுணமாயிருக்கிற வாகாசாதிகளைப் பஞ்சீகரணம்பண்ணினுர் பஞ்சபூதத்தை யொவ்வொன்றை யிரண்டாக்கி முதற்பாதியைந்தையும் நான் காக்கித்தனக்கன்னிய பூதங்களுடைய விரண்டாம்பாதியைந்துடனே தன்னம் சத்துடனே கூட்டாமல் மற்ற நான்கு பூதங்களுடனே கூட்டுவது பஞ்சீகரணம் இந்தப்பஞ்சீகரணம் பண்ணின தூலபூதங்களிலண்டங்களும் புவனங்களும் நான்கு வகை தூலசரீரங்களும் போகமுதலானதுமுண்டாயிற்று இந்தத் தூலபூத பௌதீகங்களெல்லாம் ஒருமைப்பாடா யீஸ்வரஸ்தூலசரீரமென்றும் விராட்டென்றுஞ் சொல்லப்படும் இத்தோடுகூடின ஈஸ்வரனுக்குச்சூத்திரான்மாவென்கிறபேர்மாறி வைசுவானரனென்கிறபேர்வந்தது தைசதர்களெல்லாந் தூலசரீரங்களுடன்கூடி விசுவர்களாய்த் தேவர்களென்றுந் திரியக்கென்றும் மனிதரென்றும் பேராகி ஈஸ்வரன்சொன்னபடியே கன்மம் பத்தி ஞானமென்கிற காண்டத்திரய வனுஷ்டானம்பண்ணி அந்தர் முகமாகாமற் பகிர்முகமானுர்கள் எல்லாரு மிப்படி ராகத்துவேஷ பாராய்ப்பண்ணின கருமவசத்தாற் ஜெனனபந்தங்களில் ஆற்றிற் சுழிவழியே சுற்றுகிற புழுப்போலச் சுழன்றுர்கள் தயாளுவாயிருக்கிறவன் அந்தப்புழுக்களைக் கரையேற்றினவுடனே மரத்தினிழலிற் புழுசுக மடைந்தாப்போல சத்கர்ம பரிபாகத்தாற் குருரூபமாய்வந்த ஈஸ்வரனுடைய ஞானவுபதேசத்தால் அபூர்வமா யொருவன் பஞ்சகோச விவேகத்தைச் செய்து முத்தியடைவன் இந்தமட்டும் மாயைகற்பித்தவடைவு.

௪-கை. பஞ்சகோசமாவதேது இதுகளுடன் ஆன்மாவிற்குத் தாதான்மியமெப்படி இதைத் தானல்லவென்று தள்ளும் விவேகமேதென்னில்.

உ-ம். ஸ்தூலசரீரமே யன்னமயகோசம் பிராணனுங் கன்மேந்திரிய மூங் கூடினது பிராணமயகோசம் மனதுங் கன்மேந்திரியமுங் கூடினது மனோமயகோசம் புத்தியும் ஞானேந்திரியமுங் கூடினது விஞ்ஞானமயகோசம் காரணசரீரமே யானந்தமயகோசம் நீலாதி வஸ்திரத்தோடு கூடிய வண்ணமாய்த் தோற்றுகிற ஸ்படிகம்போல் ஆன்மாவாயிருக்கிறதானும் பஞ்சகோசங்களுடன் கூடி அதுகளே தானாய்த்தோற்றுகிறது தாதான்மியம் அன்வயவிதிரேகமே யிதைத்தள்ளுகிறவிவேகம்

ச-கை. அன்வயமாவதேது விதிரேகமாவதேது இந்த விவேகத்தாற் பஞ்சகோசத்தைத்தள்ளி யப்பாற்பட்டிருக்கிற பிரமமே நானென்றறியும் வழியெப்படியென்னில்.

உ-ம். தானாகவிளங்கின தூலசரீரந் தோற்றாத சொற்பன வவத்தையிற்றான் தோற்றுகிறது அன்வயம் தான்தோற்றுகிலுந் தூலசரீரந் தோற்றாததே விதிரேகஞ் சூட்சுமசரீரந் தோற்றாத சுழுத்தி யவத்தையிற்றான் தோற்றுவதே யன்வயம் தான்தோற்றுகிலும் லிங்கசரீரந் தோற்றாததே விதிரேகம் இந்தச்சூட்சுமசரீரந் தோற்றாமற் றள்ளப்பட்டதே மூன்றுகோசமுந் தள்ளப்பட்டது சுழுத்தி தோற்றாத சமாதியிற் றான்தோற்றுவதே யன்வயம் தான் தோற்றுகிலுஞ் சுழுத்தி தோற்றாம லிருக்கிறதே விதிரேகம் இது அன்வயவிதிரேகம் முஞ்சிப்புலலிற் பக்கத்து மட்டைகளைத்தள்ளி நடுவி லாணியெடுக்குமாறுபோல அன்வயவிதிரேக புத்தியினாற் றானாய்வழங்கின பஞ்சகோசத்தைத் தள்ளி யப்பாற்பட்ட பிரமமே நானென் றுள்ளபடி யறிவதே அறியும்வழி.

ச-கை. சீவனுக்கும் பரமான்மாவிற்கும் இப்படியுத்தியாற்சாதித்தவேகத்துவத்திற்குப் பிரமாணமேதென்னில்.

உ-ம். சாமவேதமகாவாக்கியமே பிரமாணம்.

ச-கை, அந்தவாக்கியத்திற் கர்த்தமேதென்னில்.

உ-ம். முன்னாள் சுவயம்பாகியா யிருந்தவனைக் காலாந்தரத்தில் துணைத்தனம்வந்து தண்டிகையில்வரக் கண்ட விடத்தில் அவனெயிவனென்கிறசொல் அவனென்கிற சத்தத்திற் சட்டுவமுதலான வுபாதிலட்சணமும் இவனென்கிற சத்தத்தில் தண்டிகை முதலான வுபாதிலட்சணமும் விட்டு இரண்டு சொல்லிலும் சரீரமாத்திரம் அர்த்தமாகக்கொண்டு இவனே அவன் அவனேயிவனென்று ஒருவனையே புறைபறக் காட்டுகிறாப்போலச் சகத்திற் குபாதான காரணமான பிரமம் மாயாசபளிதமான ஈஸ்வ

ரன் தற்பரிணுமமான அவருடைய சரீர மிம்மூன்றையுங்காட்டும் தற்பதம் மலிசத்துவமான அவித்தையாப்பிரதிபிம்பன் அவனுடைய சரீரவுபாதி யிவைகட்கதிட்டான கூடஸ்தர் இம்மூன்றையுங்காட்டுந்தொம்பதம் இவர்களிருவரையுமொருவனென்கிற மகாவாக்கியம் இரண்டிடத்திலுள்ளவுபாதியும் உபாதியுடன்கூடின சைதன்னியங்களையும்விட்டு அகண்டமாயிருக்கிற சச்சிதானந்த மொன்றைத்தானே புணையறக்காட்டும் அசிபதமானவிட்டுவிடாத லட்சணை.

ச-கை, இப்படிக்கொத்த ஞானம் வரத்தக்கதாகக் குரு சன்னிதானத்திற் செய்காரிய யேதென்னில்.

உ-ம். சிரவணுதிகளே செய்காரியம்.

ச-கை, சிரவணமுதலான செய்காரிய மெத்தனைவிதம் அதுகட் சிலட்சண மேதென்னில்.

உ-ம் சிரவணுதி நான்குவிதன் சகலவேதாந்தங்கட்கும் ஆறுலிங்கத்தா லர்த்தவிசாரம்பண்ணிப் பிரமத்திற் ருற்பரியமாய்க் காண்கிறதே சிரவணம் யுத்தியாலனவரதஞ் சித்திக்கிறதே மனனம் இப்படி யிருவகையாலும் தெளிந்தபொருளின் மனதை யேகாக்கிரமாய் வைப்பதே நிருத்தியாசனம் தியான்ம் பண்ணுகிறவனையுந் தியானத்தையு மிழந்து தியானிக்கப்படுகிற வஸ்துமாத்திரமாயிருக்கிற சித்தமேசமாதி.

ச-கை. இப்படிவந்த சமாதிக்குப் பலனேதென்னில்.

உ-ம். அனாதிகால சஞ்சிதகர்மநாசமுந் தன்னை நிர்மலம் பண்ணுகிற தர்மமும் வாசனுட்சயமும் அபரோட்சஞானமும் இந்நான்கும் பிரயோசனம்.

ச-கை. இந்த அதீதசுகசமாதியிலிருக்கிறவன் அப்படியிராமல் பிரபஞ்சத்தில் விழிப்பானேனென்னில்.

உ-ம். பிராரத்வ சேடத்தினுல்.

இந்தத் தத்வாதத்வ விவேகத்தைப் பலப்படவிசாரித்து மனதைச் சமாதியிலே லயம்பண்ணினவன் சகல சங்சாரத்தையும்விட்டுப் பரப்பிரமமாவான்.

தத்வாதத்துவவிவேகம்

முற்றிற்று.

௨

இரண்டாவது

# பஞ்சபூதவிவேகம்.

வித்தியாரண்ணியசுவாமிகள் தாமனுபவித்த அத்துவிதத்தின் வ
ழியே சத்துத்தானே இத்தனையுமாயிருக்கிறதெனகிற சாமவேதார்த்தத்
தைப் பஞ்சபூத விவேகத்தினால் வெளிசெய்கின்றார்.

ச-கை, சத்தென்பதேது இத்தனையென்பதேதென்னில்.

உ-ம். சத்தென்பது அத்துவைதப்பிரமம் இத்தனையென்பது பஞ்ச
பூதமும் அதினுடைய குணங்களைந்தும் அதையறிகிற இந்திரி
யங்களைந்தும் அதற்குக் காரியமாயிருக்கும் இந்திரியங்களைந்து
ம் அந்தக் கரணமொன்றும் நானென்கிற வொருவனும் இத்த
னைவகையுங் கூடினதே யித்தனை யென்று சொல்லப்பட்டது.

ச-கை. இந்தப் பஞ்சபூதமைந்திற்குள் எந்தெந்தபூதத்திற் கெந்தெந்த
க்குணமுண்டென்னில்.

உ-ம். ஆகாயத்திற்குக் குணமொன்று வாயுவிற்குக் குணமிரண்டு தே
யுவிற்குக் குணமூன்று அப்புவிற்குக் குணநான்கு பிருதிவுக்கு
க் குணமைந்து.

ச-கை. இந்தப்பூதங்களின் இந்தக்குணத்தைப் பகுத்துக்காட்டுமென்
னில்.

உ-ம். பிரதித்தொனியொன்றுமே ஆகாயத்தின்குணம் சீறுசீறென்ற
டிக்கிறசத்தமும் சீதோஷணமாகவருகிற பரிசமும் வாயுவின்
குணம் பகபகவென்று சொலிக்குஞ்சத்தமும் சுடுகிறபரிசமும்
பிரபையென்கிறரூபமும் அக்கினியின்குணம் களகளவென்கி
றசத்தமும் குளிர்ந்தபரிசமும் சுக்கிலரூபமும் மதுரரசமும்
அப்புவின்குணம் கடகடவென்கிறசத்தமும் கடினபரிசமும் ப
ஞ்சவன்னரூபமும் அறுசுவைரசமும் நிற்கந்த துற்கந்தமும்
பிருதிவியின்குணம்.

ச-கை, இதற்குப்பிரமாணமேதென்னில்.

உ-ம். சுரோத்திரந் தொக்கு சட்சு சிங்குவை யாக்கிராணமென்கிற
இந்திரியங்களாலனுபவிக்கப்படுகிறபிரத்தியட்சமேபிரமாணம்

ச-கை, இவ்விந்திரியங்களுக் கிப்படி வெளிநாட்டந்தானே உண்
டாமுண்டோவென்னில்.

உ-ம். செவியைப்புதைத்தா லுள்ளிரைச்சல் கேட்கையினாலுங் குடி
க்கையிலும் பொசிக்கையிலும் உள்ளே சீதவுஷ்ணப்பரிச மறி

கையினாலும் கண்ணை மூடினால் உள்ளிருட்டு ஏறப் தெரிகையி னாலும் வாந்திபண்ணும்போது உள்ளில் ரசகந்தங்களையறிகை யினாலும் இந்த விந்திரியங்கட்கு உண்ணாட்டமுமுண்டு.

ச-கை. இதற்குச்சகாய விந்திரியமேது அதற்குத்தொழிலேதென்னில்

உ-ம், வாக்கு பாணி பாதம் பாயுரு வுபஸ்தமென்கிற கன்மேந்திரிய மைந்துஞ் சகாயவிந்திரியம் வசனதானகமன விசற்க ஆனந்த மும் அதின்தொழில்.

ச-கை. இனி அந்தரிந்திரியமானமனதும் அதன்தொழிலுமேதெனில்.

உ-ம், பஞ்சேந்திரியத்திற்கு மிராசாவாயிந்திரியத்தின்வழியாய் குண தோஷம் விசாரிக்கிறதா யிருதயகமலத்தி லிருக்கிறது மனது வைராக்கியம் பொறுமை முதலான சாத்விகப் பிரவிர்த்தியுங் காமக்குரோதமுதலான ராசதப்பிரவிர்த்தியுஞ் சோம்பல் நித் திரை முதலான தாமதப்பிரவிர்த்தியும் அதன்தொழில்.

ச-கை. இந்த மூவகைப்பிரவிர்த்திக்கும் பலனேதென்னில.

உ-ம். சாத்வீகத்தினால் புண்ணியம்விளையும் ராசதத்தால் பாவம்வி ளையும் தாமதத்தா லிவ்விருவகையுமற்று வீண்காலம்போம்.

ச-கை, இப்படி பதினோரிந்திரியத்தினாலும் யுத்தியினாலுஞ் சாத்திரத் தினாலு மறியப்பட்ட சகலசெகத்துஞ் சத்துத்தானே யென்று லதுகூடாதென்னில்.

உ-ம். சிருஷ்டிக்குமுன் சகலசெகத்துஞ் சத்தாயிருந்தபடியினால்சிரு ஷ்டிக்குப்பின்பு பதினோரிந்திரியங்களா லறியப்பட்டு கற்பிக்க ப்பட்ட நாமரூபத்தோடுங் கூடியிருக்கிற சகலசெகத்தும் விசா திக சுசாதிக சுவகத பேதமற்ற சத்தேயொழியவேறல்ல.

ச-கை, விசாதிகமாவதேது சுசாதிகமாவதேது சுவகதயேதமாவதேது இந்தசெகத்து இம்மூன்றுமல்லவென்கிற தெப்படியென்னில்.

உ-ம். மரத்திற்குக் கல்லுவிசாதிகம் மறுமரஞ் சுசாதிகம் அதன்இலை பூ காய் சுவகதபேதம் இந்தப்படி சத்திற்குச் செகத்து அசத் தாகாதபடியினால் விசாதிகமென்னக்கூடாது பிரதிகத்தில்லாத படியினால் சுசாதிகமென்னக்கூடாது நிரவயவ மானபடியினால் சுவகதபேதமென்னவுங்கூடாது இவையெல்லாஞ் சத்துத்தா னேயென்று சித்தாந்தம்.

ச-கை. எல்லாம் அசத்துத்தானே யாகட்டுமென்னில்.

உ-ம், சூரியன் அந்தகாரத்தோடு கூடியுமிரான் அந்தகாரமுமல்ல வென்கிறாப்போலச் சத்தேயசத்தானாற் சத்தாகவுமாட்டாது யத்தோடு கூடியிருக்கவுமாட்டாது.

ச-கை. சத்தைத்தவிர வொன்றுமில்லாவிட்டால் சிருஷ்டிக்குமுன்னெல்லாஞ் சத்தாயிருக்குமென்று வேதவாக்கியஞ் சொல்லுவானேனென்னில்.

உ-ம். காலவாசனையுடனே கூடியிருக்கிற சீஷனைக்குறித்துச் சொன்னதேயல்லாது உண்மையல்ல ஆகையால் சங்கையுமுத்தாமுந்துவைதத்திலல்லாமல் அத்துவைதத்திலில்லை.

ச-கை. உண்மைதானேதென்னில்.

உ-ம். அசையாமற் கெம்பீரமாய்ப் பிரபையுமல்லாமல் இருட்டுமல்லாமல் வாக்காலு மனதாலு மெட்டாததாயிருக்கிற பிரமமே சத்து.

ச-கை, பிருதிவுமுதலானது பரமவணுவாய்ப் போனதால் இல்லையென்று சம்மதித்தேன் பிரளயத்திலாகாசமெப்படி யில்லாமற்போமென்னில்.

உ-ம். அத்தியந்தம் நிற்சகத்தாயிருக்கிற ஆகாசமும் உன் புத்தியிற்பட்டாற்போல நிராகாசமாயிருக்கிறசத்து நம்முடையபுத்தியிற்படும்.

ச-கை. சத்தாயிருக்கிற சுத்தசைதன்னியத்தை எப்போ தனுபவித்தீரென்னில்.

உ-ம். நிற்சிந்தையா யிருக்கிறவேளையில் அனுபவித்தோம்.

ச-கை, அப்போது சத்தென்கிற புத்தியுமில்லையேயென்னில்.

உ-ம். அது நமக்குஞ் சம்மதிதான் நிஸ்சிந்தையாயிருந்த வவஸ்தைக்குச் சாட்சியாயிருந்தோமென்கிற வனுபவமேபோதும் ஆகையால் மனோவியாபாரமற்றவேளையில அலைச்சலறசாட்சிமாத்திரமா யிருக்கிறாப்போல மாயாப்பிரவிர்த்திக்கு முன்னுஞ்சத்திருக்குமென்றறி.

ச-கை. இந்த மாயைக்கு லட்சணமேதென்னில்.

உ-ம். சத்துமல்ல அசத்துமல்ல உற்றுப்பார்க்கி லில்லாமற்போகிறதே லட்சணம்.

ச-கை, சத்தைவிட மாயாசத்தி யில்லாவிட்டால் அசத்தென்கிறதே லட்சணமாகட்டுமென்னில்.

உ-ம். அசத்துமாயாகாரியமல்லாமற் ஸ்வரூபமல்ல கட்சத்திமண்ணிலென்றாலும் ஏகதேசமாயிருக்கிறாப்போல மாயாசத்தியும்பிரமத்தி லேகதேசமாயிருக்கின்றது.

ச-கை. பிரமத்தினிடத்தி லிருக்கிறமாயை யென்னத்தைச் செய்யுமென்னில்.

உ-ம். சுவரைப்பற்றியிருக்கிறவன்னஞ் சுவரைத்தானே பலவிதசித்திரமாய்ப் பேரிட்டாற்போல் பிரமத்தைப்பற்றியிருக்கிற மாயையும் நிர்விகாரத்தில் விகாரத்தைக்கற்பிக்கும்.

ச-கை, மாயையாற் கற்பிக்கப்பட்ட விகாரங்களேதென்னில்.

உ-ம். முந்தினவிகாரம் ஆகாசம் அதற்குலட்சணமவகாசம்.

ச-கை. சத்திற்குச் சுபாவமெத்தனை ஆகாசத்திற்குச் சுபாவமெத்தனையென்னில்.

உ-ம். உண்டென்றதுமாத்திரமே சத்திற்குச்சுபாவம் உண்டென்பதுஞ் சத்தமும் ஆகாசத்திற்குச் சுபாவஞ் சத்திற் சத்தமில்லை சத்துஞ்சத்தமு மாகாசத்திலுண்டு.

ச-கை. சத்துதானே யாகாசமானால் சத்தின்குணமாகாசமென்று இசா சொல்லவேண்டியிருக்க ஆகாசத்தின்குணஞ் சத்தென்றுவாதிகள் சொல்லுவானேனென்னில.

உ-ம், பிரமத்தினிடத்தில் ஆகாசத்தைக்கற்பித்தமாயை குணகுணிகளையும் தாறுமாறாய்த் திருப்பிவைத்தது அப்படி பிரமிக்கிறது மாயைக்குச்சுபாவம்.

ச-கை. இது தெளியும்வழியேதென்னில்.

உ-ம், வேதாந்தவிசாரம்பண்ணினால் சத்தினிடத்திலாகாசங் கற்பிதமானபடியால் சத்தைப் பிரதானமாகவும் ஆகாசத்தை யப்பிரதானமாகவு மறியப்படும்.

ச-கை. சத்தைத்தவிர புறம்பாயிருக்கிற வாகாசத்தை யசத்தென்றறிவதெப்படியென்னில.

உ-ம், ஆகாசமுண்டென்னுமிடத்திலுண்டென்கிறசொல்லால்விவேகித்துப்பார்த்தால் காட்டப்பட்டபொருளைத்தவிர ஆகாசமில்லாதபடியால ஆகாசம் சத்துதான்.

ச-கை. ஆகாசந்தோற்றுகையி லில்லையென்கிற தெப்படியென்னில்,

உ-ம். யாதொன்று சத்தைத்தவிர அசத்தா யிருந்து தோற்றுதோ அதெல்லாஞ் சொற்பனபதார்த்தம்போலமித்தை.

ச-கை. இப்படி யாகாசத்திற் சத்தையும் அசத்தையும் பிரித்துக்காண்கிறபோது ஆகாசம் மித்தையாவானேனென்னில.

உ-ம். கற்பிதமாய் மாயாகாரியமானபடியால் காரணம்போல மித்தையாய் வகுப்பற்றது.

ச-கை, பொய்யாயிருக்கிற வாகாசமும் மெய்யாயிருக்கிறசத்தும் பொருந்தி யேகமாய் சகலருக்குந் தோற்றுகையாற் பிரித்துக்காண்கிற அடைவெப்படியென்னில்,

உ-ம், சாதிவியத்திகள்போலவும் குணத்திரவியங்கள்போலவும் உட லுயிரும்போலவுஞ் சத்தும் ஆகாசமும்வேறு.

ச-கை, இப்படி யறிந்தாலுஞ் சத்துவேறு ஆகாசம்வேறென் றெதினு லறியப்படவில்லையென்னில்,

உ-ம். முந்திப் புத்தியே காக்கிரக மாகாதபடியாற் சந்தேகத்தாலேற வில்லைச் சாவதானமாய்ப் பிரமாணமூலமாய் விசாரித்தா லே றும்.

ச-கை, விசாரிக்கவனுக்குப் புத்தியிலெப்படி யிருக்குமென்னில்.

உ-ம், சத்தாயிருக்கிறவஸ்துவே அகண்டமென்றும் ஆகாசம் பரிச்சி ன்னமித்தையென்றும் புத்தியிற் றிடப்பட்டிருக்கும்.

ச-கை. இப்படி யறிந்தவனுலகத்தாரோ டெப்படிபேசுவனென்னில்.

உ-ம். சத்தைப்பிடித் தாகாசமென்றுபேசுகிறவனையும் ஆகாசஞ்சின் மாத்திரமென்று பேசாதவனையுங் கண்டவுடனே யாச்சரியப் படுவன்.

ச-கை. இப்படி யாகாசமித்தையென்றும் சின்மாத்திரமே சத்தியமெ ன்று மறிந்தபின்பு செய்காரியமேதென்னில.

உ-ம். இந்த நியாயத்தின்படியே வாய்வு முதலான பூதங்களிலுஞ் சத் துபரிபூரணமானபடியால் காண்பிக்குதென்றும் ஆகாசம பரி ச்சின்னமானபடியால் காண்பிக்கவில்லையென்றும் பூதங்களெ ல்லா மித்தையென்றுந் திடப்படுத்துவது.

ச-கை. பூதங்கள் பரிச்சின்னமா யெப்படி கற்பிக்கப்பட்டது பூதங்க ளுக்குச் சுபாவகுணமென்ன அன்னிய குணமென்னவென்னில.

உ-ம். சத்தினிடத்திலேகதேசகற்பிதம் மாயை மாயையினிடத்திலே கதேசகற்பிதம் ஆகாசம் ஆகாசத்திலேகதேசகற்பிதம் வாயுவு வாயுவுண்டென்கிறது சத்தினங்கிசஞ் சத்தைவிட்டால் வாயு வுகாணமற்போகிறது மாயையினங்கிசம் சத்தமாகாசவங்கிசம் ஆக இம்மூன்றும் வாயுவுக்குக்காரணம் தனக்குச் சுபாவகு ணம் பரிசமித்தனைகளிலுஞ் சத்தைப்பகுத்தால்காணதேபோ கிறபடியினால் வாயுவு மித்தையென்றறி,

ச-கை. வாயுவு மித்தையென் றறிந்தபின் செய்காரியமேதென்னில்.

உ-ம். வாயுவில் பத்திலொன்றாய் கற்பிக்கப்பட்ட அக்கினியுமித்தை யென்றே பாவனைபண்ணவேண்டும் அக்கினி யுண்டென்கிறது சத்தினுடைய அங்கிசஞ்சத்தைவிட்டா லில்லாதேபோகிறது மாயையினுடைய அங்கிசஞ் சத்தமாகாசத்தினங்கிசம் பரிசம் வாயுவினங்கிசம் ஆகக்காரணகுணம் நான்கும் அக்கினிக்குச்

சுபாவகுணம் ஆகும் இத்தனையுஞ் சத்தைத்தவிர வேறல்லவெ ன்று காண்கிறதே உபாசனைபண்ணுகிறது.

ச-கை. அக்கினி மித்தையென்றறிந்தபின் செய்காரியமேதென்னில்.

உ-ம். அக்கினியிற் பத்திலொன்றாயிருக்கிற அப்புவுக்கு ரசத்தோ டேகூடி யாறுகுணமென்றும் அப்புவிற் பத்திலொன்றாயிருக் கிறபூமிக்குக் கெந்தத்தோடுங்கூட வேழுகுணமென்றும் பூமி யிற் பத்திலொன்றிற் கற்பிதம் பிரமாண்டமென்றும் பிரமாண் டத்தில் கற்பிதம் புவனங்களென்றும் புவனங்களில் கற்பிதஞ் சரீரங்களென்றும் அறிந்து சத்தைவிட்டால் இதுகளுக்குச் சொரூபங்க ளில்லாதபடியினால் சின்மாத்திரமென்று காண்கி றதே செய்காரியம்.

ச-கை, இப்படி தொய்தமெல்லாம் மாயாகற்பிதமென்று அனுதாவுப ண்ணினால் தோஷமில்லையோவென்னில்.

உ-ம், சாங்கியன் கணாதன் யௌத்தன் முதலானபேர்கள் செகத் பேதத்தைத் தானே மெய்யென்றுசொல்லி நிச்சங்கமான அத் துவிதத்தை யனுதாவுபண்ணிப் போட்டபிறகு பிரத்தியவாய மில்லையென்றால மாயாகற்பிதமாயிருக்கிற தொய்தத்தை யவ மதிப்பு பண்ணியிருக்கிற நமக்குப்பிரத்தியவாயமுமில்லைகிலே சமுமில்லை,

ச-கை, இப்படி தொய்தத்தை யவமானம்பண்ணினால் பிரயோசனமே தென்னில,

உ-ம். தொய்தத்தில் அனுதாவுகிடமானால் அத்துவிதத்தில் புத்தி திடப்பட்டுச் சீவன்முத்தனாகலாம்.

ச-கை. இப்படி சத்தையும் அசத்தையும் பகுத்தறிந்தால் சீவன் முத் தியெப்போதுவருமென்னில்.

உ-ம், திடப்படவறிந்தவன்றேமுத்தி.

ச-கை, பிராணன்விடும்போதந்தநிலை வாவேண்டாமோவென்னில்.

உ-ம். நாள்தோறுங் கற்றபோதம் சொற்பனஞ்சுழுத்தியில மறந்திரு ந்தாலும் சாக்கிரத்தில் தன்னிலே முன்னிற்றிருப்போல பிரா ணன்போகிற மூர்ச்சையில் மறந்தாலும் ஞானம்போகாது.

ச-கை. கற்றபோதம் பின்னையெதினால் மறையுமென்னில்.

உ-ம். வேதாந்தத்திற்கு மேற்பட்ட பிரமாண மொன்றுண்டானால் அதினால் போகிறதேயல்லாமல் சுழுத்தி மூர்ச்சையிற்போகிற தல்ல அதையினால் அத்துவிதஞானத்திற் கொன்றினாலும்வா தையில்லை.

ஆகையினால் இந்தப்படி பஞ்சபூதவிவேகத்தைச்செய்து சகலபிர பஞ்சத்தையுஞ் சின்மாத்திரமாய்க்கண்டு அத்துவிதநிலையைப்பெற்ற வனே சீவன்முத்தன் இந்தப்பிரமாகாரநிலைபெற்றவனை ஒருமோகமுந் தொடாதென்று கீதையில் பகவானுஞ்சொல்லியிருக்கின்றார்.

பஞ்சபூதவிவேகம் - முற்றிற்று.

---

மூன்றாவது

## பஞ்சகோசவிவேகம்.

வித்தியாரண்ணியசுவாமிகள் ஏழைகளிடத்தில்வைத்த கிருபையி னால் பஞ்சகோசவிவேகத்தையறிந்து எளிதாய் பிரமத்தையடையச சொல்லுகின்றார்.

ச-கை, தயித்திரியமென்கிற வுபநிடத்திலே குகைக்குள்ளிருக்கும் பிர மத்தையறிந்தால முத்தியுண்டென்றுசொன்னதற் கர்த்தமே தென்னில்.

உ-ம், தேகத்திற்குட்பட்டது பிராணன் பிராணனுக்குட்பட்டதுமன து மனதிற்குட்பட்டது விஞ்ஞானம் விஞ்ஞானத்திற் குட்பட் டது ஆனந்தம் இந்த ஐந்துமே குகையென்று சொல்லப்பட் டது இதற்கன்னியமா யிருக்கப்பட்டவர் ஆத்மா.

ச-கை. இந்த வைந்துந்தானே ஆத்மாவென்று சகலவாதிகளும் லௌ கிகருஞ் சொல்லுவார்கள் அதைத்தள்ளுவதெப்படியென்னில்

உ-ம். பிதாபொசித்த அன்னத்தினால்வந்த வீரியத்தி னுண்டாகையி னாலும் அன்னத்தா லவர்த்திக்கையினாலும் அன்னமயகோச மாகிற செடத்தைத் தானென்னக்கூடாது தேகத்திற்குள்ளிரு ந்த இந்திரியங்களை யேவுகிறவனைப்போலத் தாரதன்மியத்தி னால் திரிஸ்யனாயிருக்கிற பிராணமயனையுந் தானென்னக்கூடா து தேகத்தை நானென்கிறபுத்தியும் வீடுமாடுகளில்என்னுடை ன்கிற வபிமானத்தையும் பண்ணிக்கொண்டு காமக்குரோதமு தலான அவத்தைகளிலே யுழலக்கண்ட மனோமயனையுந் தா னென்னக்கூடாது காய்ச்சின இரும்பு உண்டைபோலே சாக் கிரத்தில் நகசிகைபரியந்தங் கலந்துநின்று சுழுத்தியில் அணை ந்துபோகிற விஞ்ஞானத்தையுந் தானென்னக்கூடாதுபுண்ணி யபோகத்திலுஞ் சுழுத்தியிலும் அந்தர்முகமா யானந்தப்பிரதி விம்பத்தோடேகூடிச் சற்றுநேரத்தில் நட்டமாகக்கண்ட ஆன ந்தமயனையுந் தானென்னக்கூடாது.

ச-கை. இப்படி இந்த ஐந்துமே ஆத்மா வல்லவென்றுபோனால் இதற்கன்னியமாயிருக்கிற ஆத்மாவைக்காணோமேயென்னில.

உ-ம். இந்தப் பஞ்சகோசங்களை அத்தற்குச்சொன்னலட்சணத்தோடே தோறறுவித்து அப்பாலினியொன்றுங்காணோமென்றிருக்கிற விம்பசைதன்யமே ஆத்மா.

ச-கை. இந்தப்பஞ்சகோசங்களை ஆத்மாகண்டால் ஆத்மாவைக் காண்கிறவராரென்னில்,

உ-ம். சுதசித்த சைதன்னியமாயிருக்கிற ஆத்மா செடங்களையெல்லாமறியலாம் ஞானறிவி சொரூபமாகையினால் ஒன்றினாலுமறியப்படாது,

ச-கை, அறிவாயிருந்தாலும் ஒன்றினாலறியப்படாதபோதே ஆத்மாவறிவென்கிறதெப்படியென்னில்.

உ-ம், வெல்லத்திற்குத் தன்னுடையரசங் கன்று லனுபவிக்கப்படாவிட்டாலும் அன்னியமாயிருக்கிற விந்திரியங்களினால் அனுபவிக்கப்பட்டதுகொண்டு மதுரஞ் சுபாவமென்கிறதுபோலச் சகலத்தையுமறிகிறவர் ஆத்மா அறிவென்கிறதற்குச் சந்தேகந் தேவையில்லை.

ச-கை. அறியப்பட்டது பிரமமோ அறியப்படாதது பிரமமோவென்னில.

உ-ம். இந்த இருவகையுமல்ல இதற்கப்பாற்பட்டதுபிரமம்.

ச-கை. இப்படியிருந்தால் அவரையறிகிறதெப்படியென்னில்.

உ-ம். எனக்கு நாக்குண்டோ வில்லையோவென்கிறசொற்போல் அறிவாயிருந்தும் அறிவு எப்படியிருக்கிறதென்று கேடபது உனக்கு லச்சையில்லையோ.

ச-கை. அஞ்ஞானியாயிருக்கிறவனுக்குப் பிரம நிச்சயம்வர வழிபாடேதென்னில.

உ-ம், அறிவினால் கற்பித்ததெல்லாஞ் செடமானாலும் நித்தியபோதமாயிருக்கிறவறிவே பிரமமென்று காணவேண்டும்.

ச-கை, இந்தவறிவாயிருக்கிற ஆத்மாவே பிரமமானால் சச்சிதானந்தலட்சணத்தில் சித்தில்லாத லட்சணமாயேன்சொல்லவில்லையென்னில்.

உ-ம், இப்படி அறிவாயிருக்கிற நான் எப்போதும் உண்டென்றிருக்கையினாலும் ஒருக்காலத்திலு மில்லையென்று போகாதபடியினாலும் ஆத்மா சத்தென்பதுகூடும் மாயாகற்பிதமாயிருக்கிற காலதேசவஸ்துக்களை ஆத்மா அறிகையால்சித்தென்பதுகூடும்

கூட்டுத்தொருளானபடியினால் இந்த மூன்றினாலும் வாதையற்றது ஆனந்தமென்பதுகூடும்.

ச-கை. இப்படிக்கொத்த ஆத்மா எப்படிக்கொத்தவனென்னில்.

உ-ம், இந்திரியங்களுக்கு விஷயமாகாதபடியினால் இப்படிக்கொத்தவனென்று சொல்லவுங்கூடாது தானாயிருக்கிறபடியினால் அப்படிக்கொத்தவனென்றும் பரோட்சமாய்சொல்லவுங்கூடாதுஇவ்விருவகையினாலுஞ் சொல்லப்படாதவனே ஆத்மா.

ச-கை. இப்படி நிர்ணயமானால் இவன் சீவனென்றும் இவன் ஈஸ்வரனென்றும் மகாவாக்கியத்தினால் இருவருக்கும் அயிக்கியம்வந்தால் மோட்சமென்றுஞ்சொன்ன வேதாந்தவாக்கிய மெப்படி கூடுமென்னில்.

உ-ம். சகலமு மாயாகற்பிதவுபாதியினால் கூடுகிறதேயல்லாமல் சுபாவத்தி லெப்பேச்சுக்குமிடமில்லை.

சு-கை. மாயையினால் தானெப்படி கூடுமென்னில்.

உ-ம். ஒருபுருடனுக்குப் புத்திர பௌத்திரர்களைக்குறித்துத் தகப்பன் பாட்டனென்றுவந்த இரண்டு நாமமும் அந்த வுபாதியில்லாவிட்டால் இல்லாதேபோகிறதுப்போல் மாயை யவித்தையென்கிற இரண்டுவுபாதியினாலுஞ் சீவனீஸ்வரனென்றுஞ் சொல்லப்பட்ட ஒருபிரமந்தானே யுபாதிமித்தையென்றறிந்தவுடனே நாம் சீவனுமல்ல ஈஸ்வரனுமல்ல நாம் பிரமந்தானென்கிற வயிக்கியம்வரலாம்.

சு-கை. இப்படிக்கொத்த ஞானத்திற்குப் பலமேதென்னில்.

உ-ம். இப்படி ஆத்மாவே பிரமமென்று பஞ்சகோச விவேகத்தினாற் பகுத்தறிந்தவன் பிரமத்திற்குச் சங்சாரமில்லையென்கிற வேதவாக்கியப்படிக்கு முத்தனாய்ப் பிரமமாகத் தானேயிருப்பன் இவனைக் காலத்திரயத்திலுஞ் சங்சாரந்தொடாது இதுவே பலம்.

இந்தப்பஞ்சகோச விவேகத்தை விசாரித்தவன் ஞானியாவான்.

பஞ்சகோசவிவேகம்-முற்றிற்று.

நான்காவது

# துவிதவிவேகம்.

வித்தியாரண்ணியசுவாமிகள் லோகானுக்கிரகமாய் துவித விவேகஞ் சொல்லுகின்றார்.

ச-கை. துவிதம் எத்தனைவிதமாயிருக்குமென்னில்.

உ-ம். ஈஸ்வரனால் சிருஷ்டிக்கப்பட்ட தொய்தமென்றும் சீவனாலே சிருஷ்டிக்கப்பட்டதொய்தமென்று மிரண்டாயிருக்கும்.

ச-ங்கை. அதெப்படியென்னில்.

உ-ம், பஞ்சீகரணம்பண்ணின ஸ்தூலபூத பௌதீகபரியந்தமுண்டான தத்துவமெல்லாம் ஈஸ்வரசிருஷ்டியென்று சொல்லப்படும் மேற்பட்ட சாக்கிரமுதலாக சீவன் முத்திபரியந்தமுள்ள வவத்தைகளுடைய கற்பனையும் அந்தந்த அவத்தையிலுள்ள வர்ணாச்சிரம லௌகிகமுறைமைமுதலான சகல கற்பனைகளுஞ் சீவசிருஷ்டியென்று சொல்லப்படும்.

ச-ங்கை. இதுகள் ஈசுரசிருஷ்டியென்று சொல்லப்படாதோவெனில்,

உ-ம். பிதாவினாலுண்டாக்கப்பட்ட பெண் அன்னியனாய் வந்தபோக பத்தாவுக்குப்போக கற்பனைக்கிடமானாப்போல் நல்லது பொல்லாதென்கிறது சீவகற்பனைக்கே யிடமாயிற்று ஆனையினால இவையெலலாஞ் சீவசிருஷ்டியென்றேசொலலப்படும்,

ச-ங்கை, ஈஸ்வரனுடையகாரியமும் சீவனுடையபோகமும் ஈஸ்வரசிருஷ்டியென்றுஞ் சீவசிருஷ்டியென்றுஞ் சொல்வ தெப்படியென்னில்,

உ-ம். ஈஸ்வரனாலே சிருஷ்டிக்கப்பட்ட மண் பெண் பொன் முதலானதுகளினால் இவை யெனக்கு அகப்பட்டதென்று ஒருவன் சந்தோஷித்தான் இது நமக்கு அகப்படாதே போச்சுதென்று ஒருவன் கிலேசப்படுகிறான் விரத்திவந்தவன் இரண்டையும் பார்த்து வுபேட்சையாயிருக்கிறான் இப்படி பிரியம் அப்பிரியம் உபேட்சையென்று மண்முதலானதுகளிலே காண்பிக்கிற மூன்றகங்காரங்களு மனோகற்பிதமான சீவசிருஷ்டியே யொழிய ஈஸ்வரசிருஷ்டியல்ல இந்த மூன்றகங்காரமுமற்றுத் தன் சுபாவத்திலிருக்கிறதே யீஸ்வரசிருஷ்டி மாதாவென்றும் உடன்பிறந்தாளென்றும் பாரியென்றும்வெகுவிதாகாரமாய்த்தோற்றுகிற ஒருபிண்டந்தானே யீஸ்வரசிருஷ்டி அதைக்குறித்துண்டான அனேகாகாரங்களும் அவ்வாகாரத்திற்கேற்க அவனவன் மனதில் சங்கற்பித்த சங்காரமுஞ் சீவசிருஷ்டி,

ச-ங்கை. பிராந்தியினாலேயுஞ் சொற்பனத்தினாலேயும் மனோராச்சியமாகவுங் கற்பிக்கப்பட்ட அந்தக்கரண கற்பனையெல்லாஞ் சீவசிருஷ்டியாகட்டும் சாக்கிரத்தில் பிரமாணத்தில் பிரமாதாவினாலறியப்பட்ட பிரமேயங்களெல்லாஞ் சீவசிருஷ்டியென்பது கூடாதென்னில,

உ-ம், லோகத்திலேயுள்ள சகலபதார்த்தங்களையுந் தோற்றுவிக்கிற வெய்யில் அந்தப் பதார்த்தத்தின்மேரில்விழுந்து அதுகளை யா

வரித்து அதினுடைய வாகாரத்தையடைந்து அதுகளைத் தோற்றுவிக்கிறுப்போலச் சாக்கிரத்திலும் பிரமாதாவினிடத்திலுமுண்டான பிரமாணப் பிரமேயத்தையடைந்து அதினுடைய வாகாரமாய் அதினுடைய அஞ்ஞானத்தைத்தள்ளி அதுகளைத் தோற்றுவிக்கையினால் இப்படி சங்கற்பிக்கப்பட்ட விருத்திப் பிரபஞ்சமெல்லாஞ் சீவசிருஷ்டியேயொழிய ஈஸ்வர சிருஷ்டியென்று சொல்லவேகூடாது இப்படி சித்தாந்தமாயுள்ள வளவில் பார்க்கிறவிடையமெல்லாஞ் சீவசிருஷ்டியும் ஈஸ்வர சிருஷ்டியுமாகக்கூடி இரண்டிரண்டாயிருக்கும் அதில் ஈஸ்வரசிருஷ்டியான விடையஞ் சிதாபாசனா லறியப்படும் சீவசிருஷ்டியான விடையஞ் சாட்சியில் பிரகாசிக்கப்படும் இப்படி சீவசிருஷ்டியும் ஈஸ்வரசிருஷ்டியும் பிறியப்பட்டுத் தோற்றினவுடனே சீவசிருஷ்டியைத்துடைத்து அடக்கவேண்டும் அதுவே மனோநாசமென்றும் வாசனாட்சயமென்றும் சீவன்முத்தி வருகிறதற்குச் சாதனமாகச்சொல்லப்படும்,

ச-சை, ஈஸ்வரசிருஷ்டி சீவன் முத்திவந்தாலுந் துடைப்படாமலிருக்கிறுப்போலச் சீவசிருஷ்டியு மிருந்ததனால் சாட்சியாகிய நமக்கானியேதென்னில்.

உ-ம். சுகதுக்காதி சமுசாரமெல்லாம் சீவசிருஷ்டி மூலமேயொழிய ஈஸ்வரசிருஷ்டியினால் சமுசாரமற்பமும் வருகிறதில்லை இந்த அர்த்தத்தில் சந்தேகமுள்ளபேருக்கு அன்வயவெதிரேகத்தினால் விளவிக்கிறோம் ஈஸ்வரசிருஷ்டி உண்டேல் சமுசாரமுமுண்டென்கிறது அன்வயயுத்தி ஈஸ்வரசிருஷ்டியில்லையாகில் சங்சாரமில்லையென்கிறது வெதிரேகயுக்தி யிரண்டுமொத்துவரவேண்டும் இது ஒத்துவராமல் எங்ஙனே தடைபட்டுதென்றால் சமாதி சுழுத்திமுதலானவேளையில் ஈஸ்வர சிருஷ்டியுண்டாயிருக்கையிலும் ஒருவருக்குஞ் சுகதுக்காதி சமுசாரமில்லை ஆனபடியினால் அன்வயயுக்தி தட்டுப்பட்டது பிரளயத்தில் ஈஸ்வரசிருஷ்டி யடங்கலும் வெதிரேகித்துப் போயிருக்கையிலேயும் ஒருத்தருக்குஞ் சீவன்முத்தி வராதபடியினாலும் வெதிரேகயுத்தியுங்கூடாது ஆகையினால் ஈஸ்வரசிருஷ்டி சமுசாரத்திற்கு மூலமென்னக்கூடாது சீவசிருஷ்டியே யாகவேண்டும் இதையும் அன்வயவெதிரேகத்தினால்திடம்பண்ணுவிக்கிறோம் சீவசிருஷ்டி யுள்ளவளவெல்லாஞ் சங்சாரமுண்டென்கிறதே அன்வயம் சீவசிருஷ்டி யொழிந்தவிடத்தில் சங்சாரமில்லையென்கிறதே வெதிரேகம் இந்த இரண்டுவிதமு மொத்துவந்ததே பிரமாணம் அதெங்ஙனேயென்னில் ஈஸ்வரசிருஷ்டி யானவே

லையில் சங்சாரமொழிந் திருக்கையினாலும் சொற்பனத்தில்சீவ சிருஷ்டிமாத்திரம் அன்வயித்துக் கொண்டு சுகதுக்காதி சங்சாரமும் அவிடத்தில் அன்வயிக்கக்கண்டோம் சமாதி சுழுத்திமுதலானவேளையில் ஈஸ்வர சிருஷ்டியான பிரபஞ்ச மிருக்கையிலும் சீவசிருஷ்டியான அந்தக்கரணகற்பனை வெதிரேகித்தது கொண்டு சுகதுக்காதி சங்சாரமும் வெதிரேகித்துக்காணப்பட்டது ஆகையினால் சீவசிருஷ்டியே சர்வசங்சாரத்திற்கு மூலமென்கிற சித்தாந்தம் இரண்டு சிருஷ்டியுங்கூடி வழங்குகிறசாக்கிரவவத்தையிலும் சீவசிருஷ்டியான சீவதொய்தத்தையொழிந்தவனே சீவன்முத்தன் இந்தச்சாக்கிரத்திலுஞ் சீவத்தொய்தம் ஈஸ்வரத்தொய்தம் இரண்டுங்கூடிவழங்கினாலும் சீவத்தொய்தமே பந்தப்படுத்துகிறது ஈஸ்வரத்தொய்தம் பந்தப்படுத்துகிறதல்ல அதெப்படியென்றால் கண்ணிற்காணாமற் றூரதேசத்தில் நெடுங்காலுந் தன்பிள்ளைபோயிருக்கையில் நம்முடையபிள்ளை யிருக்கிறானென்கிற சீவசிருஷ்டியிருந்து சுகத்தைக்கொடுத்தது அந்தக்காலத்தி லொருத்தன்வந்து பிள்ளை செத்தானென்று சொல்லக்கேட்டு நம்முடைய பிள்ளையை யிழந்தோமென்று சீவசிருஷ்டி மாறினவுடனே துக்கத்தைக்கொடுத்தது அவன் செத்துப்போயிருக்கையிலும் அந்தவார்த்தை கேளாமலிருந்தகாலமெல்லாம் சீவசிருஷ்டியிருந்து சுகங்கொடுத்தது ஆகையினால் சகலபிராணிகளுக்கும் பந்தப்படுத்துகிறது அந்தக்கரண பிரபஞ்சமே யல்லாமல ஈஸ்வர பிரபஞ்சமல்ல.

ச-கை. அந்தக்கரண பிரபஞ்சத்திற்கு முன்னிலையான ஈஸ்வர சிருஷ்டியை யொழிந்தபின்பே அத்தொய்தம் வரவேண்டுமென்னில

உ-ம், சீவனுடைய யுத்திபோகத்தினால் ஈஸ்வரப்பிரபஞ்ச மழிக்கப்படுகிறதுமல்ல சிருஷ்டிக்கப்படுகிறதுமல்ல ஈஸ்வர சங்கற்பத்தின்படியேயாகிறது அவருடைய சங்கற்பத்தின்படியே பிரளயத்தில் ஈஸ்வரத்தொய்தமெல்லாம் ஒழிந்தவிடத்தில் குரு சாத்திரமுதலான மோட்சசாதனமொன்று மில்லாததுகொண்டு விரோதியாயிருக்கிற தொய்தம்போ யிருக்கையினாலும் அத்தொய்தத்தை யறியவேகூடாது ஆகையினால் குருசாத்திரமுதலான அந்தக்கரணாதிகளாயிருக்கிற மோட்சசாதனங்களைக்கொண்டு விரோதியாயிருக்கிற ஈஸ்வரத்தொய்தம் நடக்கிறகாலத்தில்தானே சீவத்தொய்தத்தைமாற்றி அத்தொய்தத்தை யறிகிறதுகொண்டு ஈஸ்வரத்தொய்த மோட்சத்திற்குத் தகைவுமல்ல அது மாயாமயமென்றறிந்து அத்தொய்தம் மெறலானப

டியினால் அது நமக்குச் சாதனமுமாம் அது நம்மாலே தடை படுகிறதுமல்ல இப்படி ஈஸ்வரத்தொய்தத்திற்குஞ் சீவத்தொய்தத்திற்கும் பிரிவுசொல்லப்பட்டது.

சு-கை. சீவத்தொய்தமே பந்தப்படுத்துகிறதானபடியினால் சீவத்தொய்த மின்னபடியென்றும் அதை யழிக்கிறவழி இன்னபடியென்றும் பிரமாணமூலமாகச் சொல்லவேண்டுமென்னில்.

உ-ம், சாஸ்திரீகமென்றும் அசாஸ்திரீகமென்றும் சீவத்தொய்தமிரண்டுவகையுண்டு அதில சாஸ்திரீகமானவன் வேதாந்தசாஸ்திரஞ்சொன்னபடியேகேட்டு மனதில் நிர்ணயப்பட்டுத் தத்துவ சித்தாந்தயுக்திபடி ஒழுங்குமுதலானது அந்தக்கரணபிரபஞ்சம் அசாஸ்திரீகமானவன சாஸ்திரத்தைக்கடந்து பிரபஞ்சத்தைப் பிரமாணமாகவெண்ணி அந்தக்கட்டுபடியே நிர்ணயப்படுகிற அந்தக்கரணப்பிரபஞ்சம் இது தீவரமென்றும் மந்தமென்று மிருவகையாயிருக்கும் காரியாந்தம்நடக்கிற காமக்குரோதாதி பிரபஞ்சமெல்லாந் தீவரமென்றுசொல்லப்படும் பிரவிர்த்தியற்றுப் பிரபஞ்ச விஷயத்தைக்குறித்துச் சங்கற்பிக்கிறமனோராச்சியமெல்லா மந்தமென்றுசொல்லப்படும் இந்த இருவகையும் ஞானம் வேண்டுமென்கிறவன் சிரவணத்திற்கு வருமுன்பே சாதனமப்பியாசிக்கிற காலத்தில்தானே இந்த இருவகையான அசாஸ்திரீகப் பிரபஞ்சமெல்லாந் தவிரவேண்டும் இல்லையாகில் கேள்வியில் சித்தமொருமிபாது.

சு-கை, ஆனால் கேள்விமுடியுமட்டும் தவிர்ந்து இடமானபின்பாவது அசாஸ்திரீகப் பிரபஞ்சவிர்த்தி வரலாமோவென்னில்.

உ-ம். வரலாகாது அப்படிவந்தால் சீவன் முத்திவரமாட்டாது ஆகியில் தவிர்ந்தது ஞானம்வரவேண்டுமென்று அறிந்தபின் தவிருகிறது சீவன்முத்திக்காக ஆகையினால் ஞானமறிந்தபின்பு அந்தக்கரண பிரபஞ்சத்தைத் தவிராதிருந்தால் காமாதி பிரவிர்த்தியில் முயன்று சுகதுக்காதியில் பெந்தப்படுகிறவனுக்கு நிரந்தர நித்தியமுத்தனாய் நிரதிசய வானந்தமாயிருக்கிறவனென்று நில்லாமல் மறைபடுகையினால் முத்தனென்கிறது கூடாது.

சு-கை. ஆனால் சீவன்முத்திவேண்டாம் பிரமசொரூபமான அவுத்திரத்திரய சாட்சிநானென்று பிறிந்தறிந்ததே முத்தியென்கிற சாஸ்திரம்போதுமென்னில்.

உ-ம், இப்படி வந்ததுகொண்டு சந்தோஷிக்கிறதானால் குருசன்னிதானத்தில் வேதாந்தசாஸ்திரஞ் சிரவணமாத்திரம் பண்ணினது

கொண்டு சொற்கமுண்டென்கிற சாத்திரமாத்திரம் உனக்குப் போதும்.

ச-கை. அசுராதிபீடைகளும் புண்ணியக்ஷயம் வந்தெரிந்து விழுகிற மேனையுங் கண்டபடியால் சொற்கத்தி லிச்சையில்லையெனில்.

உ-ம். எழுபத்தொரு சதுர்யுகமானந்தபோகம் பொசிக்கிற சொற்கத்தில ஒவ்வொருகாலத்தில் வருகிற அசுராதிபீடைகண்டு அதிலே வெறுப்புவந்து சொற்கமேவேண்டாமென்றிருக்க அனந்தகோடி சென்னமரணாதி சங்சாரத்திற்குமூலமான அந்தக்கரணப் பிரபஞ்சமுந்தவிர்ந்து சீவன்முத்தி யப்பியாசிக்கவேண்டும் இதுவரைக்குங்கேட்ட வேதாந்தசாஸ்திரத்தாற் பரியஞ் சாட்சியே நானென்று பற்றினபுத்தி வாங்காமலிருக்கவேண்டுமென்றும் சரீராதிகளில் நானென்கிறபுத்திவாராமல் மறிக்கவேண்டுமென்றும் அதைப்பற்றி அபிமானத்துக்கிடமான அகிலப்பிரபஞ்சமும் மெய்யென்றுவாராமல் பொய்யென்று திடம்பண்ணவேண்டுமென்றுங் குவிந்தபடியால் இப்படிகேட்ட அர்த்தத்தைவிட்டுவைத்து இதற்கு விபரீதமான அர்த்தபுத்தியைப்பண்ணிக்கொண்டு அசாஸ்திரீகப் பிரபஞ்சந் தவிரமாட்டேனென்றால் அப்பியாசித்தசாஸ்திரம் வாக்கினால்மாத்திரங்கிளிப்பிள்ளைக்குச்சரியாகி அசுத்தப்பிரவிர்த்தியினாலே தத்துவஞானியும் காயுஞ்சரியென்றுவரும் அம்மாத்திரமுமல்ல முன்னேயிதுவரைக்கும் சங்சாரத்தில் பந்தப்படுத்தினது தன் அந்தக்கரணதோஷமொன்றேயுள்ளது இப்போது தத்துவஞானமப்பியாசித்துஞ் சீவன்முத்திவேண்டாம் அந்தக்கரணப்பிரபஞ்சமே கைவிடப் போகாதென்றால் இவன்கற்ற ஞானமென்ன இவன்செய்யும் கிர்த்தியமென்னவென்று எல்லாருடைய அந்தக்கரணதோஷத்தினாலும் பெந்தப்படுவன் ஆகையினால் அந்தக்கரண கற்பனையை நன்றாகத்தவிர்ந்து சாட்சியே நானென்றுநிற்க அந்தக்கரணத்தைச் சாட்சியிலூன்றிக்கொண்டு சரீராதிசகல சங்சாரத்தையுமறந்து சகலலோகத்தாராலும் பட்டினத்துப்பிள்ளையைப்போலப் பூஜிதையடைந்து ஆனந்தாவரணத்தைத்தள்ளி சீவன்முத்தியையடையலாம்.

ச-கை. இப்படி சீவத்தொர்ய்தம் பந்தப்படுத்துமானால் தீவரப் பிரபஞ்சத்தைக் கைவிடுகிறேம் காரியத்திற்குவாராத மந்தமிருந்தது கொண்டு ஆனியேதெனனில.

உ-ம், மனோராச்சியஞ் சகலபிரபஞ்சவிருத்திக்குந் திடப்பட அனுசந்தானம்பண்ணிவருகிற வினாயானபடியினால் சகலவனர்த்தத்திற்கு மூலமென்றறிந்து மனோராச்சியத்தைமுந்தித் தவிரவே

ணும் இப்படி யிரும்மைக்கொண்டு இரும்பை ராவினுப்போல் சாஸ்திரீக பிரபஞ்சத்தைக்கொண்டு அசாஸ்திரீகப் பிரபஞ்சமிரண்டையுந்தள்ளிப் பின்பு பிணஞ்சுடுகிற தடிபோலச் சாஸ்திரீசப் பிரபஞ்சத்தையுந்தவிர்ந்து தானே தானுய்த் திட்டப்பட்டதே சீவன்முத்தி தத்துவசித்தாந்த மரியாதையெல்லாம் இத்தவிதத்தினுற் கூடாதென்று தள்ளுகிறசீவன்முத்தி லட்சணமெல்லாம் சாஸ்திரீகப் பிரயஞ்சத்தைத் தவிர்கிற வழியென்றேயறிக இப்படி அசாஸ்திரீகப் பிரயஞ்சம் சாஸ்திரீகப் பிரபஞ்சம் இவ்விருவகையுந்தவிர்ந்து தானேதானுக அலைச்சலற நின்றவிடம் சீவன்முத்தியென்றறிக.

இப்படி துவிதவிவேகஞ்செய்தவன் நித்தியமுத்தனுய் விளங்குவன்.

துவிதவிவேகம்-முற்றிற்று.

ஐந்தாவது

# மகாவாக்கியவிவேகம்.

வித்தியாரண்ணியசுவாமிகள் லோகோபகாரமாய் மகாவாக்கியஞ் சொல்லுகின்றுர்.

ச-கை. மகாவாக்கியமென்பதெத்தனை அந்தவாக்கியத்துக் கர்த்தமேதென்னில்.

உ-ம். நான்குவேதங்களிலு முடிந்தபொருளைச் சொல்லுகின்ற நாலுவாக்கியமும் மகாவாக்கியமென்று சொல்லப்படும் ஞானவடிவாயிருக்கிறதே பிரமமென்று இருக்குவேதஞ் சொல்லிற்று நானே யந்தப் பிரமமென்று எசுர்வேதஞ்சொல்லிற்று நீயுமதுவேயென்று சாமவேதஞ்சொல்லிற்று இந்த ஆத்மாவே பிரமமென்று அதர்வணவேதஞ் சொல்லிற்று இதுவே மகாவாக்கியத்திற் கர்த்தம்.

ச-கை, இருக்குவேதத்தில் சொன்ன அர்த்தமெங்கே யிருக்கின்றதென்னில்.

உ-ம். யாதொரு அறிவினுல் சத்தமுதலான ஐந்துவிடையங்களையு மறியப்படுகிறது அந்தப்போதமே பிரமம்.

ச-கை. இப்படிக்கொத்த அர்த்தம் எத்தனையுண்டென்னில்.

உ-ம். மும்மூர்த்திகள் முதலான தேவதைகளிடத்திலும் மனுஷர்பசுக்கள் முதலான விடங்களிலுஞ் சைதன்னியமாயிருக்கிற அர்த்தமொன்றேயொழிய விரண்டில்லை.

ச-கை. இப்படி முந்தினவாக்கியத்தினால் ஞானம் வருமானால் மற்ற மூன்றுவாக்கியத்திற்கு அர்த்தமேதென்னில்.

உ-ம். பரிபூரணமாயிருக்கிற பரமான்மாவே இந்தத்தேகத்திலே புத்திசாட்சியாயிருக்கிற சைதன்னியம் இந்தத்தானாயிருக்கிற பிரமந்தானே அகமென்று எசுர்வேதஞ் சொல்லுகின்றது சீவனுடையதேகேந்திரியாதிகளுக் கப்பாற்பட்டிருக்கிறவஸ்து இந்தப்பிரமமானபடியினாலே நீயே செகத்காரணப்பிரமமென்று சாமவேதஞ்சொல்லுகின்றது இப்படி சுயம்பிரகாசமாயிருக்கப்பட்ட ஆத்மாதானே அர்த்தமல்லாமல் வேறொன்றல்லவென்று அதர்வணவேதஞ்சொல்லுகிறது.

இப்படி மகாவாக்கிய விவேகம்பண்ணினவன் மோட்சத்தையடைவன்.

மகாவாக்கியவிவேகம் - முற்றிற்று.

ஆனந்தபஞ்சகத்தில் - முதலாவது

## யோகானந்தம்.

வித்தியாரண்ணியசுவாமிகள் லோகோபகாரமாய் தீபிகாபஞ்சகம் விவேகபஞ்சகமாக பத்துப்பிரகரணஞ்சொல்லி அதுகளிற் சொன்னபடி அர்த்தத்தைப் பகுத்தறிந்தவனுக்குச் சகலதுக்கமும்போய் தடையற்றவானந்தம் வருமென்பதை ஆனந்தபஞ்சகத்தினால் வெளியிடத்துடங்கி முந்தி யோகானந்தஞ் சொல்லுகின்றார்.

ச-கை, ஞானத்தினாலிந்த விருவகைப் பிரயோசனமுமுண்டென்கிறதற்குப் பிரமாணமேது அந்த ஞானானந்தமெத்தனைவிதம் கெதம் இதையடைந்தவரார் எப்படி யடைந்தார்கள் அடைகிறவிதமெதினாலானந்தமாயிருக்குமென்னில்.

உ-ம். பிரமவித்து பரத்தையடைந்தவன் ஆத்மஞானி சகலசோகமுங்கடப்பன் பிரமஞானம்பெற்ற சீவனுக்கேயானந்தம் மற்றவனுக்கில்லை சகலத்தையுந் தானாய்க்கண்டவனுக்கே பயம்போம் தொய்தமாய்க்கண்டவனுக்கே பயம் பிரமானந்தத்தையறிந்தால் ஒருக்காலு மொன்றுநிமித்தமாயும் பயமில்லை ஞானியைக்கர்மாக்கினிகிட்டாது பிரமத்தையறிந்தவுடனே சகலபாபமு நசிக்கும் பரத்தையறிந்தால் இருதயக்கிரந்தியம் சகலசந்தேகங்களும் வெந்துபோம் ஞானிக்கொருக்காலுஞ் செனனமரணாதிகளில்லை பிரமத்தையறிந்தவன் பிரமமே யாவனென்று இப்படி முழங்குகிற வேதபுராணங்களெல்லாம் பிரமாணம் பிர

மானந்தம் வித்தியானந்தம் விடையானந்தமென்று ஞானானந்த மூன்றுவிதமாயிருக்கும் முன்வருணன்சொல்லக்கேட்டு பிருகு இந்த நிலைபெற்றார் சனற்குமாரரிடத்திலும்நாரதர்பெற்றார் சகலமும் ஆனந்தத்திற்பிறந்து ஆனந்தத்திலிருந்து ஆனந்தமாத்திரமாய் மினுசுகையினால் நாமே அத்துவிதானந்தமென்கிற வழியாகவடைந்தார்கள் திரிபுடி யிலலாதபடியினால் பிரமமேயானந்தம்.

ச-கை. திரிபுடியாவதேது திரிபுடியிலெப்படி சுகமில்லையென்னில்.

உ-ம். விஞ்ஞானமயமென்கிற ஞாதாருவும் மனோமயமென்கிற ஞானமும் விடையங்களென்கிற நேயமுந் திரிபுடியென்பது விஷங்கலந்ததேன்போல் இந்தத்திரிபுடியிலே வருகிற விடயசுகமாயிருந்துக்கத்தோடே கூடினதுகொண்டு சுகமல்ல.

ச-கை, அத்துவிதத்திலெப்படி திரிபுடியில்லையென்னில்.

உ-ம். பூதோற்பத்திக்குமுன் னகண்டானந்தமானது சமாதி சுழுத்தி மூர்ச்சைபோலே திரிபுடியற்றிருக்கும்.

ச-கை. இப்படியானால் தொய்தத்திலே ஆனந்தமில்லாததுபோல் அத்துவிதத்திலும் ஆனந்தமில்லை உண்டானா லனுபவிக்கவேண்டும் அதற்கங்கே திரிபுடியில்லையேயென்னில்;

ச-கை, திரிபுடியற்றவிடத்திலே அத்துவிதமென்றும் ஆனந்தமென்றும் இரண்டிலலை அத்துவிதந்தானே ஆனந்தசுரூபம்.

உ-ம். அப்படிக்கொத்த ஆனந்தமுண்டென்கிறதற்குப் பிரமாணமேதென்னில்.

ச-கை. தானாகத்தோற்றின வஸ்துவுக்குப் பிரமாணந்தேவையில்லை.

உ-ம். அத்துவிதானந்தந் தானாகத்தோற்று மென்கிறது சொல்மாத்திரமொழியக் காணப்படாதோவென்னில்.

உ-ம். சுழுத்திபோலேயறி.

ச-கை, சுழுத்தியிலே அத்துவிதானந்தந் தானாய் விளங்குகிறதற்குப் பிரமாணமேதென்னில்.

உ-ம், சுழுத்தியில் இந்திரியங்களுந் திட்டாந்தமு மில்லாமலிருக்கையிலும் நான் சுகமேயிருந்தேனென்கிற உன்னுடைய அனுபவமேபிரமாணம்.

ச-கை. "சுழுத்தியானந்தமல்ல விட்சேப துக்கமில்லாததுகொண்டு சுகமென் றாரோபிக்கிறீரென்னில்.

உ-ம், சுழுத்தியில் சுகமேயில்லாவிட்டால் பாய்தலை காணிமுதலான சாதனமேன் தேடுகிறார்கள்.

ச-கை, துக்கம்போகத்தக்கதையாகப் பாய்தலைகாணியைத்தேடுகிறதே யல்லாமல் சுழுத்தியிலே சுகயில்லையென்னில.

உ-ம். அப்படியானல் வியாதிக்காரருக்குப் பாய்தலை காணியைக்கண் டவுடனே துக்கம்போகவேண்டும் அப்படியுங் காணுமே ஆகையினல் நித்திரைக்குச் சாதனமேயல்லாமல்ஆனந்தத்திற் குச் சாதனமல்ல.

ச-கை. ஆனல் சுழுத்தி ஆனந்தத்திற்குச் சாதனமேதென்னில்.

உ-ம், சாக்கிரமுதலான விடசேபத்தினல் நொந்தமனது சுழுத்தியி லே ஆத்மாவைநாடினவுடனே அதில் ஆனந்தம் பிரதிவிம்பிக் கும் அந்த ஆனந்தத்தை அனுபவிக்கையினல் ஒரு துக்கமுந் தோன்றுது ஆகையினல் சுழுத்தி யானந்தமாகவேண்டும் இல் லாதிருந்தால் சகலருக்கும் நாட்டமாகாது இதற்குவேதத்தில் ஐந்துதிட்டாந்தமுஞ் சொல்லுகின்றது.

ச-கை. சுழுத்தியானந்தமென்கிறதற்குச் சுருதிசொன்ன வைந்து திட் டாந்தமேதென்னில்.

உ-ம். வல்லூறு பருந்துகுழந்தை மகாராஜா மகாப்பிராமணன்.

ச-கை. இந்த வைந்தும் எந்தவிதத்திலே திட்டாந்தமென்னில்,

உ-ம். கட்டுப்பட்டவல்லூறு எந்தத்திக்கிலே யோடினலும் தன்னி லையிலேவந்திளைப்பாறும் அதுபோலச் சீவருபாதியான மன தும் புண்ணியபாவங்களைப்பொசிக்கச் சாக்கிரத்திலுஞ் சொ ற்பனத்திலுஞ்சுழன்று சுழுத்தியிலேவந்து சுகமடையவேண் டும் பருந்தானது கூண்டிலே விழுகிறபோது அதிவேகமாய் விழுகிறுப்போலச் சீவனுமொன்றினலு மறைபடாமல் சுழு த்தி சுகத்தை நாடுகையினல் சுழுத்தியானந்த மாகவேண்டும் முலையுண்டு மஞ்சத்திற்கிடந்த குழந்தைக்கு ராகத்துவேஷமி ல்லாமையால் ஆனந்தமாயிருக்கிறுப்போல ராகத்துவேஷமி ல்லாத சுழுத்தியும் ஆனந்தமாகவேண்டும் சகலபூமியுந் தன்வ சம்பண்ணிக்கொண்டராஜாபின்புதிருப்தனுயிருக்கிறுப்போல் திருப்தியாயிருக்கிற சுழுத்தியும் ஆனந்தமாகவேண்டும் சீவன் முத்தனுயிருக்கிற மகாப்பிராமணன் இனி கர்த்தவ்விய மில்லை யென்று கவலைகெட்டிருக்கிறுபபோல கவலையில்லாத சுழுத்தி யுமானந்தமாகவேண்டும்.

ச-கை. இப்படி சீவன் முத்தியையடைந்து பந்தம் போனவனுக்குச் சுகமேயல்லாமல் மற்றபேருக்குச் சுகமில்லையோவென்னில.

உ-ம். நன்றாகவிடுபட்டவனுக்கும் நன்றாகப் பெந்தப்பட்டவனுக்கு ஞ் சுகமுண்டு நடுநாட னுக்குச் சுகமில்லை.

ச-கை. சுழுத்தியிலே யிதரவியாபாரமேன் தெரியவில்லையென்னில்.

உ-ம். ஸ்திரீயால் தழுவப்பட்டவனுக் கவ்வவசரத்தில் வீட்டுக்குட் காரியமும் வெளிக்காரியமுந் தெரியாததுபோலச் சுழுத்தியானந்தத்தி லழுந்தினவனுக்குஞ் சரீரத்திற்குள் சொற்பனமும் வெளியிற் சாக்கிரமமும் இருவகையுந் தெரியாது எழுந்திருந்த பின்பு சுகமாய்த் தூங்கினேன் ஒன்றுமறியே னென்கிறதினால் அந்தவஞ்ஞானமும் ஆனந்தமயமுங் காணப்படுகிறது மனோமயனும் விஞ்ஞானமயனும் அஞ்ஞானத்தி லழுந்தினவேளையி லானந்தமயனென்று சொல்லப்படும் அஞ்ஞானவிருத்தி சூட்சுமமென்றும் மனோவிருத்தி ஸ்தூலமென்றும் வேதஞ்சொல்லுகின்றது.

ச-கை, இப்படி பிரமானந்தத்தி லேகமாயழுந்தியிருந்த சீவன் இந்தவிடசேமத்தினால் ஏன்விழிக்கின்றா னென்னில.

உ-ம். சென்மாந்திரகன்மத்தினாலே விழிக்கிறான் விழித்தும் அவிடத்து பட்சபாதம்விடாமல் சற்றுப்போது நிர்விடயமாயிருக்கிறான் பின்பு கன்மங்களதை மறக்கடித்து இழுத்துப்போகிறது ஆகையினால் நித்திரைக்கு முன்னும்பின்னும் பட்சபாத மிருக்கிறபடியினால் ஆனந்தமே பிரமமாகவேண்டும்.

ச-கை. வெறுமனேயிருக்கிறதும் பிரமானந்தமானால் சோம்பலும் பிரமானந்தமாக வேண்டுமென்னில்.

உ-ம். வேதாந்தமறிந்தவனுக்குத் தானங்கொடுக்கிறார்களென்கிறதைக்கேட்டு வேதம் நான்கென்கிறது நானுமறிவேன் எனக்குந்தானந்தாவென்கிறதுபோல நீயும் பரிகாசஞ்சொல்லுகிறாய் குருவையுஞ் சாஸ்திரத்தையுமன்றி யாராலே பிரமமறியப்படும்.

ச-கை. வேதாந்தமெல்லாம்படித்தால் போதுமோவென்னில்.

உ-ம். அர்த்தமறிந்தாலொழிய போதாது.

ச-கை விற்பத்தியினாலே அர்த்தம் பார்த்துக்கொண்டால் போதாதோவென்னில்.

உ-ம். சாட்சாத்காரம் வந்தாலொழிய போதாது.

ச-கை, இனியெப்போது சாட்சாத்காரம் வருமென்னில்.

உ-ம், கிருதார்த்தனாகுமளவுங் குருவையுபாசித்தால் வரும்.

ச-கை, குருவையுபாசித்தா லெப்படிவருமென்னில்.

உ-ம். அவர்விடய நிமித்த முன்னிலையில்வருகிற வானந்தங்களையும் விடயமொழிந்தபின்பு அந்தர்முகவிருத்தியில் பிரதிபலிக்கிற ஆனந்தங்களையும் உன்னுடைய சுபாவ ஆனந்தவாசனையல்லாமல் வேறல்லவென்று காணச்சொல்லி யுபதேசிப்பர்.

சீ-கை, சுபாவானந்தமானது பிரதிவிம்பானந்தத்தையும் வாசனானந்தத்தையும் எப்படி ஜெனிப்பிக்கிறதென்னில்.

உ-ம். சுருதி யுத்தி அனுபவத்தினால் தான் பிரமானந்த மென்கிறது சுபாவசித்தமாயிருந்தாலும அவிடத்தில் பிரதிவிம்பானந்தமாகிய ஆனந்தமயன் இருதயத்தைவிட்டு கண்டத்திலவந்து சொற்பனத்தில் விஞ்ஞானமயனாவன் நேத்திரத்தில் வந்து சாக்கிரத்தில்காய்ச்சின இரும்புவுண்டைபோல தேகமெல்லாங் கலந்துநின்று உதாசீனன் சுகிதுக்கியென்று மூவகையாயிருப்பன் இதில் சுகதுக்கமிரண்டுங் கர்மகாரியம் உதாசீனந் தான்சுபாவமாயிருக்கின்றது.

சீ-கை, சுகதுக்க மெத்தனைவிதம் இரண்டுமன்றிச் சும்மாயிருக்கிறவேளையில் எதுதோற்றுமென்னில்.

உ-ம். பாகியபோகமென்றும் மனோராச்சியமென்றும் சுகதுக்க மிரண்டுவிதமாயிருக்கும் இதினுடைய இடைநடுவில் எனக்கொரு சிந்தனைகளுமில்லை சுகமாயிருக்கிறேனென்று எல்லாருஞ்சொல்லுகையினால் ஆத்மசுபாவமானந்த மென்கிறதற்குச் சந்தேகமில்லை.

சீ-கை. தன்னுடைய சுபாவானந்தம் இதுதானோவென்னில்.

உ-ம். நீரிருக்கிறகுடத்தைத் தொட்டவுடனே காண்பிக்கிறகுளிர்ச்சி தண்ணீராகாவிட்டாலும் அதுகொண்டு குடத்தில தண்ணீருண்டென் றறிகிறதுபோல வுதாசீனவேளையில் காண்பிக்கிறசுகமும் உள்ளேயகங்காரத்தினால் மறையப்பட்டிருக்கிற சுபாவானந்தத்தின் வாசனை.

சீ-கை. இப்படியானால் சுபாவானந்தம் எப்போது தோற்றுமெனில்.

உ-ம். பிரம அப்பியாசத்தினால் அகங்காரத்தை மறக்க பிரமானந்தசுபாவம் வெட்டவெளியாம் அகங்காரம் நன்றாகமறந்தால் சித்தமிருக்கிறபடியினால நித்திரையுமல்ல பிராரத்த மிருக்கிறபடியினால் தேகமும்விழாது இப்படி தொய்தபுந் தோற்றாமல் நித்திரையுமல்லாம லிருக்கிற பிரமானந்த நிலைவெளியாம.

சீ-கை. இப்படிக்கொத்தநிலை வரத்தக்கதாகப் பிரமாப்பியாசம் பண்ணுகிற வடைவெப்படி அதற்குப் பிரமாணமேதென்னில்.

உ-ம், பிரபஞ்சவிடயத்தில்விழாமல் புத்தியை திடம்பண்ணிக்கொண்டு பிரபஞ்சத்தை மெள்ளமெள்ள வொழிபவேணும் யாதொருவழியால் புத்திபேதித்ததோ அந்தவழியெல்லா மறுக்கவேணும் சஞ்சலமானமனதை ஆத்மாவினிடத்தில் அசையாமல் நிறுத்தவேணும் இப்படிநிறுத்தினால் இந்தயோகத்தினால் யாதொன்றினால் மனதுநிற்கும் யாதொருசுகத்திற்கு ஆதியந்தமி

ல்லை யாதொரு நிலைபெற்றால் இனியில்லையென்னப்பட்ட கர்மபந்தங்களினாலும் அசைக்கப்படாததோ அந்தப் பிரமானந்தம் இவனை யடையுமென்கிறதே யடைவு இப்படிசொன்ன கீதாவசனமே பிரமாணம்.

ச-கை, இந்த அப்பியாசமேதுக்கென்னில்.

உ-ம், தெற்பைதுனியால் சிட்டுக்குருவி சமுத்திரத்தை யிறைக்கிறாப்போல் மனோநிக்கிரகம் பண்ணுகிறதுங் கிலேசப்படாமல சிறுகச்சிறுகப் பண்ணவேண்டும பிரபஞ்சவிர்த்தி மறுக்கிறபோது எண்ணெயற்ற விளக்கைப்போல் அந்தக்காரணமுஞ் சின்மாத்திரமா யொழியும்.

ச-கை. சித்தம் ஆத்மாவில் லயிச்சதுகொண்டு கர்மபந்த மெப்படிவிடுமெனனில.

உ-ம். கன்மசமூசாரங்களுக்குச் சித்தமே காரணமானபடியினால் அந்தச்சித்தத்தைத் தானேசோதிக்கிறபோது சகலகர்மமும் விட்டுப்போம்.

ச-கை. சித்தத்தைச் சோதிக்கிறவிதமேது சித்தத்தைச் சோதித்தால் மோட்சமென்பதற்கும் சோதியாமலிருந்தால் பந்தமென்பதற்கும பிரமாணமேதென்னில்.

உ-ம். அந்தக்கரணத்தை விடயத்தில் பற்றுவிக்கிறாப்போலப் பிரமத்தில பற்றுவிக்கிறதே சோதிப்பது அந்தக்கரணம் விடயத்தில் பற்றினால் அசுத்தம் பிரமத்தில்பற்றினால் சுத்தம் ஆகையினால் மனதே பந்தத்திற்கும் முத்திக்குங் காரணமென்கிறவேதமே பிரமாணம்.

ச-கை, சமாதியிலானந்த மெப்படியிருக்கும் சமாதியில்லாத வேளையிலெப்படியிருப்பன் இப்படி யோகத்தில மனதுண்டானவனுக்கு அடையாளமேது இந்திரியங்கள் பலம்பண்ணிப் பிரபஞ்சத்திலிழுத்தால் செய்காரியமேது இவனுக்கு விடயானந்த மெப்படி தோற்றுமென்னில்

உ-ம். சமாதியில் நிர்மலவந்தக்கரணத்திற்கு ஒருஞானந் தெரியுமல்லாமல் வாக்கால் சொல்லப்போகாது சமாதியில நிச்சயித்தபடிக்கு மற்றவேளையிலும் நம்பிக்கையாயிருப்பன் பரபுருஷனை யடைகிறகாரிபோல் அனுசந்தானத்தில் கரிசனமல்லாமல் பிரபஞ்சத்தினிடத்தில் கரிசனமற்றிருப்பன் சுமையெடுக்கிறவன் சற்றுச்சற்றுவைத்து இளைப்பாறுகிறாப்போல் சிறுகச்சிறுகவரித்து இந்திரியங்களைச் சமாதியி லிளைப்பாற்றுவன் அனுசந்தானத்திற்கு விரோதியாய்வந்த விடயானந்தமும் நெருப்பிலே தள்ளுகிறாப்போலத் தோற்றும்.

ச-கை. பிரமானுசந்தானமும் பிரபஞ்சவியாபாரமும் ஒருமனதிற்குச் செய்யக்கூடாதே யென்னில.

உ-ம். ஞானியினுடைய மனது காக்கைக்கண்போல் இரண்டிடத்திலும் போக்குவரத்தாயிருக்கும்.

ச-கை, சமாதியில்வருகிற பிரமானந்தத்தையும் அதின் பிரதிபந்தமான விடயானந்தத்தையு மனுபவிக்கிறஞானி யெப்படி யிருப்பனென்னில.

உ-ம். இரண்டுபாஷையுமறிந்தவன்போல் இருவகையானந்தத்தையுங்கண்டு பொசித்துக் களித்திருப்பன்.

இப்படி யோகானந்தத்தை அனுசந்தானம்பண்ணினவன் கிருதகிருத்தியனாவான்.

யோகானந்தம் - முற்றும்.

---

இரண்டாவது

# ஆத்மானந்தம்.

யாதொருத்தனுடைய மூச்சுகாற்றுத்தானே வேதமாகவழங்குகிறது யாதொருத்தர் வேதத்தினாற் சகலபோகத்தையு முண்டாக்கினார் அவருக்கு நமஸ்காரம்பண்ணி வித்தியாரண்ணிய சுவாமிகள் லோகோபகாரமாய் அருளிச்செய்கின்றார்.

ச-கை. யோகியானவன் யோகத்தினாலே தன்னுடைய சுபாவானந்தத்தை யறியட்டும் இனி மூடனாயிருக்கிறவனுக்குக் கெதியேதென்னில.

உ-ம். தன்மாதன்ம வசத்தினால் லட்சஞ்செனனமெடுப்பன்.

ச-கை. இப்படி தள்ளிவிடலாமோ எல்லாரிடத்திலுந் தயவுபண்ணத் தேவையில்லையோவென்னில.

உ-ம். நாமையோவென்றால் பிரயோசனமேது வந்தமூடன் பகிர்முகனோ அந்தர்முகனோவென்று கண்டுகொண்டு அவனுக்கேற்ற உபதேசம்பண்ணவேண்டும்.

ச-கை. இந்தவிருவகையில் எவனுக்கு எதை யுபதேசம்பண்ணுகிறதென்னில்.

உ-ம், பகிர்முகனாயிருக்கிற மூடனுக்குக் கிரமவுபாசனைகளை யுபதேசிக்கவேண்டும் அந்தர்முகனாயிருக்கிறவனுக்கு ஆத்மானந்தமார்க்கத்தில் ஞானத்தை யுபதேசிக்கவேண்டும்

ச-கை. கெதம் இப்படி மூடருக்கு ஆத்மானந்த முபதேசித்தபேருண்டோ ஆத்மானந்த வுபதேசமாவதேதென்னில்.

உ-ம். ஆச்கியவர்க்கர் தம்முடைய பெண்சாதி மயித்திரிக்குபதேசித்தார் ஆனந்தமாயிருக்கிறவஸ்து ஆதமாவென்று காட்டுகிறதுவுபதேசம்.

ச-கை. இப்படியானால் விடயங்களெல்லாம் ஆத்மாவல்லவோ வென்னில.

உ-ம். புருஷன்-பெண்சாதி-பிள்ளை-தனம்-பசு பிராமணசாதி - லோகங்கள்-தேவதைகள்-வேதங்கள்-பூதங்கள் - சகலமும் ஆத்மாவைக்குறித்துப் பிரியமல்லாமல் இதுகள் ஆனந்தமல்லவென்று வேதஞ்சொல்லுகின்றது.

ச-சை, ஆனந்தமாயிருக்கிற அதுகளை ஆனந்தமல்லவென்கிற தெப்படியென்னில.

உ-ம், பெண்சாதிக்குப் புருஷனிடத்தில் விருப்பமிறந்தவேளையில் வியாதிபசியினால் இவளை அவனிச்சியாததுகொண்டு பத்தாவைக்குறித்து வந்தவானந்தம் இவளுடைய சுபாவமேயல்லாமல் அவனை யானந்தமென்னக்கூடாது புருடனுக்குப் பெண்சாதி ஆனந்தமாய்த்தோற்றுகிறபோது அவள் இவனை நத்தாதபடியினால் ஆனந்தம் இவனுடைய சுபாவமேயல்லாமல் அவள்பிரியவஸ்துவென்பதல்ல முன்னுப்போலே மீசைதைக்கஅழுகிலுங் குழந்தையை முத்தமிட்டுக்கொள்ளுகிறவானந்தம் பிதாவுக்குத் தன்னுடைய வானந்தமேயல்லாமல குழந்தையானந்தமல்ல சந்தோஷப்பட அறியாத ரத்தின கனகாதிகளைச் சாவதானமாயார்ச்சிகக்கண்டு மகிழ்கிறது இவனுடைய வானந்தமேயல்லாமல் ஐஸ்வரிய ஆனந்தமல்ல காளை களியாவிட்டாலும் அதில்பொதியேற்றுகிறவனுக்கல்லாமல் காளைக்கல்ல நான் பிராமணனென்று சபையில் பூஜிதை யடைகிற சந்தோஷந் தனக்கேயல்லாமல் அசேதனமான சாதிக்கல்ல சொர்க்கலோகம் பிரமலோகம் நமக்கு வேண்டுமென்கிற வாஞ்சை தனக்குச் சந்தோஷார்த்தமேயல்லாமல் அந்தலோகத்திற்கு உபகாரமாகவல்ல சிவன்முதலான தேவதைகளைப் பாவம்போக வேண்டுமென்று பூசிக்கிறது தான்பிழைக்கும்பொருட்டல்லாமல் தேவதைகளுக்காகவல்ல வேதமுதலானது ஓதுவது தனக்குவிவேகம் வளரும்பொருட்டல்லாது வேதத்திற்கல்ல இடந் தாகம் பாகம் உலந்தல் அவகாசங்களுக்காகப் பஞ்சபூதங்களை கத்துகிறசந்தோஷம் தனக்கேயல்லாமல் பூதங்களுக்கல்ல இப்படி ஆண்டவனடியானென்பது முதலானதுகளுந் தனக்காகவேயல்லாமல் பாருக்காகவல்ல ஆகையினால் சகலவிஷயத்தையுங் குறித்துத் தானே பிரிய வஸ்துவல்லாமல விடயங்க

ன் பிரியவஸ்துவல்ல ஆகையினல் ஆத்மாவே யானந்தமென்ப தற்குச் சந்தேகமில்லை.

ச-கை. இப்படி வருகிறசந்தோஷம் எத்தனைவிதமாய்ச் சொல்லப்படு மென்னில்.

உ-ம், பொன்முதலானவிடயத்தி லாசையென்றும் கர்மவுபாசனையி ல் சிரத்தையென்றும் கிடையாதவஸ்துவி லிச்சையென்றுங் குருதேவதைகளிடத்தில பத்தியென்றும் நாலுவிதமாய்ச்சொ லலப்படுவர்.

ச-கை, இந்தவிடயங்களிலிருக்கிற பிரீதிபோல் ஆத்மாவிடத்திலும் ஒருபிரீதி யிருக்கிறது அதுகொண்டு விடயம் பிரியமல்ல வென்பானே னென்னில.

உ-ம். ஒருவிடயத்தைவிட்டு ஒருவிடயத்தை நாடுகிறதுபோல் ஆத்மாவைக் கைவிடாதபடியினல் ஆத்மாவே யானந்தம் மற்றதெல்லா மானந்தமல்ல.

ச-கை, வாஞ்சை துவேஷம் இரண்டுக்கு மி-மற்றவரோ யாத்மாவானுல் ஓட்டாங்கிச்சிபோல வுபேட்சைக்கிடமானுலென்னில்.

உ-ம். உபேட்சிக்கிறவனுடைய சொரூபமானபடியினுல் உபேட்சைக்கு விடயமல்ல ஆத்மா.

ச-கை. வியாதி ரோகங்களாலே மூடப்பட்டவன் ஆத்மஹத்தியாகப்பண்ண நினைக்கிறபடியினல் ஆதமா துவேஷத்திற்கு விடய மாகட்டுமேயென்னில்.

உ-ம். துவேஷிக்க யோக்கியமான தேகத்தைத் துவேஷிக்கிறானேயல்லாமல் துவேஷிக்கிறவனு யிருக்கிற தன்னைத் துவேஷிக்கக் கூடாது.

ச-கை. இப்படி யிருவகைக்கும் விடயமாகாத ஆத்மா பிரியத்திற்குத் தான் விடயமாகட்டு மென்னில்.

உ-ம், பிதாவுக்குப் புத்திரன்தானே சகலபெந்துக்களிலும் பிரியவஸ்துவா யிருக்கிறதுபோல் ஆத்மாவைக்குறித்தே சகலவிடயமும் பிரியமானபடியினுல் அதிற்பிரியமானவஸ்து ஆத்மாவல்லாமல் விடயமல்ல.

ச-கை, இப்படி யதிற்பிரியவஸ்து ஆத்மாவானுல் ஆத்மாதானே பிள்ளையானுனென்கிற வேதத்திலும் இவன்பண்ணின புண்ணியத்தினுல் ஆத்மாதானே பிள்ளையானுனென்றும் பிள்ளையில்லாதவனுக்குக் கெதியில்லையென்றுஞ் சொலலுகையினுல்புத்திரன் தானே யாத்மாவாகட்டுமென்னில்.

உ-ம், கவுணத்மாவென்றும் மித்தையாத்மாவென்றும் முக்கிய ஆத்மாவென்றும் மூன்றுவகை ஒவ்வொருவகையில் ஒவ்வொரு

ஆத்மா பிரதானமாயிருக்கும் புத்திரனை ஆத்மாவென்கிறது ஒருவகையில்லாமல் முக்கியமல்ல.

ச-கை. இந்த மூன்றுவகை ஆத்மாவாகச் சொல்லப்பட்டதேது எதிலேயெந்த ஆத்மா முக்கியம் இதுகளை வகையுடனே சொல்லுமென்னில்.

உ-ம். இந்தப்புருடனைச் சிங்கமென்பதுபோலப் பிள்ளையை யாத்மாவென்கிறது கெவுணம் கட்டையைக் கள்ளனென்கிறதுபோலப் பஞ்சகோசத்தைத் தானென்கிறதுமித்தை கட்டையைக் கட்டையென்கிறதுபோலச் சாட்சியைத் தானென்கிறது முக்கியம் தான்செத்தாலும் பிள்ளைகள் பிழைத்தால் போதுமென்கிறதினால் குடும்பத்தை யிரட்சிக்கிறதினால்கெவுண ஆத்மாவாயிருக்கிற புத்திரனே முக்கியம் நான்பருத்தேன் நான்சிறுத்தேனென்னுமிடத்தில் தேகமே முக்கியமாய்க் கண்டாப்போலச் சொற்கலோகம் வேண்டுமென்று காயக்கிலேசந் தபசுபண்ணுமிடத்தில் மித்தையாத்மாவான வகங்காரியே முக்கியம் நான் சுயம்பிரகாசம் நிருவிகாரியென்னுமிடத்தில் முக்கிய ஆத்மாவான சாட்சியே முக்கியமாகையினால் பஞ்சகோசங்களைத் தள்ளினாலுந் தள்ளப்படாத ஆத்மாவே யானந்தரூபி.

ச-கை. இவரைப்பிரித்தறிகிற அடைவெப்படி தள்ளுபட்ட பஞ்சகோசாதிகளும் ஒவ்வொருக்கா லானந்தமாய்த் தோற்றுவானேனென்னில்.

உ-ம். நாள்தோறும் மூன்றவத்தைகளுடைய போக்குவரத்தைக் காண்கிற சுயம்பிரகாச சைதன்னியமே தானென் றறியவேண்டும் மற்ற புத்திராதி பிராணபரியந்தங்களெல்லாம் ஆத்மாவைக் கிட்டினதற்குத்தக்க ஆனந்த தாரதன்மியமென்று காணவேண்டும்.

ச-கை. ஆத்மாவைக் கிட்டக்கிட்ட ஆனந்த தாரதன்மியங் காண்கிற வகை யெப்படியென்னில்.

உ-ம். உலகத்தில் ஐசுவரியம் சுகசாதனமானபடியினால் கைவிடப்படாத ஆனந்தமென்றுசொல்லப்படும் புத்திரர்களுக்குப் பீடை வந்தபோது ஐசுவரியத்தைக் கைவிட்டாகிலும் பிள்ளையை ரட்சிக்கையினால் ஐசுவரியத்திலும் பிள்ளையே யானந்தமாகவேண்டும் தீபற்றினவீட்டில் புத்திரர்களைவிட்டாகிலுந் தானோடிப் போகையினால் பிள்ளையிலுஞ் சரீரமே யானந்தமாகவேண்டும் கொசுகுத்தூளிக் காற்றடிக்கும்போது சரீரத்தை யுபேட்சித்து இந்திரியங்களைப் பதனம்பண்ணுகையினால் சரீரத்திலும் இந்தி

ரிய மானந்தமாகவேண்டும் வெட்டக்கொண்டுபோகிறபோது இந்திரியங்களை யுபேட்சித்தாகிலும் பிராணனைரட்சிக்கை யினால் இந்திரியங்களிலும் பிராணனைகளே யானந்தமாகவேண்டும் பிராணன்போகிறபோது இந்திரியப் பிராணனைகளெல்லாம் இனி நமக்குத்தகாதென்று நிச்சயித்துக் கைவிட்டுப் பிராணனைகளுண்டாகிறபோது கூடவுமுண்டாகாமல் பிராணனைகளழிக்கிறபோது கூடவுநசியாமல் அசங்கசைதன்னியமாயிருக்கிற தான்தானே ஒருக்காலுங் கைவிடப்படாத பரமானந்த சொரூபன்.

சு-சை. தகப்பனுக்குப்பின் அந்த வாதினத்திலிருந்து பொசிக்கமாட்டாதசாட்சியை யாத்மாவென்கிறது செவ்வையல்ல பாடும்பழியம் பிராணமூந் தன்னுதாக வொப்புக்கொண்டு பொசிக்கிற புத்திரனே யாத்மாவாகவேண்டும் இவனுக்கு மேற்பிரிய வஸ்துவுமில்லை யென்னில்.

உ-ம். முன்சொன்னவிவேகமெல்லாம் விட்டுப்போட்டுத் திரும்பியுமிப்படி சங்கித்தவனைச் சீடனே பிரிதிவாதியோ வென்றறிந்து இருவ்கைக்குமேற்ற வுத்தரஞ்சொல்லவேண்டும் அஃதெப்படியென்றால் சீடனுக்குச்சொல்லுகிற உத்தரம் பிள்ளைவருகிறதற்கு மூன்னும் பிள்ளையில்லையென்று துக்கம் கெர்ப்பத்தில் வந்தாலும் விழுந்துபோமென்று துக்கம் நிர்ணயப்பட்டாலும் பெற்றும் பிழைத்தாரல்லவோவென்று துக்கம் பிறந்தபோதும் சணங்கள் பறவை தோஷமுதலானதால் துக்கம் குமாரனால் லூட்டியினாலே துக்கம்பூண நூலிட்டால்படிக்கிறானே யில்லையோவென்று துக்கம் வித்துவானானால் வெட்பிக்கவேணுமென்று துக்கம் எவ்வனம்வந்தால் பரதாரகமனம் பண்ணுகிறானென்று துக்கம் குடும்பியானால் தரித்திரப்படுகிறானென்று துக்கம் அவன் தனவானானால் நாம் காணமற்செத்துப் போகிறோமேயென்று துக்கம் இப்படி புத்திரனால் முற்றுந்துக்கந்தானே பிரதிவாதிக்குச்சொல்லுகிறது சாமந்தான்.

சு-கை. இவர் சபித்தால் பிரதிவாதிக் கானியேதென்னில்.

உ-ம். பிரமவித்தாயிருக்கிறவன் பிரமசொரூப மானபடியினால் சீடனுக்கும் பிரதிவாதிக்கும் அவர் பண்ணினவனுக்கிரகமும் நிரகிரகமும் அந்தப்படியே பலிக்குமென்கிற யுத்தியினாலும் பிக்ஷவித்துக்களை விஷமசங்கை பண்ணினவன் ஆயிரஞ் சதுரியுகம் ரவுரவாதி நரகத்தில் கிடப்பனென்கிற புராணவசனத்தினாலும் பிரதிவாதிக்கு அனர்த்தம்வரும்.

சு-கை, இப்படி சித்தாந்தமேதாயிற்றென்னில்.

உ-ம், இப்போது சொன்னபடி பகுத்தறிந்து சாட்சியாயிருக்கிற தானே சகலத்திலும் பிரியவஸ்துவென்று வாத்மானந்தத்தில்எந்நேரமுங் களித்திருக்கிறவனுக்கே முத்தியென்றுசித்தாந்தம்.

சு-கை. இந்த ஆத்மாவுக்குச் சைதன்னியம்போல் சுகமுஞ் சுபாவமே யானால் அந்தக் கரணவிருத்திகளில் சித்துமாத்திரந் தோன்றி யானந்தந்தோன்றாம விருப்பானேனென்னில்.

உ-ம், ஊஷ்ணமும் பிரகாசமுஞ் சுபாவமா யிருக்கிற வக்கினியினுடைய ஊஷ்ணந் தண்ணீரிலும் பிரபைவிறகிலும் பிரிந்துகாண்கிறாப்போலவுந் தாமரைப்பூவுக்குச் சுபாவமாயிருக்கிற ரூபரசகெந்தங்கள் ஒவ்வொரு விந்திரியத்தில் ஒவ்வொரு குணமே தோற்றுகிறாப்போலவும் ஆத்மாவினுடைய சித்தா னந்தங்களும் ஒவ்வொரு விருத்தியில் ஒவ்வொரு சுபாவந்தோற்றும்.

சு-கை. எந்தவிருத்தியில் எந்தச்சுபாவந்தோற்றுமென்னில்.

உ-ம், நிர்மலமாக விருக்கிற சாத்வீகவிருத்தியில்ஆத்மாவினுடையசித்தும்ஆனந்தமுந்தோற்றும்மலினமாயிருக்கிறராசதவிருத்தியில் ஆனந்தந்தோற்றாது தாமதவிருத்தியில் சித்துந்தோற்றாது.

சு-கை, இப்படிக்கொத்த ஆத்மானந்தத்தை முந்தின வத்தியாயத்திற் சொன்ன யோகமன்றியில் இந்த வத்தியாயத்திற்சொன்னவிவேகத்தினால் தான் சாதிக்கப்படுமோ இதில் பிரமாணமேதென்னில்.

உ-ம். யோகத்தினால் யாதொருபிரம மடையப்பட்டது ஞானத்தினாலும் அதுவே யாத்மானந்தமாக வெளிப்பட்டது இதற்குப்பிரமாணஞ் சாங்கியத்தினால் அடையப்படுகிறபதம் யோகத்தினாலுமடையலாமென்கிற கீதாவசனமே பிரமாணம்.

சு-கை, சாங்கியம் யோகமென்று இருவகையாய்ப் பகுத்துச்சொல்லுவானேன் இரண்டுபேருக்கும்பலன் சரியாய் வருவானேனென்னில.

உ-ம், ஒருத்தருக்கு யோகமெளிதாயிருக்கும் ஒருத்தருக்கு ஞானநிச்சய மெளிதாய்வருமென்கிறதை மனதிலகண்டுகொண்டுகிருஷ்ணபகவான் இரண்டுவழியுஞ்சொன்னார் யோகி ஞானியென்கிற இருவகைக்குஞ் சின்மாத்திரமென்கிற ஞானமும்ராகத்துவேஷ மில்லாமையும் விடயத்தை யர்ச்சிக்கிறதும் பிரதியோகியா யிருக்கிறதே சாதிகளி லத்தியாசந்தவிருகிறதுஞ் சரியானபடியினால் மோட்சமே சரியாகவரும்.

சு-கை. தொய்தமெல்லாந் தோற்றுகையினால் அதெப்படி புத்தியில் படாமலிருக்குமென்னில்.

உ-ம். புத்திக்கேற்கத் தொய்தமேயில்லையென்று போகத்தக்கலையாக அத்துவிதானந்தமென்கிற மேலத்தியாயத்தில் வெளிபண்ணுகிறோம்.

எந்நேரமும் இந்தஆத்மானந்தத்தை யனுசந்தானம்பண்ணிக்கொண்டு பிரபஞ்சத்தைப்பாராமலிருக்கிறவன் காரியத்தினால் யோகியுமாவன் எளிதாகவு மோட்சங்கிடைக்கும்.

ஆத்மானந்தம - முற்றிற்று.

உ

மூன்றாவது

# அத்துவிதானந்தம்.

வித்தியாரண்ணியசுவாமிகள் எளிதில் அத்துவிதானந்தம் அருளி
ச்செய்கின்றார்.

ச-கை. முந்திச்சொல்லப்பட்ட யோகானந்தந்தான் ஆத்மானந்த மாக
ட்டும் தொய்தத்தோடே கூடியிருக்கிறவருக்குப் பிரம மெப்ப
டி சித்திக்குமென்னில்.

உ-ம். ஆகாசமுதலாகத் தன்னுடைய தேகபரியந்தமுள்ள செகத்தெ
ல்லாந் தனக்குபாதான காரணமாயிருக்கிற வானந்தத்திலதோ
ற்றியானந்தத்திலிருந்து ஆனந்தத்தில் லயமாகிறபடியினால் ம
ண்ணைத்தவிர கடமில்லையென்கிறாப்போல வானந்தத்தைத்த
விர வேறல்லவென்று வேதஞ்சொன்னபடியினால் அத்துவித
ம் பிரமமென்கிறது கூடும்.

ச-கை, குயவனாலுண்டாக்கப்பட்டகடங் குயவனாலுடைந்ததென்கிறா
ப்போல் செகத்திற்குப்பிரமம் நிமித்தகாரணமாகட்டுமென்னில.

உ-ம்.' மண்ணைவிட்டுக் கடங் காணாததுபோலப் பிரமத்தை விட்டுச்
செகத்திராதபடியினால்நிமித்தகாரண மென்னக்கூடாது உபா
தானகாரணமேயாகவேண்டும்.

ச-கை. காரணத்தில்நின்று செகத்துண்டானது ஆரம்பமாகவோபரி
ணாமமாகவோவிவர்த்தமாகவோவென்னில்.

உ-ம். பிதாவும் புத்திரரும் வேறுபட்டிருக்கக் கண்டாப்போல் கார
ணத்தைவிட்டுக் காரியம் வேறுபட்டுக் காணாதபடியினால் நிர
ங்கிவஸ்துவி லாரம்பபக்ஷங் கூடாது பால்தயிரானாப்போலக்
காரணந் தன்னுருக்கெட்டு வேற்றுருவாகாதபடியினால் பரிணா
மபக்ஷமுங் கூடாது பழுதை பாம்பாகத் தோற்றுகிறாப்போல
எங்குந் தன்னுருக்கெடாமல் வேற்றுருவைப்போலத் தோற்
றுகையினால் விவர்த்தபக்ஷமே சித்தாந்தம்.

ச-கை. நிரங்கிசவஸ்துவில் விவர்த்தந்தானுங் கூடாதென்னில்,

உ-ம், நிரங்கிசமாயிருக்கிற வாகாசத்தில் தலநீலாதிகளைக் கற்பிக்கிறா
ப்போல் நிரங்கிசமாயிருக்கிற பிரமத்திலுஞ் செகத்து விவர்
த்தமென்பது கூடும்.

ச-கை. அசங்கமாயிருக்கிறபிரமஞ் செகத்தை யெப்படி சிருஷ்டிக்கு
மென்னில.

உ-ம், இந்திரஜாலக்காரனிடத்தி லிருக்கிறமாயை யிந்திரஜாலத்தைக்
கற்பிக்கிறாப்போலப் பிரமத்தினிடத்தில ஒரு மாயாசத்தியுண்
டு அதுவே செகத்தைக் கற்பிக்கின்றது.

ச-கை, மாயாசத்தி யொன்றுண்டென்கிறதால் அத்துவிதங்கெட்டுதென்னில.

உ-ம். அந்தச்சத்தியும் பிரமத்தைத்தவிர வேறல்ல ஆகையினால் அத்துவிதத்திற் கானியில்லை.

ச-கை. அப்படியானா லந்தச்சத்தியுமில்லையென்னில்.

உ-ம். காரியங்கண்டபடியினா லந்தச்சத்தியுண்டு.

ச-கை. இந்த அசங்கதம் எங்கேயாகிலுங் கண்டதுண்டோவெனில்.

உ-ம். அக்கினியிலிருக்கிறதாக சத்தி அக்கினிதானாகவும் மணிமந்திரங்களினால் அக்கினிக்கன்னியமாகவுங் காணவில்லையோ.

ச-கை. இப்படி பிரமமுமல்ல பிரமத்தைத் தவிரவுமல்லவென்கிற மாயாசத்தியுண் டென்கிறதற்குப் பிரமாணமேதென்னில்.

உ-ம். அனந்தசத்தி பிரமத்துக்குண்டென்கிறவேதமும் வாசிஷ்டமும் பிரமாணம்.

ச-கை, வாசிஷ்டத்தி லெப்படிசொல்லியிருக்கின்றதென்னில்.

உ-ம், வாரீர் ரகுநாதரே பிரத்தினிடத்தில் அனந்தசத்தியுண்டு அந்த வனந்தசத்தியினாலே பிரமந்தானே பிரபஞ்சமாகத்தோற்றுகின்றது சரீரங்களில் சிற்சத்தியும் வாயுவில் சலனசத்தியும் கலலில் கடினசத்தியும் ஜலத்தில் சீதசத்தியும் அக்கினியில் உஷ்ணசத்தியும் இதுமுதலான வனந்தசத்தியும் பிரமத்தினிடத்தில் காரியத்தினால் காண்பிக்கிறதென்றுஞ் சிருஷ்டிக்குமுன் இந்தச்சத்தி முட்டையில் பாம்பிருக்கிறாப்போலவுஞ் சூட்சமாகிய விரையில் மரமிருக்கிறாப்போலவுங் காண்பியாமல் பிரமத்திலிருந்ததென்றும் தேசகால விசித்திரத்தினால் பூமியில் பயிர்கள் முளைக்கிறாப்போலப் பிரமத்திற்சத்தியும் ஒவ்வொருக்கால செகத்தென்கிற காரியரூபமாய் விளங்குமென்றும் ஆதியில் மனதுண்டாச்சுது பின்பு வெந்தமுண்டாச்சுது பின்பு ஆகாசசிருஷ்டி யுண்டாச்சுதென்கிற கிரமமெல்லாம் பாலகாக்ஞானம்போல் மூடனுக்குச் சொன்னதேயல்லாம லுண்மையல்லவென்றுஞ் சொன்னார் பின்பு பாலகாக்ஞான மாவதேதென்று கேட்ட ராமனுக்கு வசிஷ்டர்சொன்னது அசத்தென்கிறபட்டணத்தில் மூன்று ராஜகுமாரருண்டு இரண்டுபேர் இனிமேற் பிறக்கப்போகிறார்கள் ஒருத்தர் இனிமேல் கெர்ப்பத்தில்வரப்போகிறார் புண்ணியவான்களாயிருக்கிற இந்த மூன்றுராஜாக்களும் வேட்டைக்குப் போனவிடத்தில் ஆகாசத்திலே நல்லதோப்பிருக்கிறதென்று ஊமைசொல்லக் கேட்டு ஆகாசத்தில்போய்த் தோப்பைக் கண்டார்கள் அவிடத்தில் முயற்கொம்பைவெட்டிச் சிங்காதனமாக்கிக்கொண்டு இனிமேல் வரப்போகிற பட்டினத்தில் இன்றைக்குப் பிரவேசித்தார்களென்று முலைப்பாலதாதிசொன்னவசனத்தைக்கேட்டுவிசாரமற்றகுழந்தையுமெய்யென்றேநம்பினன் இந்தச்சமுசாரகற்பனையும்விசாரமில்லாத

மூடனுக் குண்மைபோல் சொல்லியிருக்கிறதென்று இதுமுகலான உபாக்கியானத்தோடே மாயாசத்தியினுடைய விஸ்தாரத்தை வசிஷ்டர் ரகுநாதருக்குச்சொன்னார் அந்த மாயாசத்தியைத்தானே நாமுநிரூபிக்கிறோம்.

ச-கை. மாயாசத்திக்கு லட்சணமேதென்னில்.

உ-ம், காரியத்திற்கும் ஆதாரத்திற்கும் விலட்சணமாயிருக்கும்,

ச-கை. காரியமென்பதேது ஆதாரமென்பதேது சத்தியினு விதற்குவிலட்சணமென்பதெப்படி இம்மூன்றையும் ஒரு திட்டாந்தத்தில் பகுத்துக்காட்டுமென்னில.

உ-ம் வாய்குவிந்து பண்டியுண்டையாயிருக்கிற கடமே காரியமென்பது ஐந்துகுணமுடையமண் தானே யாதாரமென்பது கடசத்தி இந்த விரண்டு லட்சணமு மில்லாமலிருக்கும்.

ச-கை இந்த விரண்டுலட்சணமு மில்லாதசத்தியை யெப்படி யிருக்குமென் றறிகிறதென்னில.

உ-ம், அநிர்வசனமென்றறி.

ச-கை. இந்தக்கடசத்தியின்னபடியென்று கூறப்படாதபடியினுல அதுவே யிலலையென்னில்.

உ-ம். காரியோற்பத்திக்குமுன் இந்தச்சத்தி தனக்காதாரமாயிருக்கிற மண்ணுக்குள் ளொளித்திருந்து நிமித்தகாரணமாயிருக்கிற குலாலாதிகள் சகாயமாய்வந்து கூடினவுடனே விகாரமாயிருக்கிற கடவடிவையடைந்து தனக்காதாரமாயிருக்கிற மண்ணுக்கு மண்ணென்கிறபேரை மாற்றிக் கடமென்கிறதினுல் சததியிலலையென்னக்கூடாது,

ச-கை. மண்ணிற் சத்திகாரியமாகிறதற்குக் குலாலன் வேண்டினுப்போல் பிரமத்திற் சத்தி செகத்தாகிறதற்கு நிமித்தகாரண மாரென்னில்.

உ-ம். கடசத்தியுடைத்தான மண் செடமானபடியினுல சைதன்னியனுயிருக்கிற குலாலன்வேண்டிற்று மாயாசததி யுடைத்தான பிரமஞ்சு யஞ்சை தன்னியமானபடியினுல் வேறே நிமிததகாரணந்தேவையிலலை.

ச-கை. மண்ணென்றுஞ் சத்தியென்றும் அதின்விகாரங் கடமென்றும் லோகததி லொருவருஞ்சொல்லக்காணேம் எல்லாவற்றையுங் கூட்டிக் கடமென்றேசொல்லுகிறுர்கள் அதில் காரணமேதென்னில.

உ-ம். விசாரியாத வஞ்ஞானமேகாரணம்.

ச-கை விசாரமாவதேது விசாரித்தவன் எதைக் கடமென்பனென்னில்.

உ-ம். குலாலவியாபாரத்திற்குமுன் மண்ணென்கிறபேரே வழங்குகிறபடியினுல் கடசத்தத்திற்கு மண்ணர்த்தமல்ல குலாலவியாபாரத்திற்குப் பின்கடமென்றுவழங்கின பாண்டமும் மண்ணை

த்தவிர இல்லாதபடியினாலே கடசத்தத்திற்கர்த்தம் மண்ணைத்த விரவு மல்லவென்று பார்க்கிறதேவிசாரம் இப்படி விசாரித்த வன் கடசத்தியைப்போலே யனிர்வசமான படியினால் அந்தச் சத்தியின்காரியமென்றறிவன்.

ச-கை. அனிர்வசனத்தைச் சத்தியென்று சொல்லவேண்டுமேயல்லா மல் கடமென்று நிருவகிக்கிறதெப்படியென்னில்.

உ-ம். இந்திரஜாலக்காரரிடத்திற் சத்திகாண்பியாதபோது மாயையெ ன்றுங் காண்பிக்கிறபோது கந்தர்வசேனையென்றுஞ் சொல்ல ப்படுகிறதுபோல் மண்ணிற்சத்தியுங் காரியமாய்க்காண்பியாத போது சத்தியென்றுங் காண்பித்தபோது கடமென்றுஞ் சொ ல்லப்படும்,

ச-கை. இந்தவுத்திக்குப் பிரமாணமுண்டோவென்னில.

உ-ம். இப்படி மாயாமயமா யிருக்கிறதென்று வாக்கினால் சொல்லுகி றது மாத்திரமேயல்லாமல் அர்த்தமில்லையென்றும் நிருவிகா ரமாயிருக்கிற மண்மாத்திரமே பொருளென்றும் வேதஞ்சொ ல்லுகின்றது

ச-கை. ஒருகாலத்தில சத்தியென்றும் ஒருகாலத்தில் காரியமென்றுங் காண்பிக்கிற கடஞ் சத்தியமென்று அங்கிகரியாவிட்டால் விவ காரமெப்படி க்கூடுமென்னில்,

உ-ம். இருவகைக்கு மாதாரமாயிருக்கிற மண்ணை விடாதிருந்தபடியி னாலே வியாபாரங்கூடும் மண்ணைவிடுத்துப்பார்த்தால்வாக்குமா த்திரமேயல்லாமல இரண்டுகாலத்திலு மொருபடித்தாயிருக் கிற மண்போல் பொருளாகாது.

ச-கை. விகாரமென்றுங் கடமென்றுஞ்சொல்லப்பட்டபொருளே பொ ய்யானால் மண்ணென்றறிந்தவுடன் ஏன்காணாமற் போகவில்லை யென்னில்.

உ-ம். விகாரம பொருளுமல்ல வுண்மையுமல்லவென்று காணப்பட் டதே தோற்றமறபோனது.

ச-கை. காரியம் பொய்யென் றறிந்ததுகொண்டு பிரயோசனமேது கா ணாமற்போக வேண்டாமோவென்னில.

உ-ம். புருஷன் தண்ணீர்க்குள்ளே தலைகிழாகத் தோற்றினாலும் அவ னில்லை பொய்யென் றறிகிறதுபோலக் காரியந் தோற்றினாலும் பொய்யென்றறிந்ததே யில்லையென்று போனது காணாமற்போ கிறதல்ல அத்துவித வாதிகளுக்கு இப்படிக்கொத்த அறிவுதா னே புருஷார்த்தம்.

ச-கை. இந்தப்படிக்கு செகத்தையும் பொய்யென்று ஊன்றிப்பார்க்க எங்கேயாகிலுஞ் சொல்லியிருக்கின்றதோ வெனனில.

உ-ம். மண் பொன் இரும்பென்று மூன்றுதிட்டாந்தமுங் காரியமெ ல்லாம் பொய்யென்று பகுத்தறிகிறதுஞ் சாமவேதத்திற் சொ ல்லியிருக்கிறது.

ச-கை. சடம் பூஷணம் கத்தியென்று பரிணமித்தது விவர்த்தத்திற்கெப்படி திட்டாந்தமாகுமென்னில.

உ-ம். பால் தயிரானதுபோல் பரிணமிக்கப் பட்டுப்போகாமல் மண்முதலானது திரும்பியழுந்தால காரணரூபமாயிருக்கையினால விவர்த்தத்திற்குத் திட்டாந்தமாய்ச் சொல்லலாம்.

ச-கை. இந்தப்படிக்குச் செகத்தையேதாகக் காணவேண்டுமென்னில.

உ-ம். காரியமெத்லாங் காரணமாகவே காணவேண்டும்.

ச-கை. சத்தியத்தை யறிகிறவிடத்தில் அசத்திய மென்கிறவறிவு எப்படி வருமென்னில்.

உ-ம். மண்ணென் றறிகிறவிடத்தில விகாரம் அசத்தியமென்றறிகிறுப்போல.

ச-கை மண்ணென் றெதற்காயறியவேண்டும் விகாரத்தை யேன்மறக்கவேண்டுமென்னில்.

உ-ம். உள்ளதை யுள்ளபடி பார்க்கிறதே புருஷார்த்தம் இல்லாததை யுண்டென்று பார்க்கிறதே யனர்த்தம்.

ச-கை. ஆனால் சகல பிரபஞ்சத்தையுஞ் சோதித்துப் பார்க்கவேண்டுமெனனில்.

உ-ம். ஒருசடத்தை மண்ணென் றறிந்துகொண்டால் உலகத்திலுண்டான பாண்டமெல்லாம மண்ணென்று வகுப்பற்றுப்போல ஒருவிடயத்தி லான்றிப்பார்த்து பிரமமென்றறிந்தால சகலபிரபஞ்சமும் பிரமமென்று வகுப்பறும்.

ச-கை பிரமத்திற்கு லட்சணமேது ஜகத்திற்குலட்சணமேதென்னில.

உ-ம், சத்துசித்து ஆனந்தமூன்றும் பிரமலட்சணம் நாமரூப மிரண்டுஞ் செகலட்சணம்,

ச-கை, கடதிட்டாந்தத்தைப்போல் இவிடத்திலுஞ் சத்தியின்னது சத்திக்காதாரமின்னது சதியின் காரியமானவிகாரமின்னதென்று பகுத்துக் காட்டுமென்னில,

உ-ம். இன்னபடியென்று நிர்ணயிக்கப்படாத மாயைதானே சத்திபிரமந்தானே சத்திக்காதாரம் நிருவிகாரமாயிருக்கிற பிரமத்தினிடத்தில கற்பிக்கப்பட்ட நாமரூபந்தானே சத்தியின் காரியமானவிகாரம்.

ச-கை. இம்மாயை யெந்தவடைவில் விகாரத்தை யடைந்ததென்னில்,

உ-ம், சிருஷ்டிக்குமுன் இன்னதென்று காணப்படாமல் அவ்வியாகிருதமாயிருந்த இத்தமாயை முந்த முந்த வாகாசமென்கிறவிகாரத்தையடைந்தது,

ச-கை, சமவிகாரத்திற்கு மண்ணே சுவரூபமாய்க்காணப்பட்டாப்போல் ஆகாசவிகாரத்திற்கும் பிரமமேசொரூபமென்கிறதைப்பகுத்துக்காட்டவேண்டுமென்னில்,

உ-ம், அஸ்திபாதி பிரியத்தைத்தவிர அவகாசமென்கிறரூபத்திற்கும் ஆகாசமென்கிற நாமத்திற்குஞ் சொரூப மில்லாதபடியினால நாமரூபஞ் சிருஷ்டியிலுண்டாய்ப் பிரளயத்தி லழிகிறதுகொ

ண்டு இந்தவிரண்டு மித்தையென்றும் மண்போலச் சச்சிதான
ந்தமெப்போதும் நிலைபெற்றிருக்கையினால் பிரமஞ்சத்தியமெ
ன்றும்பகுத்தறி,

ச-கை, ஆகாசத்திற்குப் பின்தினவிகாரங்களேது அதில் சச்சிதானந்தத்
தைக் காண்பதெப்படியென்னில்,

உ-ம், வாயுவு அக்கினி யப்பு பிருதிவியோஷதிகள் அன்னம் புருடன்
தேகாதிகளெல்லாம் விகாரமென்பதெப்படி இப்படி வெகுவி
தமாயிருக்கப்பட்ட நாமரூபங்களெல்லாஞ் சச்சிதானந்தத்தை
விட்டுக் காணாதபடியினால இத்தனையுஞ் சச்சிதானந்த மென்கி
றதிலே சந்தேகமில்லை,

ச-கை, சச்சிதானந்தத்தை விடாதிருக்கிறபடியினால் நாமரூபமு நித்தி
யமாகட்டுமென்னில்,

உ-ம், உற்றுப்பார்த்தால் இல்லாதநாமரூபங்கள் சத்தியமாயிராமல்
பிரமத்தினிடத்தில்தோற்றி யழிந்துபோகிறதை விவேகம்பண்
ணியனுபவித்துக்கொள்,

ச-கை, எப்படி விவேகம்பண்ணிப்பார்க்கிறதென்னில்,

உ-ம், அலைநுரைகள் சமுத்திரத்திலுண்டாய்ச் சமுத்திரத்திலிருந்து
சமுத்திரத்தில் லயமாகுவதுபோல,

ச-கை, இப்படிபார்த்தாலு நாமரூபமிற்கிறது அதுபோகிறதற்கு உபா
யமே தென்னில்,

உ-ம், வழியிற்றுரும்புபோல் நாமரூபத்தைக் கூர்மையாய்ப்பாராமல்
அவமதிப்பு பண்ணிப்போட்டுப் பார்க்குந்திசையெல்லாஞ்சச்
சிதானந்தமாய் ஆதரவோடேபார்த்து இந்தப்படி நெடுங்கால
நிரந்தரமாதரவோடேகூட அறிவிக்கிறபோது நாமரூபம் இன்
னவிடமென்று காணாமற்போய் அத்துவிதநிலை திடப்பட்டுச்
சீவன்முத்தனாவன்,

ச-கை, நாமரூபம் பொய்யென்கிற தெதினால் திடப்படுமென்னில்,

உ-ம், நாமரூபத்தைக்கண்டவுடனே மண்ணிற் சத்தியனேகம் பொ
ய்களைச் சிருஷ்டித்தாப்போலவும் நித்திராசத்தியானதுகூடாத
சொற்பனங்களைச் சிருஷ்டித்தாப்போலவும் பிரமத்தினிடத்
தில் மாயை சிருஷ்டித்தது பொய்யல்லவோ இத்தனையுமென்
று எங்கோமும்பார்த்து அதிசயப்பட்டால் நாமரூபம் பொய்
யென்றுதிடப்படும்,

ச-கை, நித்திரா யெப்படிகூடாத சொற்பனத்தைச் சிருஷ்டிக்கின்ற
தென்னில்.

உ-ம், சொற்பனத்திலே தான் ஆகாசத்தில்பறக்கவுந் தன் தலையைத்
தூக்கிப்போகவும் ஒரு நாழிகைக்குள் வனேகம் வருஷம்வ
ந்துபோகவும் செத்துப்போனபுத்திராதிகள் திரும்பி வந்திருக்
கவுங் காணகிறதெல்லாங் கூடாதகாரியமல்லவோ,

ச-கை, இதினால் பிரமவிசாரத்திலேதாச்சுதென்னில்,

உ-ம், நித்திரைக்கே சத்தியுண்டானால் மாயாசத்தியானது நிர்விகாரமாயிருக்கிற பிரமத்தினிடத்தில் செடங்கள் சிதாபாசாளென்கிற விகாரங்களைக் கற்பிக்கிறது அதிசயமல்ல,

ச-ங்கை, இந்தவிகாரமும் பிரமமுங் கலந்துதோற்றுகிறவிடத்தில்ஒன்று சத்தியமும் ஒன்று மித்தையுமாகப் பார்க்கிறதெப்படியெனில்

உ-ம், எங்குஞ்சரியாயிருக்கிறபுடவை சத்தியமென்றும் அதில் தனித்தனியே காண்பிக்கிற சித்திர மித்தையென்றும் அறிகிறதுப்போல எங்குஞ் சரியாகத்தோற்றுகிற சச்சிதானந்தத்தைச்சத்தியமென்றும் அதில் தனித்தனியேதோற்றுகிற நாமரூபத்தை மித்தையென்றுங்கண்டு உபேட்சிக்கவேண்டும்,

ச-ங்கை, தொழிலுடன்பட்டவனே தானாகத்தோற்றுகையினால் தன்னையசங்கனென்றறிகிறதெப்படியென்னில்,

உ-ம், கிணற்றிலே தலைகீழாய்த்தோற்றுகிலும் அதைத்தானல்லவென்றுதள்ளிக் கரைமேலிருக்கிற தன்னைத்தானென்று சந்தேகமறப்பார்க்கிறதுப்போல் மூன்றவத்தையிலுங் கர்த்தாவாயோடித்திரிகிற தன்னைத்தானல்லவென் றுபேட்சித்து இதற்குச்சாட்சியாயிருக்கிற சித்தைத்தானே தானென்று சந்தேகமறக்கண்டிருக்கவேண்டும்,

ச-ங்கை, மனதிலாவேசமாய் மூண்டிருக்கிற பிரபஞ்சகாரியத்தையுபேட்சைபண்ணுகிறதெப்படியென்னில்,

உ-ம், க்ஷணத்துக்கொருக்கால் வெவ்வேறாய்வருகிற மனோராச்சியத்தைச் சகலரும் அம்மட்டிலே யுபேட்சிக்கிறதுப்போல வாலிபத்தில் எவ்வளவம்வராமல் எவ்வனத்தில் வார்த்திகம்வேண்டுமென்றாலும்வராமல நேற்றுச்செத்தவனை யின்றைக்குவாவென்றாலும்வராமல் மனோராச்சியம்போலெங்ஙனே கண்டது அங்ஙனே யழிந்துபோகிறபடியினால் நாமரூபந்தோற்றினாலும் பொய்யென்றே யுபேட்சிக்கவேண்டும்,

ச-ங்கை, இப்படிசர்வாத்மனாய் பிரபஞ்சத்தையுபேட்சிக்கச்சொன்னால் சரீரநிருவாக மெப்படிநடக்குமென்னில்,

உ-ம், கூத்தாடிபோலே வாசனைதானே நிருவகிக்கும்,

ச-ங்கை, ஒருக்கால் பாலனென்றும் கிழவனென்றும் நானாவிதமாக வழங்குகிறதே தானாகக்காண்பிக்கிறபடியினால் தான ஏகரீதியாயிருக்கிற சைதன்னியமென்கிறது மனதிலெப்படி திடப்படுமென்னில,

உ-ம், வெவ்வேறே ஜலப்பிரவாகமெடுத்தாலும்நடுவிலிருக்கிறபெருங்கல்லு அசையாததுபோல் நாமரூபங்கள் வெவ்வேறே பரிபாகப்பட்டாலும் ஏகரீதியாயிருக்கிற சின்மாத்திரமே நாமென்றறியவேண்டும்

ச-ங்கை, இந்தப்பாவனை முதிர்ந்தால் நிலையெப்படி யிருக்குமென்னில்,

உ-ம், கண்ணாடியில் தோற்றின பட்டணம்போல் சச்சிதானந்தத்தில செகத்துகாணும்.

ச-கை, நாமரூபமல்லவோ முந்தித்தோற்றுகிறது அதை யுபேட்சிக்கி
றதெப்படியென்னில்.

உ-ம், கண்ணாடியைக்காணாமல் பிரதிவிம்பந் தோன்றாததுபோலச் சச்சிதானந்தந் தோற்றாமல் பிரதிவிம்பந் தோற்ற மாட்டாது ஆகையினால் முந்தித்தோற்றுகிற சச்சிதானந்தத்தைப்பார்த்து மேல் நாமரூபத்தில் புத்தியைநாட்டாமல் நிறுத்தினால் துவை பட்டது துவிதமாக அத்துவிதப் பிரமநிலைதானுமிஞ்சும் இந்தநிலையில்தானே யெல்லாரும் நின்று இளைப்பாறினார்கள்,

இப்படி அத்துவிதானந்தவிவேகம்பண்ணினவன் பிரமஞானியாவன்.

அத்துவிதானந்த-முற்றும்.

நான்காவது

# வித்தியானந்தம்.

வித்தியாரண்ணிய சுவாமிகள் யோகானந்தத்தினாலும் ஆத்மானந்தத்தினாலும் அத்துவிதானந்தத்தினாலும் பிரமானந்தம்பெற்றவனுடைய வித்தியானந்தத்தை நிரூபித்தருளுகின்றார்.

ச-ஙை, வித்தியானந்த மாவதேது அது எத்தனை விதமாயிருக்குமென்னில்.

உ-ம், விஷையானந்தம்போலே வித்தியானந்தம் அந்தக்கரண விருத்திரூபமாயிருக்கும் அது துக்கநிவிர்த்தியென்றுங் காமியலாபமென்றும் கிருதகிருத்தியமென்றும் அடையவேண்டியதெல்லாமடைந்த சந்தோஷமென்று நாலுவிதமாயிருக்கும்,

ச-கை, துக்கமெத்தனைவிதம் அது ஞானத்தினாலெப்படிபோயிற்றுகாமியலாபம் எத்தனைவிதம் ஞானத்தினாலதுஎப்படி யடையப்பட்டது கிருதகிருத்திய மெத்தனைவிதம் அதுஞானம் வந்துகொண்டு எப்படி செய்து முடிந்ததாயிற்று அடையப்போகிற புருஷார்த்தமேது அது ஞானத்தினால் எப்படி யடையப்பட்டதென்னில்,

உ-ம், இகலோக துக்கமென்றும் பரலோக துக்கமென்றும் இரண்டுவிதமாயிருக்கும் ஆத்மாவே நாமென்றறிந்தால் யோசிக்கிறவனில்லாமற் போகிறபடியினாலும் நாமரூபம்பொய்யென்றறிந்தால போக்கியமில்லாதபடியினாலும் யோக போக்கியங்களைக் குறித்துவருகிற இகலோக துக்கம்போயிற்று தாமரையிலையில் தண்ணீரொட்டாது அதுபோல ஞானியை ஆகாமியகருமம் பற்றாதபடியினாலும் அக்கினியிலிட்ட பஞ்சுபோல் ஞானிக்குச் சஞ்சிதகர்மம் வெந்துபோனபடியினாலும் புண்ணியபாவ சிந்தனையாய் வருகிற பரலோக துக்கம் போயிற்றென்றுந் துக்கநிவிர்த்தி சொல்லப்பட்டது காமியம் பதினொருவிதமுண்டு அதெப்படியென்னில் அழகிளமையுடையவனாய் அரோகதிடகாத்திரமாய்ப் பஞ்சாசதகோடி பூமண்டலமும் ஒருகுடைக்கீழரசாண்டு போசிக்கிறது ஒருமனுஷியானந்தம் இந்தக்கிரமத்தில் புண்ணிய பரிபாகத்தி

னுல் நூறத்தனையதிகம் மனுஷ கந்தர்வானந்தம் அதில் நூறத்தனையதி கம தேவகந்தர்வனுனந்தம் அதில நூறத்தனையதிகம் பிதிர்த்தேவரான ந்தம் அதில் நூறுகொண்டது கற்பாதியில் தேவனுய்ப்பிறந்த ஒருஅஜு நிதேவானந்தம் அதில் நூறுகொண்டது கற்பத்தில அஸ்வமேதமுத லானதுகள்பண்ணி புண்ணிதபதத்தை யடைந்த கர்மதேவனுனந்தம்.

அதில் நூறுகொண்டது இந்திரானந்தம் அதில் நூறுகொண்டது பிரசாபதியானந்தம் அதில் நூறுகொண்டது விராட்புருடானந்தம் அதி ல் நூறுகொண்டது சூத்திராத்மாவானந்தம் அதில் நூறுகொண்டது அந்தரியாமியானந்தம் இந்தப்படி வாக்குக்குமனதிற்குமெட்டினஆனந் தம பதிஞென்று சொலலப்பட்டது வாக்குக்கு மனதிற்கு மெட்டப்ப டாத ஆத்மானந்தத்தை யடைந்த ஞானிக்கு ராகத்து வேஷாதிகளோ டே கூடியிருக்கிற இந்தப் பதிஞெரு வானந்தத்தையும் நாய் கக்கின சோறுபோல்தோஷங்கண்டுவெறுத்தபடியினுலும் இத்தனையும்இந்திர ஜாலமாய்க்காண்கையினுலும் இத்தனைமெய்யாயிருந்து பொசிக்கிறதும் நாமொருவன்ருனேயென்கிற அனுசந்தானத்தினுலும அவர்களைப்போ லகிரமமன்றியில்ஞானிக்குச்சகலபோகமுமொருமிக்கவந்தது இகலோ கத்தைக் குறித்தும பரலோகத்தைக் குறித்தும் மோட்சத்தைக் குறி த்தும் கிருத்திய மூன்றுவித முண்டென்றும் அதெல்லாம் ஞானிக்கு த்தீர்ந்தமுற்யாகப்பண்ணி முடிந்ததென்றும் அடையப்போகிறபுருஷா ர்த்தம் பிரமமென்றும் அது அபரோட்சஞானத்தினுலடைந்துவகுப்ப ற்றதென்றும் இப்படி யிந்தநான்குவகையுந் திர்ப்திதீபிகையிலவெட்ட வெளியாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது அதையும் கண்டு கொள்ளவே ண்டும்.

இப்படி வித்தியானந்தத்தை இந்தநிலே வருமளவும் அப்பியாசம் பண்ணிவருகிறவன் பிரமசொரூபமாவன்.

வித்தியானந்தம்-முற்றும்.

---

ஐந்தாவது

# விஷயானந்தம்.

வித்தியாரணிய சுவாமிகள் பிரமானந்தத்தி லேகதேசமாய்பிர மானந்தத்திற்கு வழியாயிருக்கிற விஷயானந்தத்தை நிரூபித் தருளு கின்ருா.

ச-ங்கை, விஷயானந்தமாவதேதது அது எந்தவிதத்தில்காணலாமெனில்?

உ-ம், விருத்தியில் பிரதிவிம்பித்தவானந்தம் விஷயானந்தம் அதைவி வேகத்தினுல காணலாம்,

ச-ங்கை, எல்லாவிருத்தியிலும் ஆனந்தமேன் பிரதிவிம்பிக்க இல்லையெ ன்னில்,

உ-ம், ஜலத்தில் பிரதிவிம்பித்த சந்திரன் குழம்பின சலத்தில் சாமா ன்யமாய்த் தோற்றுகிறதுபோலவும் நிர்மலஜலத்தில்தெளிவா

ய்த் தோற்றுகிறுப்போலவுஞ்சிலவிருத்திகளில் ஆனந்தந்தோ
ற்றும் சிலவிருத்திகளில் தோற்றுது,

ச-கை. ஆனலந்தக் கரணவிருத்தி யெத்தனைவிதம் அந்த விருத்திக்கு
லட்சண மேதென்னில்,

உ-ம், அந்தக்கரணத்திற்குச் சாந்த விருத்தியென்றுங் கோரவிருத்தி
யென்றும் மூடவிருத்தியென்றும் மூன்றுவிதமா யிருக்கும் அ
தில் வயிராக்கியம் பொறுமை யுதாரகுண முதலானது சாந்த
விருத்தி காமக்குரோதலோப முதலானது கோரவிருத்தி மய
க்கங்கலக்கம் பயமுதலானது மூடவிருத்தி,

ச-கை, பிரமம் இந்தவிருத்தியில் எப்படிபிரதிவிம்பிக்குமென்னில்,

உ-ம், கோரவிருத்தி மூடவிருத்தி இரண்டுங் கலங்கின விருத்தியான
படியினுல் சித்துமாத்திரம் பிரதிவிம்பிக்குமே யல்லாமல் ஆன
ந்தம் பிரதிவிம்பிக்கமாட்டாது சாந்தவிருத்தி நிர்மலமானபடி
யினுல் அதில் சித்தோடேகூடி ஆனந்தமும் பிரதிவிம்பிக்கும்,

ச-கை, இதற்குப் பிரமாண மேதென்னில்,

உ-ம், கோர மூடவிருத்தியில் ஆனந்த மனுபவங் காணப் படவில்லை
சாந்தவிருத்தியில் ஒரு சுகாதிசயங்காணப்படுகிறது,

ச-கை, கோராதிவிருத்தியில சுகானுபவ மில்லையென்கிற தெப்படியெ
ன்னில்,

உ-ம், விஷயத்தில் ஆசை மூளுகிற போதே இது நமக்குக் கிடைக்கு
மோ கிடையாதோ வென்கிறதுக்கங் கூட வருகையினுலும் கி
டையாமற்போனுல் துக்க மதிகமான படியினுலுங் கெடுத்தவ
ன்பேரில் வைரம்வளர்கையினுலும் அவனை நிக்கிரகிக்கக்கூடா
விட்டால் அழுகையாய் முடிகையினுலும் கோராதி விருத்தியி
னுல் துக்கமேயல்லாமல் சுகம்லேசமுமில்லை,

ச-கை, சாந்தவிருத்தியினுல் சுகாதிசய மெப்படியென்னில,

உ-ம், காமியம் லபித்தவுடனே சாந்தமான விருத்தியில் சுகம்பரிண
மிக்கிறது போகத்திலும் விருத்திசாந்தமானபடியினுல் சுகாதி
சயந் தோற்றுகிறது இப்படி விஷயங்கிடைத்ததற்குத் தக்கின
வானந்தம் பிரதி விம்பிக்கிறது விருத்தியில் ஆனந்தந் தோற்று
கிறது ஆகையினுல் சாந்தவிருத்தி யுள்ளவிடமெல்லாம் ஆனந்
தந் தோற்றுகிறதிலே சந்தேகந்தேவையில்லை,

ச-கை, இப்படி பிரதிவிம்பிக்கிற பிரமத்திற்குச் சுபாவம் எத்தனைவித
ம் பிரமத்தினிடத்திலிருக்கிறசத்திக்குச் சுபாவமெத்தனைவிதம்
எந்தவுபாதியில் எந்தச்சுபாவம் காண்பிக்குமென்னில்,

உ-ம், சத்தென்றுஞ் சித்தென்றும் ஆனந்தமென்றும் பிரமத்திற்கு
மூன்று சுபாவமுண்டு மண் கல்லு முதலான செடங்களில் சத்
துமாத்திரந் தோற்றுமேயல்லாமல மற்றவிரண்டுந்தோற்றுது

கோரவிருத்தி மூடவிருத்திகளில் சத்துஞ் சித்துந் தோற்றும் ஆனந்தந்தோற்றாது சாந்தவிருத்தியில் சச்சிதானந்த மூன்றுந் தோற்றும்,

ச-கை, மாயைக்கு எத்தனை சுபாவமுண்டு-எந்தச்சுபாவ மெதிலேதோற்றுமென்னில்,

உ-ம், அசத்தென்றுஞ் செடமென்றுந் துக்கமென்றும் மாயாசொரூபம் மூன்றுவிதமாயிருக்கும் அசத்து மனுஷக்கொம்பு முயற கொம்புபோலே காண்பிக்கும் மண் கல்லு முதலானதுகளில் செடங்காண்பிக்கும் கோரமூடவிருத்தியில் துக்கங்காண்பிக்கும் சாந்தவிருத்தியில் செட்டும் போதமுமிருக்கிறபடியினால் மாயை யானந்தத்தோடே கலந்துகாண்பிக்கும்,

ச-கை, இப்படி தோற்றுகிற மாயாசொரூபங்களை யானந்தமாகக்காண்கிற தெப்படியென்னில்,

உ-ம், அசத்தை முயற்கொம்பு மனுஷக்கொம்புபோ லுபேட்சிக்கச் செடங்களை நாமரூபத்தைவிட்டுச் சத்துமாத்திரமாய்ப்பார்க்கக்கோரமூடவிருத்திகளைத் துக்கத்தைத்தள்ளி சததுஞ்சித்துமாய்ப்பார்க்கச் சாந்தவிருத்திகளைச்சச்சிதானந்தமாய்க்காண்க இப்படி விஷயானந்தத்தின்வழியே மூடனும் பிரமானந்தத்தையடையலாம்,

ச-கை, மாயாரூபத்தை யிப்படிபகுத்துத் தியானித்ததுகொண்டு பிரமானந்த மெப்படிகிடைக்குமென்னில்,

உ-ம், இந்தத்தியானத்தினால் சித்தமே காக்கிரமானவுடனே ஆனந்தவித்தைதிடப்படும் இந்த ஆனந்தவித்தையில் பேதமாயிருக்கிறவுபாதிகளெல்லாந் தடைபட்டபடியினால் சச்சிதானந்தமேகாகாரமாகத்தோற்றும்,

ச-கை, பெந்ததுக்கவுபாதிகளேது அது எதினால் தடைபடும் பிரமம் நிருபாதியாய்த்தோன்றுகிற தெதினாலென்னில்,

உ-ம், சாந்தவிருத்தி கோரமூடவிருத்தி சிலமுதலான செடங்களிறுகளெல்லாம் பெந்ததுக்கவுபாதி - யோகத்தினாலும் விவேகத்தினாலும் இந்த வுபாதிகளெல்லாந்தள்ளப்படும் - பின்னர் திரிபுடியில்லாதபடியினால் நிருபாதியாய்ச் சுயம்பிரகாசமாயிருக்கிறபிரமத்துவம் அகண்டானந்தவடிவாய்த் தானாகவேவிளங்கும்,

இப்படி பிரமானந்தத்திற்கு வழிபாடாக விஷயானந்தத்தைநிரூபித்தோம் இதை நிரந்தரம் அனுசந்தானம் பண்ணினவன் மோட்சத்தையடைவன்,

விஷயானந்தம்- முற்றிற்று,

ஆக-பஞ்சகமூன்றுக்குப்பிரகரணம்-௰௫,